
# தமிழரசு

திங்கள் இருமுறை . 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-11

# தமிழரசு

மலர் 1 1971 ஜூன் 16 இதழ் 24

## இந்த இதழில்

முகமும் முப்பாலும்

சிங்காரச் சென்னையிலிருந்து
—செந்தமிழ்க் காஞ்சி வரை

துள்ளி வரும் புள்ளி விவரம்

திருவாளர் பொன்மொழியார்

நாளைய தலைமுறை

அன்னை (கவிதை)

சாதனைக்கு உதவுவோம் (கவிதை)

முதலும் முடிவும்

மாம்பழம் உண்ண வந்த
மாஸ்கோ மங்கையர்

வட சென்னையிலே வளரும் படகு

வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இருபத




அட்டையிலே

இரண்டாம் ஆண்டை எட்டிப் பிடிக்கு
'தமிழரசின்' உருவகம்!

## நான்காண்டுகளில் நடைபெற்ற சிறப்புப் பணிகள்

காஞ்சிபுரத்தை இம்மாவட்டத்தின் தலைநகராக்கியது.

வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு $2\frac{1}{4}$ கோடி ரூபாயில் குடிநீர்த்திட்டம், இணைப்புச் சாலைகள் அமைத்தல், ஏரிகளைப் பராமரித்தல், கிணறு, குளங்கள் ஆழப்படுத்துதல், பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், குறுகிய காலத்தில் பயனளிக்கும் வகையில் நடைபெற்றன.

விவசாயத்தில் பின் தங்கியிருந்த மாவட்டத்தைப் பசுமைப் புரட்சித்திட்டத்தின்கீழ், அமோக விளைச்சல் தரும் நெல்வகைகளைப் பயிரிட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறச்செய்து மக்கள் மன நிறைவு பெற வழி வகுக்கப்பட்டது.

எல்லாக் கிராமங்களுக்கும் அரிசன மக்கள் வாழும் எல்லா குக்கிராமங்களுக்கும் மின்வசதி செய்து கொடுக்கப்பட்டு, தமிழகத்திலேயே முதலிடம் பெற்றது இம்மாவட்டம்.

42,000 ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டாவும், குடி மனையற்ற ஏழைகளுக்குக் குடிமனைப் பட்டாவும் வழங்கப்பட்டன.

14 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு அரிசன மக்களுக்குக் குடிமனை வழங்கத் திட்டம் தீட்டப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது.

காஞ்சியில் 25 லட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் ஒரு சரிகைத் தொழிற்சாலை அமைத்தல்.

மாமல்லபுரத்தை அழகிய சுற்றுலா நகரமாக்க 1 கோடி ரூபாய் மதிப்புக்குத் திட்டந் தீட்டப்பட்டுள்ளது.

20,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

கிராமத்திலுள்ள ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு, திருவள்ளூர் ஆகிய இடங்களைத் துணை நகரங்களாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### வேலையற்றோர் பிரச்சினை

வேலையற்றோர் பிரச்சினை இன்று பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உணவுப் பிரச்சனையைப் போல் இதுவும் முக்கியமானதேயாகும். இதற்குத் தீர்வு காண்பதில் மைய அரசும், மாநில அரசும் தீவிரமாகப் பாடுபட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் துவக்கப்பட்டுள்ளது தான் கிராமப்புற வேலை வாய்ப்புத் தீவிரத் திட்டம்.

கிராமப் புறங்களில் ஏழை மக்களிடையே வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்காக மத்திய அரசு கொடுத்துள்ள இத் தீவிரத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டமும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஒன்றியத்திலும் நூறு பேருக்கு இத்திட்டம் மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் நூறு பேருக்கு வருடத்தில் 10 மாதங்



களுக்குக் குறையாமல் வேலை கொடுப்பதற்கு, சம்பளத்திற்கென ரூ. 1 லட்சமும், வேலைக்கு வேண்டிய பொருள்கள் வாங்குவதற்கு ரூ. 25 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும் :—

(அ) கிராமச் சாலைகள் அமைத்தல்

(ஆ) நிலச் சீர்திருத்தம் (ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களின் வளத்தினைப் பெருக்குதல்)

(இ) சாக்கடைகள், கரைகள் கட்டுதல்

(ஈ) குடிநீர்ப் பாதுகாப்பு வேலைகள்

(உ) சிறுநீர்ப்பாசனப் பாதுகாப்பு வேலைகள்

(ஊ) மண் வளப் பாதுகாப்பு


இவ்வாண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில், இரண்டாம் நிலையைத் தாண்டிய 10 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட உள்ளது.


இந்த வேலைவாய்ப்புத் தீவிரத் திட்டத்தினைச் சீரான, பயன்தரும் முறையில் செயல்படுத்த வட்டார அளவில், கோட்ட ஆட்சியாளரைத் தலைவராகவும் ஊர் ஆட்சி ஒன்றிய ஆணையரைச் செயலாளராகவும், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர், தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வட்டார சீரணித் தலைவர் முதலியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வட்டம்பாக்கம் ஊராட்சி எல்லையில் ரூ. 5,000 மதிப்பீட்டில் அமையவிருக்கும் வட்டம்பாக்கம் — பனப்பாக்கம் 3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலை வேலையைத் தமிழக முதல்வர் அவர்கள் இத்தீவிரத் திட்டத்தின்கீழ் மாநிலத்தின் முதல் வேலைத் திட்டமாக மே 16-ஆம் நாள் அன்று துவக்கி வைத்தார்கள். இச்சாலை வேலை 20 பேர்களைக் கொண்டு 65 நாட்களில் முடிக்கப்படும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்கள் ஒவ்வொன்றும் ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டு, பல வேலைத் திட்டங்கள் 10 மாதங்களுக்குள் முடிக்கப்படவிருக்கின்றன. ஆதலால் இத்திட்டம் மூலம் வேலை வாய்ப்புப் பெறும் கிராம மக்கள் 5 மைலுக்கு மேல் வேலை செய்யும் இடங்களை நாடிச் செல்ல வேண்டிய சிரமும் பயணத்திற்காகும் செலவும் தவிர்க்கப்படுகிறது.

யாதொரு நபருக்கும் வேலை கிடைக்காத நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து, குடும்பத்திற்கு ஒரு நபர் விகிதத்தில் வேலை வாய்ப்புக் கொடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். வேலை வாய்ப்புப் பெறும் ஒவ்வொரு நபருக்கும் மாதம் ரூ.100 சம்பளமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.




முதல்வர் எழுதும்
பயணக் கட்டுரை
இனியவை
இருபது

# 18. மின்விளக்கின் தாயகம்

ஏறக்குறைய எழுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய நகரம் எய்ந்தோவன். பதினான்காம் நூற்றாண்டு முதல் சுமார் மூன்று நூற்றாண்டுகள் அவ்வப்பொழுது பகைவர்களின் பலத்த முற்றுகைகளுக்கும் படையெடுப்புகளுக்கும் இலக்காகித் துன்புற்ற நகரம் இது. ஸ்பெயின், பிரான்சு, ஆஸ்திரியா ஆகிய நாட்டினரின் கரங்களில் மாறி மாறித் தவழ்ந்திட்டது இந்நகரம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈராயிரவரைக் கொண்டிருந்த இந்நகரம் இன்று 1,85,000 மக்களின் வாழ்விடமாக இருந்து வருகிறது.

எய்ந்தோவனுக்கு ஏற்றமும் எழிலும் கூட்டுவது பிலிப்ஸ் நிறுவனமாகும். மின்னியல் கருவிகளைத் தயாரிப்பதில் மிகவும் சிறந்து விளங்கும் பிலிப்சின் சாதனைகளைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

1879-ஆம் ஆண்டில் தாமஸ் ஆல்வா எடிசன் முதன்முறையாக மின் விளக்கைக் கண்டுபிடித்தார் என்பது பள்ளியில் நாம் பெற்ற பாடம். விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனை பார் முழுதும் சென்று பரவும் பொருட்டு 1892-ஆம் ஆண்டில் எய்ந்தோவனில் கெராட் பிலிப்ஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பிலிப்ஸ் நிறுவனத்தின் பீடுமிக்க தொண்டும் நம்மால் அறிந்து பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். நாளொன்றுக்கு 350 விளக்குகளைத் தயாரிக்கும் திறனோடு இந்த நிறுவனம் தொடங்கப் பட்டதாம். இன்று இங்கு உருவாகும் மின்விளக்குகளின் வகைமட்டும் நாற்பதாயிரம்! பத்துத் தொழிலாளிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பிலிப்ஸ் நிறுவனத்தில் இன்று உலகம் முழுவதும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டோர் பணி புரிகின்றனர்.

சின்னஞ்சிறு வண்ண விளக்குகள் முதல், பெரிய சாலைகளில் ஒளியை வாரி வழங்குகின்ற பிரகாசமான விளக்குகள்; அழகுச் சாதனங்கள் முதல் அடுக்களைக் கருவிகள்; இன்னும் செவிக்கு நல்விருந்து வழங்கும் வானொலிப் பெட்டிகள் முதல் செவிகேளாரின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஊட்டும் துணைக் கருவிகள் முதலியவை (Hearing Aid) பிலிப்ஸ் நிறுவனத்தாரால் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். தொலைக்காட்சிக் கருவிகளும், மேனாடுகளில் தொழில் துறையில் புரட்சியைப் புகுத்திவிடும் எலக்ட்ரானிக் கருவிகளும், மருத்துவத் துறையின் உன்னத வளர்ச்சிக்கு உதவிடும் கதிரியக்கக் கருவிகளும் பிலிப்ஸ் நிறுவனத்தினரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மின்னியலின் வரவுக்குப் பிறகு, விஞ்ஞானம் அடைந்துள்ள மகத்தானதொரு முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக பிலிப்ஸ் நகர் விளங்குகிறது. ஒளி, ஒலி பற்றிய எல்லாத் துறைகளிலும் ஒப்பற்ற சாதனைகளை ஆற்றிவரும் பிலிப்ஸ் நிறுவனத்தாரிடம் உரையாடும்பொழுது, தமிழகம் முழுவதற்கும் மின் வசதியளிக்கத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை நான் தெரிவித்ததும் அந்நிறுவனத்தின் உரிமையாளர் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

பிலிப்ஸ் நிறுவனத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக ''எவாலுவன்'' (Evoluon) என்ற பெயரில் மிகப் பெரியதோர் கட்டடத்தை உருவாக்கியுள்ளனர். அது பூமியைப்போன்று வட்ட வடிவில் அமைந்துள்ளது. மின்னியலில் மட்டுமல்ல, கட்டடக் கலையிலும் பிலிப்ஸ் நிறுவனத்தார் வல்லுநர்கள் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. அதை பிலிப்சின் சாதனைகளை விளக்கும் கலைக்கூடமாக, காட்சிக்கூடமாக ஆக்கியுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் அதைத் தினம் கண்டு களிக்கின்றனர்.

ஜூலைத் திங்கள் பதின்மூன்றாம் நாள் இரவு மீண்டும் ஆம்ஸ்டர்டாம் நகருக்குத் திரும்பி வந்தோம். மறுநாள் காலை 11-25 மணிக்கு ஆம்ஸ்டர்டாமை விட்டு இலண்டன் மாநகருக்குக் கிளம்பினோம்.

இலண்டன் விமான நிலையத்தை அடைந்தோம். அங்கு அயல் நாட்டுப் பொது நல விவகாரத் துறைச் செயலாளர், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துணை ஹைக்கமிஷனர் திரு வி. சி. மார்டின், ஆசிய ஆஸ்திரேலியக் குழுவின் தலைவர் திரு எஸ். எஸ். ஹார்டர்ன், இந்திய ஹைகமிஷன் அதிகாரிகள், இலண்டனில் வசிக்கும் தமிழ்ப் பெருமக்கள் பலரும் அன்போடு வரவேற்றனர்.

அன்று மாலையில் இலண்டனில் உள்ள இந்தியப் பத்திரிகையாளர்களும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் என்னைச் சந்தித்தனர். இந்தியக் குடியரசின் செய்திகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் இந்தியப் பத்திரிகையாளர்களின் பயன்மிக்க பணியினைப் பாராட்டியதோடு, தமிழகம், இந்தியாவில் நன்கு நிர்வகிக்கப்படும் மாநிலங்களில் ஒன்று என்னும் உண்மையினை வெளியார்க்கு உணர்த்தியுள்ளமைக்காக என் ஆழ்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டேன். அதனைத் தொடர்ந்து சூடும் சுவையும் மிக்க, நுணுக்கமும் ஆழமும் மிக்க, கேள்விக் கணைகளைச் செய்தியாளர்கள் தொடுக்கலாயினர். இந்தப் பேட்டி சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்தது.

கேள்வி : கடந்த இரண்டு வாரங்களாக ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்துள்ளீர்கள். தாங்கள் தொழில், வர்த்தகம் சம்பந்தமாக எந்த வகையான பேச்சு வார்த்தை நடத்தினீர்கள்?

பதில் : நான் ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர் தான்! ஓர் அந்நிய நாட்டுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் எதுவும் இந்திய அரசினால் தான் முடிவு செய்ய முடியும் என்பதை நீங்கள்

யாவரும் அறிவீர்கள். நான் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் மட்டும்தான் நடத்தியுள்ளேன்.

கேள்வி : நீங்கள் ஐ.சி.ஐ.க்குச் (இங்கிலாந்தில் உள்ள முக்கிய இரசாயனத் தொழிற்சாலை) செல்கிறீர்களா ? அப்படி நீங்கள் செல்வீர்களாயின் மணலியில் பெட்ரோ-கெமிகல் தொழிலகங்களைத் துவக்குவதற்கும் இதற்கும் தொடர்பு உண்டா?


பதில் : நான் ஐ.சி.ஐ. செல்வது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. பெட்ரோ-கெமிகல் தொழிலகங்கள் துவக்கும் பிரச்சினை குறித்து நான், இந்தியப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். அது குறித்து ஒரு முடிவு விரைவில் எடுக்கப்படும்.

கேள்வி : தாங்கள் பாரிசில் தொழிலதிபர்கள் சிலருடனும், வங்கி அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விவரங்களைக் கூற முடியுமா ?

பதில் : நான் பாரிசில் வர்த்தகத் தொழிற் கழகத் தலைவரைச் சந்தித்தேன். எங்களது பேச்சு வார்த்தைகள் பொதுவாகவும், பூர்வாங்க அடிப்படையிலும் இருந்தன. குறிப்பிட்ட திட்டம் எதைப் பற்றியும் பேசிடவில்லை.

கேள்வி : இந்திய மாநிலங்கள் சிலவற்றில் நிலையில்லாத அரசு இருப்பது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் ?

பதில் : தேர்தலின் போது எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் மக்கள் பெரும்பான்மை பலம் அளிக்கும் வகையில் வாக்களிக்காதது தான் காரணம்—என்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. கட்சி மாறுதல், கட்சிக்குள் ஏற்படும் பிளவு முதலியன மற்றக் காரணங்களாகும். இதற்குச் சான்றாக எந்தவொரு மாநிலத்தையும் குறிப்பிட்டு நான் விளக்கமளிப்பது முறையாகாது.




எய்ந்தோவன் நகரிலுள்ள பிலிப்ஸ் விளக்கு மாளிகை

கேள்வி : தமிழ் நாட்டில் நக்சல் பாரி இயக்க வளர்ச்சி பற்றி என்ன கருதுகிறீர்கள் ?

பதில் : தமிழ் நாட்டில் நக்சல் பாரிகளின் ஊடுருவல், ஹிப்பிகளின் ஊடுருவலைப் போன்றது. (என்று நான் கூறியதும் நிருபர்கள் அனைவரும் கொல்லெனச் சிரித்துச் 'சிறந்த ஒப்புவமை' என்றனர்).

கேள்வி : தேசியக் கொள்கையை உருவாக்குவதில் தி.மு.க. எந்த அளவிற்குப் பங்கேற்க இயலும் ?

பதில் : தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரசியலில் தி.மு.க.வுக்கு முக்கியப்பங்கு உள்ளது. மொழிக் கொள்கை—மாநிலத்துக்கு அதிக அதிகாரம் ஆகிய பிரச்சினைகளில் அதன் கொள்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இவை சம்பந்தப்பட்ட வரையில் மற்ற மாநிலங்களுக்கு நாங்கள் முன் மாதிரியாக இருக்கின்றோம்; தொடர்ந்து இருக்க விழைகிறோம்.

கேள்வி : எந்தமாதிரி வெளி நாட்டுக் கொள்கையை நீங்கள் ஆதரிப்பீர்கள் ?

பதில் : எங்கள் தலைவர், பேரறிஞர் அண்ணா, பதவிக்கு வருமுன்பே, நாங்கள் வெளி விவகாரக் கொள்கையில் மத்திய அரசிடமிருந்து மாறுபட்டு நிற்கக்கூடாது என்ற நியதியை வகுத்து வைத்துள்ளார். இதுவே எங்கள் கொள்கையாக நீடிக்கிறது.

கேள்வி : மாநிலங்களுக்குச் சுயாட்சி அளிக்க மத்திய ஆளும் கட்சியோ, பிரதமரோ வழி வகுக்கக்கூடும் என்று எண்ணுகிறீர்களா ?

பதில் : யார் பிரதமராக இருக்க வேண்டும், எந்தக் கட்சி ஆட்சியிலிருக்க வேண்டும் என்பதல்ல பிரச்சினை. நாங்கள் கூறுவதெல்லாம் மத்திய அரசிடம் இவ்வளவு அதிகாரங்கள் குவிந்து மாநிலங்களின்மீது ஆதிக்கம் செலுத்தும்படியாக இருக்கக்

கூடாது என்பதுதான். மாநில சுய ஆட்சி மத்திய அரசைப் பலப்படுத்துமே யல்லாது பலவீனப்படுத்தாது.

கேள்வி : மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்கிறீர்களே அதன் பொருளென்ன ? நீங்கள் பொருளாதார அதிகாரங்களைக் குறிப்பிடுகிறீர்களா? ஐரோப்பியப் பொதுச் சந்தையைப் போல இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களா ?

பதில் : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பதை விளக்குவது கடினம்—இது சிக்கல் மிகுந்த பிரச்சினை. இந்திய சுதந்திரத்துக்கு முன்பு அதாவது பாகிஸ்தான் பிரியுமுன்பு—வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, இரயில்வே, தபால் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை மட்டும் மத்தியில் இருந்திட வேண்டும்; மற்றவை மாநிலங்களிடம் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் பிரிந்த பின்பு, அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், இக்கருத்தைக் குறுக்கி, மத்திய அரசிடம் அதிக அதிகாரங்களைக் கொடுத்தார்கள். ஐரோப்பியப் பொதுச் சந்தை என்பது வளர்ந்த நாடுகளின் வர்த்தகச் சங்கம் போன்றதாகும். வளராத நாடுகளை ஐரோப்பியப் பொதுச் சந்தையிலுள்ள உறுப்பு நாடுகளுடன் ஒப்பிடுவது சரியல்ல.

கேள்வி : மற்ற மாநில முதலமைச்சர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறார்களா ?

பதில் : அவர்களுக்கும் அந்த விருப்பமிருக்கிறது. ஆனால் வெளிப்படையாகத் தெரிவிக்க அவர்கள் இன்னும் முன்வரவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. உதாரணமாக மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பது ஒரு சிலரைச் சுதந்திரமாகப் பேச இயலாமல் கட்டுப்படுத்துகிறது.

கேள்வி : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது மத்திய அரசைப் பலவீனப்படுத்தும் என நீங்கள் கருதவில்லையா ?

பதில் : மத்திய அரசைப் பலவீனப்படுத்தாமலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழியொன்று காண முடியும் என்றே நான் நம்புகிறேன்.

கேள்வி : மாநிலங்களுக்குச் சுய ஆட்சி அளிக்க அரசியல் சட்டத்தில் இப்போதுள்ள அதிகாரமே போதுமானதென நீங்கள் கருதவில்லையா ? அப்படியானால் உங்கள் கோரிக்கைக்கு அவசியமென்ன?

பதில் : அவசரப்பட்டு எந்த யோசனையையும் நாங்கள் கூறவில்லை. சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி டாக்டர் ராஜமன்னார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், முன்னாள் தலைமை நீதிபதி திரு சந்திரா ரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். கூடிய விரைவில் இக்குழு தனது முடிவை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நாங்கள் எமது கோரிக்கையை வற்புறுத்துவோம்.

கேள்வி : மாநில சுயாட்சி என்ற உங்கள் கோரிக்கையை ஏற்றால் இந்திய ஒற்றுமை கடுமையாகப் பாதிக்கப்படாதா ?

பதில் : உங்களுக்கு எதிரே சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள பல வண்ண ஓவியத்தைப் பாருங்கள்— ஒவ்வொரு வண்ணமும் தன் தனித்தன்மையுடன் தான் தோற்றமளிக்கிறது. இருந்தாலும் அனைத்தும் ஒருங்கிணைந்து சிறந்த எழிலோவியமாகத் திகழ்கிறது. இது போலத்தான் மாறுபாட்டுக்கிடையே ஒற்றுமை காண முடியுமென நான்நம்புகிறேன்.

கேள்வி : மாநில சுயாட்சிக்குத் தனி முயற்சி தேவையில்லை. நாளாவட்டத்தில் தானே அது வருமென நீங்கள் நினைக்கவில்லையா ?

பதில் : மத்திய அரசை மையமாகக் கொண்ட அரசியல் சட்டத்தில் ஏற்படும் மாறுதல், காட்டாறு போன்று கட்டுப்பாடின்றி இருத்தலாகாது சீரான அருவியைப் போல் இருக்க வேண்டுமென்பதிலேயே மத்திய அரசை நாங்கள் எச்சரிக்கிறோம். விரைவில் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வற்புறுத்துகின்றோம். ஒரே கட்சிதான் பல நூற்றாண்டுகளுக்கு, மத்தியிலும் மாநிலங்களிலும் ஆளும் என்ற அடிப்படையில் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. பல்வேறு மாநிலங்களில் பல வேறுபட்ட கட்சிகளும், மத்தியில் வேறு ஒரு கட்சியும் இப்பொழுது ஆட்சி புரிகின்றன. மத்தியிலும் மாநிலங்களிலும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆளும் நிலைமையை எதிர்கொள்ள நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்வது நல்லது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் போக்கிற்கு இதை விட்டுவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

கேள்வி : பலமான மத்திய ஆட்சியே நாட்டின் ஒற்றுமையையும் நன்மதிப்பையும் காக்கும் என்று வரலாறு கூறுகிறதே, உங்கள் யோசனை, ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்காதா?

பதில் : பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், செய்தித் தொடர்பு என்றஒருசில குறிப்பிட்ட காரியங்களுக்காகவே பலமான மத்திய ஆட்சி தேவை. இதனால், மாநிலங்களுடைய முழுவளர்ச்சிக்குத் தேவையான அதிகாரம் இருக்கக்கூடாது என்று பொருளல்ல !

கேள்வி : சென்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற உங்கள் கட்சியில் பிற்போக்குவாதிகள் நுழையாமல் தடுக்க நீங்கள் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

பதில் : கார்குழலாள் கையில் சீப்பு இருக்கும்போது தன் கூந்தலிலே பேன் நுழைய விடுவாளா!

கேள்வி : மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டை தி. மு. க. நடத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்குமல்லவா?

பதில்: உங்கள் யோசனை ஏற்கப்பட்டால் அது கழகத் தமிழ் மாநாடாக இருக்குமே தவிர உலகத் தமிழ் மாநாடாக இருக்காது.

என் நினைவைவிட்டு என்றும் நீங்கிடாத பத்திரிகையாளர்களின் சந்திப்பிற்குப் பின்னர் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டேன்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எமது அண்ணன் நடத்திவைத்த பாங்கினை எண்ணி உளம் கனிந்தேன். அவர், அவருக்கே உரித்தான புன்முறுவல் பூக்கும் முகத்துடன் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பில்லையே என்று எண்ணிய பொழுது என் கண்களில் நீர் மல்கியது.

ஆம்!

இதற்கு முன்னால் பாரிசுக்குச் சென்றபொழுது அதன் வனப்பையும் வளர்ச்சியையும் காணச் செல்லும் பார்வையாளனின் உணர்வே மிகுந்திருந்தது.

ஆனால், இம்முறையோ, உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இடமான பாரிசிற்கு அதனைத் தொடங்கி வைக்கும் பேறுபெற்ற தமிழனாகச் சென்றேன்.

விமானம் மேலே....மேலே ....மேலே....பறந்தது.

என் இதயமோ அதற்கும் மேலே பறந்தது. அது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் பரந்த, வெளியில் பறந்தது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் ஞான வெளியில் பறந்தது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்னும் பெருமையுடன் பறந்தது. ''இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல் அமுது'' என்னும் கீதமிசைத்துப் பறந்தது.

உமிழ்ந்தசிறு பருக்கையினால்
உயிர்வாழ் வோரும்
உரமிழந்து சாக்காட்டை
நண்ணு வாரும்
தமிழென்று தமிழரென்று
சிறிது தொண்டு
தாம் புரிவார்; அவர் பெருமை
அரசர்க் கில்லை

என்னும் புதுவைப் புரட்சிக் கவிஞரின் முழக்கம் என் நினைவில் ஒலித்தது.

ஆடம்பரத்தின் இருப்பிடம் எனக் கருதி உலகத்து மக்கள் நித்தமும் கூடுகின்ற பாரிஸ் மாநகரத்து மண்ணில் ஜூலை 15-ம் நாள் நந்தமிழின் நறுமணமும் வீசலாயிற்று.

மாநாட்டிற்குப் பேராசிரியர் பில்லியோசா தலைமை தாங்கினார். யுனெஸ்கோ நிறுவனத்தின் தலைமை இயக்குநர் திரு. மால்கம் ஆதிசேஷையா, தமிழக அன்றைய நிதியமைச்சர் எனது அன்புச் சகோதரர் திரு மதியழகன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.


நான் என்னுடைய தொடக்க உரையில் எனது சொந்த விழியினும் மேலாகத் தமிழ் மொழியை மதிக்கிறேன் என்ற உணர்வோடு, இந்த மாநாட்டை நான் வரவேற்கிறேன் என்றேன். அப்படிப்பட்ட இந்த மாநாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறேன். நான், எனது குழந்தைகள் மழலைத் தமிழ் பேசுவதைக் கேட்டு வெகு நாட்களாயிற்று. ஆனால், திரு ஆதிசேஷையா அவர்களது தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்டதும் எனக்கு அந்த நினைவுதான் வந்தது.

தமிழில் பேசுவதன்மூலம் ஒரு பெரிய துணிச்சலான மாற்றத்தைச் செய்துகாட்டியமைக்காக, திரு ஆதிசேஷையா அவர்களைப் பாராட்டுகிறேன்.

பிரெஞ்சுப் பண்பாடானது தமிழ் நாட்டில் தனது செல்வாக்கை ஊடுருவிப் பரவவிட்டதாகச் சொல்ல முடியாது என்றபோதிலும், கடந்த நூற்றாண்டுகளில் தமிழர்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் பிரெஞ்சுப் பண்பாடு அறிமுகமானது என்பதை இந்த அனைத்துலக மாநாடு அறிவுறுத்துகிறது.

தமிழின் வளர்ச்சியில் பிரான்ஸ் கொண்டுள்ள ஆழ்ந்த நாட்டம், தமிழ்—பிரெஞ்சு அகராதி ஒன்றை வெளியிட்டதன்மூலம் காட்டப்பட்டுள்ளது.

விஞ்ஞானத்தில் பிலிப்ஸ் நிறுவனத்தின் பங்கினை நன்கு எடுத்துக் காட்டும் எவாலுவான் காட்சிக் கூடம்



அண்மையில், சின்னுட்களுக்கு முன் ''வெர்சேல்சு'' க்குச் சென்றிருந்தேன். அங்கே, பிரான்சு—தமிழக உறவுகளைக் காட்டும் பொருள்களைக் காண விரும்பினேன். இந்தியாவுக்கு நூப்ளே எடுத்துச் செல்ல விரும்பியதும், ஆனல் மாறிவிட்ட சூழ்நிலையால் அவ்வாறு எடுத்துச் செல்ல முடியாமற்போனதுமான ஒரு கடிகாரத்தை எனக்குக் காட்டினுர்கள். காலம் மாறிவிட்டது. எனவே அந்தக் கடிகாரம் வெர்சேல்சிலேயே இருக்கிறது.

நான் சென்ற வாரத்தில் பாரிசுக்கு வந்திருந்தபோது, இங்குள்ள இந்திய மாணவர்கள் என்னை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தனர். அந்த மாணவர்களிலே ஒருவர், பாரிஸ் நகரை ஏதோ பழந்தமிழ்ப் பெருவீரன் பாரியினுடையது என்பதுபோல் ''பாரி நகர்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்துள்ள தூதுக் குழுவில் பதினெட்டுப் பேர் உள்ளனர். ஆனல், அவர்கள் நான்கு கோடித் தமிழர்களின் பிரதிநிதிகள். இந்த முறையில், இந்த மாநாட்டில் வீற்றிருக்க எனக்கும் தூதுக் குழுவிற்கும் கடமையும் உரிமையும் உண்டு.

தமிழ், உலகின் பல பகுதிகளில் பரவியுள்ளது. தமிழர்கள் உலகெங்கும் சென்றுள்ளார்கள். ஆனல், தமிழ் மொழி—உதாரணமாக மொரிஷியஸ் தீவில் மறைந்து வருகிறது. இன்னும் வேறு சில நாடுகளிலுள்ள தமிழர்களும், தம் தாய் மொழியை மறந்துவிடக்கூடிய அபாயத்திலுள்ளனர். இந்த மாதிரியான நிலைமை தொடர்ந்து நிலவ அனுமதிக்கக்கூடாது.

தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம், தமிழைக் கற்பதற்கான வாய்ப்பிற்கும் தமிழ னேடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பிற்கும் வகை செய்யப்பட வேண்டும்.

மொழிப் பிரச்சினைமீது கவனம் செலுத்துவது தவருே குற்றமோ ஆகாது என்பதை, அண்மையில் நான் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைப் பார்த்தபோது கண்டேன்.

சுவிட்சர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் தாய்மொழிப் பிரச்சினை, பிறதேசியபிரச்சினைகள் எதற்கும் குறையாத இடத்தைப் பெற்றுள்ளது. வரலாற்றுக்காலம் தொட்டு ஆழ்ந்த புலமை பெற்றது தமிழ் மொழியாகும். அது ஒரு செழுமையான மொழி. பாரதி போன்ற கவிஞர்கள் அதன் பெருமையைப் பாடியிருக்கிருர்கள்.

ஆனல், அந்தத் தொல் புகழையே போற்றிக்கொண்டு ஓய்ந்திருக்கக் கூடாது. சிந்தனைகளை உணர்த்தவும், விஞ்ஞான வளமிக்க — விண்வெளிப் பயணம் நடத்துகிற நவீன காலத்தின் செய்திகளைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற கருவியாய், வாகனமாய்த் தமிழ் மாறவேண்டும் என்பதனை நாம் உணரவேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல், மருத்துவம் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற பயிற்று மொழியாய் வளர்ந்தாக வேண்டும்.

தமிழ் வளர்வதற்காகத் தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே மாணவர்களைப் பரிமாறிக் கொள்வது அவசியமாகும். வேற்று மொழிகளின் தொடர்பால் தன்னுடைய தனித்தன்மை கெடாமல் தமிழ் செழுமைப்படுத்தப்படலாம்!

ஆங்கில—தமிழ் நவீன அகராதி ஒன்றை உருவாக்குதலும் அவசியமாகும். இந்த அகராதி மிகச் சிறந்ததாய் அமைய வேண்டுமெனின் மூன்று இலட்சம் சொற்களுக்குப் பதில் குறைந்த பட்சம் ஆறு லட்சம் சொற்களேனும் இடம் பெற்றிடவேண்டும். அப்போதுதான் தமிழ் உண்மையான ஒரு நவீன மொழியாக முடியும்.

இங்கே, நீங்கள் தமிழ்நாட்டுத் தூதுக் குழுவினரைப் பார்க்கிறீர்கள். அவர்கள், மருத்துவ மனைக்குத் தம் குழந்தையை எடுத்து வந்திருக்கிற பெருமிதமான தாயைப் போன்றவர்கள். அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்களையும், அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் போன்றவர்கள் இங்கே கூடியுள்ள தமிழறிஞர்கள். அவர்கள் குழந்தைக்கு (தமிழுக்கு) முழு ஆரோக்கியத்தையும் தர முயல்கிருர்கள்.

இப்படிப்பட்ட கடுமையான அறுவைச் சிகிச்சைகளுக்கெல்லாம் குழந்தை இரையாகலாமா என்று எண்ணி, அந்தச் சிகிச்சையைத் தடுக்கக்கூடாது தாய். அது, தாய்மை அன்பைக் காட்டுவதாகாது. அதேபோல் அறுவைச் சிகிச்சைக்காரர்களும் கண்டபடி தம் கத்தியை ஓட்டக்கூடாது. தமிழ் வல்லுநர்களும், ஆராய்ச்சியாளர்களும், ஆராய்ச்சி செய்துவிட்டு அத்தோடு தம் பணிமுடிந்ததென்று எண்ணி விடக் கூடாது.

இந்த மாநாடு, மூன்று பணிகள்மீது கவனம் செலுத்த வேண்டும். முதலாவதாக, உலக நாடுகளுக்கும், தமிழ் நாட்டுக்கு மிடையே மாணவர்கள் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவதாகத், தமிழை ஒரு நவீன மொழியாக்கும் வண்ணம் ஆங்கில — தமிழ் அகராதியைத் தயாரிக்கும் பணியிலிறங்க வேண்டும். மூன்ருவதாக, உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழைப் பரப்பவும் வளர்க்கவும் வழிவகை செய்ய வேண்டும். இந்தப் பணிகளில் மறைந்த அண்ணுவின் அடியொற்றி நடக்கும் எமது தமிழ் நாட்டு அரசு இயன்ற எல்லா உதவிகளையும் செய்யும் . . .

என்று நான் பேசி முடித்த பொழுது எழுந்த கையொலி அடங்கிட பல நிமிடங்கள் ஆயின.

(தொடரும்)



குரங்கினை ஆட்டி ஏற்பார் ;
குழந்தையைக் காட்டிக் கேட்பார் ;
சிரந்தனில் செந்நீர் பாய்ச்சிச்
சிந்தையை நெகிழச் செய்வார் ;
கரங்களைக் குவிப்பார் ; பல்லைக்
காட்டியே 'முருகா' என்பார் ;
தரங்கெடப் பிச்சை ஏற்பார்
தன்மையைப் பேச லாமோ

குட்டநோய் கையைக் காட்டிக்
'கொடுத்திடும் காசிங்' கென்பார் ;
பட்டையாய் நீற்றைத் தீட்டிப்
பக்தராய் நடித்துக் கேட்பார் ;
சுட்டிடு வெயிலில் வீழ்ந்து,
தோளெலாம் நாமம் போட்டு,
'விட்டலே! ராமா' என்றே
வீதியில் புரண்டே ஏற்பார்.

"குடுகுடு நல்ல காலம்
கோடிவீட் டம்மா வுக்கு !
எடுஎடு துணியும் காசும்
இல்லையேல் மாரி யம்மன்
படுதுயர் செய்வாள்" என்றே
பணத்தினைப் பறிப்பா ருண்டு
'விடுவிடு துன்ப மெல்லாம்
வெருட்டுவன் பேய்கள்' என்பார்.

'பும்பும்' என முழக்கிப்
பொதிசுமை எருதைக் காட்டிக்,
கொம்பினை நீட்டி நம்மைக்
கும்பிடச் செய்வா ருண்டு.
வம்புசெய் குறத்தி வந்து
'வருவதைச் சொல்வோ' மென்றே
நம்பையில் காசைக் கொள்வார்
நாட்டினுக் கிழுக்கீ தன்றே!

'ஆவிற்கு நீரென் றி'ங்கே
அன்புடன் இரப்பும் தீது!
பாவினை யாத்துப் பின்னர்
பணத்தினை இரத்தல் தீது
ஏவிடும் வறுமை போக்க
ஈயென இரத்தல் புன்மை
நாவினுக் கிரத்தல் போல
நாணிடும் செயல்வே றுண்டோ!

வீதியில் இரப்போ ருக்கு
வேண்டிய தொழில்கள் நல்கி
ஓதிடும் விடுதி நாட்டி
உடையுடன் உணவும் தந்தே
நீதிசார் மக்க ளாக
நிலவிடச் செய்யும் மேலாம்
சாதனை வெற்றி எய்தத்
தமிழர்நாம்! உதவு வோமே!



# கவின் மிகு நகர் — கலைஞர் கருணாநிதி நகர்

சிங்காரச் சென்னை அழகிலும் அளவிலும் வளர்ந்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். தமிழ் நாட்டின் தலைநகரம் எந்த வகையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது கலைஞர் கருணாநிதி நகர் !

சமன் செய்யப்பட்ட மேட்டு நிலம், அகலகலமான சாலைகள், அசுத்தத்துக்கு இடமில்லாத விதத்தில் புதை சாக்கடை, மின் சாரம், இனிய நீர் வசதி, நாளைக்கு நிழல் கொடுப்பதற்காக விரைந்து வளர்ந்து கொண்டிருக்கும் நிழல் மரக் கன்றுகள், பூங்கா, பள்ளி, பொதுக்கூடம் ஆகிய அனைத்துக்கும் இடம்தந்து, இணைந்து வளர்ந்து வருகின்ற சென்னை சுற்றுப் புறப் புத்தூர்கள்—புது நகரங்கள்—மக்களின் விருப்பத்துக்கு ஏற்பப் புதுப் பெயர்களையும் புனைந்து கொண்டு வருகின்றன.

### புத்தூர்கள் பல....

தென் சென்னையில் நகரம் வளரத் தொடங்கி ஊரூர் புதூர் ஏற்பட்டதையடுத்து, அப்பகுதி இந்திரா நகர், சாஸ்திரி நகர் என்ற பெயர்களைப் பெற்றது. மேற்குச் சென்னைப் புதூர், கோடம்பாக்கம் புதூர் என்ற பெயரில் தொடங்கி, அசோக் நகர் என்று பெயர் பெற்றது. மொத்தம் மூன்று பெரும் திட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய கோடம்பாக்கம் புதூர்த் திட்டத்தில் இரண்டாவது பிரிவில் உள்ள நகரம் தான் கலைஞர் கருணாநிதி நகர்என்று பெயர் பெற்றுள்ளது. வடமேற்குச் சென்னையில் அனைத்துலக வர்த்தகப் பொருட்காட்சி நடந்த பகுதி, அறிவுலக மேதை அறிஞர் அண்ணாவின் பெயரைச் சூடிக்கொண்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முனைப்பினால், கோடம் பாக்கம் புதூர் திட்டத்தின் அடுத்த கட்ட வேலைகள் விரைந்து நிறைவேறி வருகின்றன. கலைஞர் கருணாநிதி நகர் என்று புதிய பெயரினைப் பெற்றுள்ள கோடம் பாக்கம் புதூர் இரண்டாம் பிரிவுப் பகுதி மொத்தம் 750 ஏக்கர் பரப்புள்ளது. இதன் வளர்ச்சிக்கெனத் திட்டமிடப் பட்டுள்ள தொகை 4 கோடியே 46 லட்சம் ரூபாயாகும். சற்றேறக் குறைய 6,000 குடும்பங்கள், சுமார் 30,000 பேரிலிருந்து 50,000பேர் வரை மக்கள் இங்கு வாழக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நகரில் மொத்தப் பாதைகளின் நீளம் 21 மைல்களாகும். 40 அடியிலிருந்து 120 அடிவரை அகலம் உள்ள பாதைகள் மட்டும் 11 மைல்கள். இவற்றுக்கு மொத்தம் சுமார் 34 லட்சம் ரூபாய் செலவாகும். அநேகமாக எல்லாப் பாதைகளும் போடப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன. சமன் செய்தல், தெரு விளக்கு வசதி, பாதை ஓரங்களில் மரங்கள், சாக்கடைப் போக்கிகள் ஆகிய வகையில் ரூ. 1 கோடியே 55 லட்சம் செலவிடத் திட்டமிட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கலைஞர் கருணாநிதி நகர் திறப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா.




### சேர்ந்து வாழும் சிறப்பு

எல்லா விதமான வசதிகளும் மேம்பாடுகளும்பெற்றுள்ள இந்த நகரின் ஒரு தனிச் சிறப்பு, இது செல்வந்தர்கள், வசதி வாய்ந்த

வர்கள் ஆகியோருக்கு இடம் தரும், அதே நேரத்தில் நடுத்தர வருமானப் பிரிவினர், குறைந்த வருமானக் காரர்கள், தொழில் வினைஞர்கள், குடிசை வாழ் மக்கள் ஆகிய பல்வேறு பிரிவினருக்கும் வாழ இடம் அளிக்கிறது என்பதாகும். சமுதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் உள்ள மக்கள் சேர்ந்து வாழும் நிலை இதில் குறிப்பிடத் தக்க சிறப்பு.

நடுத்தர வருமானப் பிரிவினருக்காக இந்த நகரில் 500 குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர மாதத் தவணை முறையில் தருவதற்காக 216 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 220 குடியிருப்புகளுக்கான வேலைகள்விரைவில் தொடங்கும்.

குறைந்த வருமானப் பிரிவினருக்காக 660 வீட்டு மனைகள் ஒதுக்கிச்செப்பனிடப்பட்டு விலைக்குக் கொடுக்கப்படஇருக்கின்றன. இத் திட்டத்தில் 96 குடி யிருப்புகள் கட்டப்பட்டு, ''சொந்தமாக்கும் திட்டப்படி'' வழங்கப்பட்டுள்ளன.

## சீரான குடிசைகளும் உண்டு

தொழில் வினைஞர்கள், குடிசை வாழ் மக்களுக்கென்று 40 × 22 அளவில் 2,360 மனைகள் இங்கு மாதத் தவணை முறைத் திட்டப்படி விலைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குடிசை வாழ் மக்கள் மாதாமாதம் சிறுதொகை செலுத்தித் தங்களுக்கான இடத்தை உரிமையாகப் பெறலாம். இப்படிப் பெற்ற மனைகளில் வீடுகள் கட்டி, சிலர் குடித்தனம் வந்திருக்கிறார்கள். இன்னும் வீடு கட்டாமல் இருப்பவர்களுக்காகக்குறைந்தசெலவில்வீடு கட்டி வழங்கக் ''குடிசைமாற்று வாரியம்'' ஒரு திட்டம் தயாரித்துள்ளது. சின்னஞ்சிறு வீடுகள் என்றாலும் பல்வேறுவகைப்பட்ட இருபது விதமான கட்டட அமைப்புகளில் மொத்தம் 200 வீடுகளைக் கட்டுவதென்று இந்த ஆண்டில் வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்திருக்கிறது.

## பலமாடிக் குடியிருப்புகள்

வீட்டு வசதி வாரியம், இது வரை கலைஞர் கருணாநிதி நகர்ப் பகுதியில் 281 அடுக்கு வீடு வகை குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இது வரை 40 × 22 அளவில் 280 மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் 300 குடும்பங்களுக்கு அடுக்கு வீடு வகை குடியிருப்புகள் கட்டுவதென்று குடிசை மாற்று வாரியம் திட்டமிட்டிருக்கிறது.

தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம் தனது திட்டங்களுக்காக மட்டுமின்றி மத்திய அரசுப் பொதுப் பணித் துறை, ஆயுள் காப்பீட்டு நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி, தபால் தந்தித் துறை ஆகியவைகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கான வீட்டு வசதிக்கென்றும் இடம் ஒதுக்கியுள்ளது. இவர்களுக்காகப் பல மாடிக் குடியிருப்புகள் ஆங்காங்குக் கட்டப்பட்டு வருகின்றன.

## கவின்மிகு நகர்

இப்பகுதியில் உயர்நிலைப் பள்ளிகள், பெரிய மருத்துவமனைகள், தொழிலாளர்களுக்காக அரசாங்க இன்சூரன்ஸ் மருத்துவமனை, காவல் நிலையம், சமுதாயக் கூடம், பூங்காக்கள் ஆகியவைகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுத் திட்டங்களும், தயாரிக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய அங்காடி ஒன்றை ஏற்படுத்தவும் எண்ணம் உண்டு. மொத்த வியாபாரிகள் தங்கள் சரக்குகளை இங்கே வைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் சென்னை நகருக்குள் இன்றுள்ள நெரிசலைத் தவிர்க்கவும் முடியும்.

கிராமப் பகுதிகளுக்குரிய எளிமையும் எழிலும், நகரப் பகுதிகளுக்குரிய வசதிகள் பலவும் கொண்டு, திட்டமிட்ட முறையில் கவின் மிகு நகரமாக வளர்கிறது, கலைஞர் கருணாநிதி நகர்! புதிய நகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு இது முன்னோடியாக விளங்கினால் அதில் வியப்பில்லை!



## வழிகாட்டும் தமிழ் நாடு

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் துவக்கப்பட்ட சீரணியைத் தொடக்கத்தில் பலர் எதிர்த்தார்கள்—சீரணியைக் குறைகூறத் தொடங்கினார்கள். சீரணி பற்றித் தப்புக் கணக்குப் போட்டார்கள். ஆனால், சீரணியோ செம்மையான அணி என்பதைத் தனது சீரிய தொண்டினால் மெய்ப்பித்து வந்தது. இன்று, அதன் புகழ் திக்கெட்டும் பரவி வருகிறது. மைய அரசே, நமது சீரணியின் பெருமையை உணர்ந்து அதுபோன்ற அணியை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த எண்ணிச் சீரணி பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நமது அரசுக்கு அண்மையில் கடிதம் எழுதியிருக்கிறது.

ஒவ்வொரு துறையிலும் பிற மாநிலத்துக்கு வழிகாட்டியாக விளங்கும் தமிழ்நாடு—சீரணியிலும், பிறருக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பதில் வியப்பென்ன இருக்கிறது!




அழகிய முகம்வேண்டுமென்று ஆசைப்படாதார் உண்டா? ''அழகிய முகம் மிகச் சிறந்த ஒரு பரிந்துரைக் கடிதம்'' (A good face is the best letter of recommendation) என்றார் இங்கிலாந்து நாட்டு அரசி முதலாம் எலிசபெத். முகத்தின் பொலிவு, அகத்தோடு-மனத்தோடு-தொடர்பு கொண்டது. முகத்தைப் பார்க்கக் கண்ணாடி உண்டு. அகத்தைக் காண ஆடி உண்டா? உண்டு. அதுவே முகம். அகத்தில் உள்ளதைப் படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் முகத்துக்கு உண்டு. ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது முதுமொழியல்லவா!

உடலின் அக உறுப்புக்களைப் படம் பிடித்துக் காட்ட எக்ஸ் கதிர்கள் உண்டு. அக் கதிர்கள் கொண்டு எடுக்கப்படும் படங்களில் உள்ளுறுப்புக்களின் உருவ அமைப்பு மட்டுமே தென்படும். உள்ளம் மகிழ்வோடு இருக்கிறதா, வருத்தத்தில் ஆழ்ந்திருக்கின்றதா என்பன போன்ற தன்மைகளை எடுத்துக்காட்ட எக்ஸ் கதிர்களால் முடியாது; ஆனால் முகம் காட்டிவிடும். நெஞ்சத்தின் இருப்பை அறிவிக்கும் ஐந்தொகைக் குறிப்பு ( Balance Sheet ) முகமே.

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.**

**(குறள் 706)**

தன்னையடுத்த பொருளைக் கண்ணாடி தன்னுள் காட்டும். அதுபோல ஒருவர் மனத்தில் எழும் கருத்தை அவருடைய முகம் காட்டிவிடும். பளிங்கு, வெளியில் உள்ள பொருளை உள்ளடக்கிக் காட்டுகிறது ; முகம் உள்ளடங்கியதை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

நெஞ்சுக்கும் முகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. முகத்திற்குத் தெரியாது எதையும் நெஞ்சில் மறைத்துவைக்க முடியாது. நெஞ்ச வீட்டிற்கு முகம் ஒரு கண்ணாடிக் கதவு ; உள்ளே உள்ள பொருள்களைத் தெளிவாக, மறைவின்றிக் காட்டிவிடும். முகம் தவிர்த்த மற்ற உறுப்புக்களால் ஒருவருடைய உள்ள நிலையை வெளிப்படுத்திக் காட்ட முடியாது. ஒருவன் கையைக் கொண்டோ அல்லது காலைக் கொண்டோ அவன் மகிழ்வோடிருக்கிறானா என்பதைக் கண்டுபிடிக்க இயலாது ; முகமோ தன் மலர்ச்சியால் அதனை வெளிப்படுத்திவிடும். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற உணர்ச்சிகளை மெய்ப்படுத்திக் காட்டும் நிலைக் களமாக அமைந்திருப்பது முகமே. அகத்தின் நிலையை முன்னுரைப்பது முகம்போல வேறில்லை. எனவேதான் முகத்தைவிட அறிவில் மிக்கது எதுவும் இல்லை என்கிறார் வள்ளுவப் பெருந்தகையார்.

**முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

**(குறள் 707)**

நெஞ்சில் தோன்றும் சீற்றம், வெறுப்பு, பொறாமை, செருக்கு, எரிச்சல், ஏளனம், வேதனை, நடுக்கம் ஆகிய உணர்வுகளாயினும் சரி ; எக்களிப்பு, தன்னிறைவு, பாசம், இச்சை, பணிவு



16-6—4

ஆகிய பண்புகளாயினும் சரி அவற்றைத் தக்காங்கு வெவ்வேறு தோற்றங்களால் முகம் புலப்படுத்திக் காட்டிவிடுகிறது. பேச்சு, எழுத்து மொழிகள் நாட்டுக்கு நாடு மாறுபட்டுள்ளன. நெஞ்சக் கருத்துக்களை அறிவிக்கும் முகமொழியோ உலகம் முழுமைக்கும் பொதுவாய்-உலகளாவியதாய் உள்ளது. பேசும் மொழி புரியாவிட்டாலும் ஒருவருடைய முகத்தைக்கொண்டு அவர் உள்ள நிலையை அறிந்து கொள்ள முடியுமல்லவா?

திருவள்ளுவர் அறத்திற்குக் கூறும் இலக்கணம் மிகவும் சிறப்பானது. மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே அறம் என்பது அவர் கொள்கை. மனம் தூய்மையாகும்போது தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும்; அகந்தை அழிந்து அன்பு தழைக்கும். எனவேதான் மனமாசற்ற தன்மையை அறமாகக் கொள்ளுகிறார் திருவள்ளுவர். உள்ளத்தில் பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காது காத்தலே அறமாகும் என்பார் அவர். இக் குற்றங்கள் இல்லாதபோது உள்ளம் மாசுமறுவற்று விளங்கும்; அங்கு இன்பம் ஊற்றெடுத்துப் பெருகும். அகத்திலூறும் அவ்வின்பப் பெருக்கினை முகம் வெளிப்படுத்திய வண்ணமிருப்பதால் அருளாளர்களின் முகங்கள் எப்போதும் மலர்ச்சியாகவே காணப்படும். உள்ளம் தூய்மையாக இருப்போர் உரைக்கும் உரையில் இனிமை தவழ்கிறது; செய்யும் செயலில் அறம் விளைகிறது. இக் கருத்துக்களை உள்ளடக்கியதாய், வள்ளுவர், ஒருவரைக் கண்டபொழுதே முகமலர்ச்சியோடு, விரும்பி, இனிதாக நோக்கி, பின் நெருங்கிய விடத்து அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுதலே அறமென்பார்.

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

(குறள் 93)

அகமலர்ச்சி அருளைச் சுரந்து ஈகையைத் தோற்றுவிக்கும். முகமலர்ச்சி இன்சொல்லை விளைவிக்கும். ஈகையிலும் இன்சொல்லே நன்று என்பது திருவள்ளுவர் கருத்து.

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

(குறள் 92)

விருந்தோம்பல் ஒரு சிறந்த அறப்பண்பு. விருந்தினர்கள் வீட்டிற்கு வரும்பொழுது 'முகனமர்ந்து' வரவேற்க வேண்டும். குளிர்ந்த நோக்கு அவர்களை மகிழச் செய்வதாகும். வரவேற்போரின் திரிந்த நோக்கு விருந்தினரை வருத்திவிடும். அனிச்சம் மிகவும் மென்மையான பூ; எடுத்து முகரும் போதே குழைந்துவிடும். அப் பூவை வீட மென்மையானது விருந்து. எவ்வாறு? அனிச்சம் நோக்கும் போது குழைவதில்லை. முகரும் போதுதான் குழைகிறது. விருந்தோ நோக்கும்போதே குழைந்து விடும். விருந்தின் மென்மையை வரவேற்போரின் முகம் பேணிக் காக்கவேண்டும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(குறள் 90)

இக் குறளின் கருத்தை இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் அழகுற எடுத்தாண்டுள்ளார். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெறுகிறது. பரத்தையர் வீடு சென்ற ஒருவன் தன்னகம் திரும்புகின்றான். "நம் நடத்தையறிந்து மனையாள் வெகுண்டிருப்பாளே! அவளுடைய கயற்கண்கள் கனல் வீசிச் சினந்திருக்குமே! அவள் முன் எவ்விதம் போய் நிற்பது?" என்ற எண்ணம் உள்ளத்தில் ஓடுகிறது. மனைவியின் வெகுளியைக் களைய வழியொன்று தேடுகிறான். விருந்தினர் ஒருவரை அழைத்துக்கொண்டு வீடு செல்கிறான். மனைவியின் நிலையென்ன? கணவன் மீதுள்ள வெகுளியால் முகம் மாறுபடின் வந்த விருந்து குழைந்துவிடும்! என் செய்வாள்? விழிக்கடையில் தோன்றி நின்ற சிவப்பு எங்கோ மறைகிறது; கனல் வீசும் கண்களில் கனிவு தோன்றுகிறது. முகமலர்ச்சியோடு விருந்தை வரவேற்கிறாள். அதையே தனக்கும் அழைப்பாகக்கொண்டு கணவனும் உள்ளே நுழைந்துவிடுகிறான். கணவனின் தகாத நடத்தையால் தோன்றிய வெகுளியையும் விரட்டிக் கனிவைத் தோற்றுவிக்கும் ஆற்றல் விருந்துக்கு உண்டு.

". . . . . மனையுறை மகளிர்
மாதர்வாள் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்தில தாயின் யாவதும்
மருந்தும் தரும்கொல் இம்மாநில வரைப்பென்."

(சிலப்பதிகாரம்—இந்திர விழவூரெடுத்த காதை
வரிகள் 229-233.)

முகன் அமர்ந்து விருந்தோம்ப வேண்டுவதன் முக்கியத்துவத்தை இது நன்கு உணர்த்துகிறது. இங்ஙனம் விருந்தோம்பும் ஒருவனுடைய இல்லத்தில் செழிப்பு நிறையும். அவன் வீட்டில் திருமகள் விரும்பி உறைவாள் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

(குறள் 84)

காண வருபவர்க்கு அரியனும், ஒருகால் கண்டு தம் குறையைச் சொன்னாலும் வெறுப்புக் காட்டுகின்ற முகத்தையுடையவனுமான ஒருவனுடைய செல்வம், பூதம் காக்கும் பொருளைப் போலத் தனக்கும் பிறர்க்கும் உதவாது ஒழியும்.

அருஞ்செல்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து.

(குறள் 565)

காட்சிக்கு எளிமையும், இனிய நோக்கும், கண்ணோட்டமும் வேண்டுமென்பதை இக்குறள் மிகவும் வலியுறுத்துவதை அறியலாம்.

கொடுப்பவனின் செல்வம் கொடுப்பவனுக்கும், பெறுபவனுக்கும் ஒருசேர மகிழ்ச்சியை அளிக்கிறது. ஒருவர் இரந்து நிற்கும்போது அவர் நிலை, காண்போர்க்குத் துன்பத்தைத் தருகிறது. இல்லாது இரப்பதால் அவருக்குத் துன்பம்; அவருடைய கவலை கண்டு காண்போர்க்குத் துன்பம். இத் துன்பம் எதுவரை? கொடுக்கும் வரைதான்.

இரந்ததைக் கொடுத்ததும் பெறுபவர் முகம் மலர்கிறது. அவருடைய துன்பம் நீங்கியதைக் கண்டு கொடுப்பவரின் முகமும் மலர்கிறது. துன்ப முகங்கள் இன்ப முகங்களாகின்றன.

**இன்னுது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு.**

(குறள் 224)

முகத்தில் குறிப்பறியும் அறிஞர்கள் முன்னே சென்று நின்ருலே போதும் எதையும் வாய்விட்டுப் பேசவேண்டியதில்லே. முகத்தைப் பார்த்தவுடனேயே அகத் தேவையை அறிந்து ஆவன செய்வார்கள். முகத்தைக் கொண்டே அகத்தை நோக்கி அங்கு 'உறுவதை' உடனடியாக உணர்ந்து விடுவார்கள்.

**முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின்.**

பொதுவாக முகம் அகத்தைக் காட்டுமாயினும், சிலர், முகத்தில் அகத்தை மறைக்க முயல்வதுண்டு. 'இவர் சரியான அழுத்தக்காரர். முகத்திலிருந்து எதையும் அறியமுடியவில்லேயே' என்ற சொற்களேச் சில வேளேகளில் நாம் கேட்கிருேம். அகத்திலே வெறுப்பைக் கொண்டு அதை முயன்று மறைத்து முகத்திலே களிப்புப் பொங்க நடிப்பவரும் உண்டு. அவர்கள் வஞ்சகர்கள். ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களில் மாக்பெத் ஒன்று. அதில் மாக்பெத்தின் மனேவி தன் கணவனேத் தீமை செய்யத் தூண்டும் போது 'முகம் மலரைப் போல் முறுவலிக்கட்டும். உள்ளமோ, மலரடியில் நெளியும் நச்சரவாக இருக்கட்டும்' (Look like the flower but be the serpent under it) என்கிருள். இத்தகைய வஞ்சகர்கள் தோற்றத்தால் பிறரை ஏமாற்றித் தாம் எண்ணியதை நிறைவேற்றிக்கொள்ள முகத்தில் மட்டும் இனிமையைப் படர விடுவது உண்டு. முக இனிமை, பார்ப்போரைக் கவரும் என்ற பொது விதியை மேற்கொண்டு, அவர்கள், முகத்தில் போலி மலர்ச்சியைத் தோற்றுவித்துப் பிறரை வஞ்சிக்கப் பார்ப்பர். அத்தகைய போலிப் பொலிவு காட்டுவோர் சமுதாயத்தின் கொடிய விரோதிகளாவார். அவர்களேக் கண்டு அஞ்சி ஒதுங்க வேண்டும்.

**முகத்தின் இனிய நகாஅ அகத்தின்ஞ**
**வஞ்சரை அஞ்சப் படும்.**

(குறள் 824)

நட்புக்கு இலக்கணம் சொல்லும்போது திருவள்ளுவர் ''முகம் மட்டும் மலரும் படியாக நட்புச் செய்வது நட்பன்று. நெஞ்சமும் மலரும்படியாக, உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு'' எனக் குறிக்கிருர்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

(குறள் 786)

முகத்தளவில் மலர்ச்சி காட்டி அகத்தில் அழுக்காறு கொண்டுள்ளவர்கள் நம்மோடு நண்பர் போலப் பழகவரின் என்ன செய்வது? முள்ளே முள்ளால்தானே நீக்க வேண்டும்! பகையாயிருந்



தும் நட்புப்போல நடிக்கும் அத்தகையோரிடம் நாமும் முகத்தளவில் நட்புச் செய்ய வேண்டும். அகத்தில் அவர் மாட்டு அன்பு தோன்றாது அகற்ற வேண்டும். பின்பு வேண்டாதபோது இப் புற நட்பையும் நீக்கிவிடவேண்டும்.

**பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு**
**அகநட்பு ஒரீஇ விடல்.**

(குறள் 830)

கள்ளுண்பதைக் கண்டித்த முதற்புலவர் திருவள்ளுவரே. நம் ஒழுக்கத்தையும் உணர்வையும் அழிப்பதால் கள்ளினையுண்ணுதல் ''திருநீக்கப் பட்டார் தொடர்பு'' என்றார். கள்ளுண்பார் அறிவை யிழப்பதால் அவர்கள் எவ்வளவு உயர்ந்தவராயிருப்பினும் அவர்கட்குப் பகைவர் அஞ்சார். அவர்கள் பிறரால் இகழவும்படுவர்; வழிவழிவந்த ஒளியையும் இழப்பர். கள்ளுண்பார் சான்றோரால் மதிக்கப்படமாட்டார். ஒருவன் கள்ளைப் பருகுவது ஈன்ற தாய்க்கே துன்பம் தருமெனின் அதன் தீமையை நன்குணர்ந்து குற்றம் கடியும் இயல்புடைய சான்றோருக்கு இன்னாதாகுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி.**

(குறள் 923)

தாயின் முகத்தையே வெறுப்பினால் திரியச் செய்யும் நிலையை மேற்கொள்ளாதிருப்பது ஒருவனுக்குச் சிறப்பன்றோ?


# நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்**
**1/4, சூரியநாராயண செட்டி தெரு**
**சென்னை-81**

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath




முகம் ஒளி பொருந்தியதாக விளங்குவது விரும்பப்படுவது என்பதால் அது மதிமுகம், நகைமுகம், வாண்முகம் என்றெல்லாம் அடைகொடுத்து அழைக்கப்படுகிறது. குளிர்பொங்கும் நிலவைக் காணும் ஒருவன் அதைத் தன் காதலியின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான். ''விண்ணிலுள்ள மீன்கள் அங்கிங்காக அலைகின்றன. எதனால்? ஒருவேளை நிலவுக்கும், என் காதலியின் முகத்துக்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கிக் கலங்குகின்றனவோ?''

**மதியும் மடந்தை முகனு மறியா**
**பதியிற் கலங்கிய மீன்.**

(குறள் 1116)

விண்மீன்கள் வேறுபாடறியாது கலங்கவேண்டிய அவசியமே இல்லையே! இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை எளிதில் புரிந்துகொள்ளலாமே! மதியத்திற்குப் போல என் காதலியின் முகத்தில் மறு (களங்கம்) உண்டா என்ன ?

**அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறுவுண்டோ மாதர் முகத்து.**

(குறள் 1117)

என் காதலியின் முகம்போல் தேய்தல் வளர்தல் இன்றியும், களங்கமின்றியும், என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்க மதியமே உன்னால் முடியுமா? முடியாது. ஆதலின் நீ என் வாழ்த்திற்கு உரியை இல்லை!

**மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்**
**காதலை வாழி மதி.**

(குறள் 1118)

நிலவே, என் காதலியின் முகத்தோடு உன்னை ஒப்பிட்டுப் பேச உனக்குத் தகுதியில்லை. அவ்வாறிருக்க உன்னை எவ்வாறு நேசிக்க முடியும்? குறைகளை வைத்துக்கொண்டு பலர் காணத் தோற்றமளிக்கிறாயே! இது உனக்கு நகைப்பாயில்லை! என்றும் ஒரு தன்மைத்தாய் மாதர் முகம்போல ஒளிவிட இயலாத நீ இனிமேலாவது எல்லாருங் காணத் தோன்றாதே!


**மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்**
**பலர்காணத் தோன்றல் மதி.**

(குறள் 1119)

இங்ஙனம் இனியவை கூறவும், விருந்தோம்பவும், வெருவந்த செய்யாது விலக்கவும், ஈந்து இசைபட வாழவும், நன்னட்பைத் தேடிக் கூடா நட்பை அகற்றவும், கள்ளுண்ணலைக் கடியவும், காதல்மொழி பேசவும், குறிப்பறிவிக்கும் முகத்தை எடுத்தாண்டு நம் முகங்களை மலரவைக்கும் வள்ளுவர் குறள், நாட்டவர் தம் நெஞ்சப் பொய்கையில் மலர்வதாகுக!

# சிங்காரச் சென்னையிலிருந்து செந்தமிழ்க் காஞ்சி வரை







ஞாயிற்றுக்கிழமை, மே16-ஆம் நாள் பிற்பகல். சுட்டெரிக்கும் வெய்யில் சற்றுத் தணிந்திருந்தாலும், வெய்யிலின் கடுமை ஒன்றும் குறைந்த பாடில்லை. மே மாதத்திற்கே உரித்தான நசநசப்புப் புழுக்கம். வானம் மப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் புழுக்கம். 'மழை பெய்தால் இப்ப ஜோராக இருக்கு மில்லே' என்று சொல்லியபடியேவண்டியில் வந்து அமர்ந்தார் ஒரு நண்பர்.

'அதற்கென்ன? கருத்து மழை பொழிவதைக் கேட்கத் தானே போகிறோம்! எல்லாம் போகப் போகச் சரியாயிடும்'' -இன்னொரு நண்பர்.

வண்டி புறப்பட்டது.

சென்னை மாநகர் எல்லையைக் கடந்து செங்கை மாவட்டத்தினுள் நுழைந்தது வண்டி.

''நேரத்திற்குப் போய் விடுவோமல்லவா?''—மறுபடியும்ஒரு நண்பரின் அவசரக் கேள்வி.

''கொள்ளை நேரம் கிடக்கு ....போய் விடுவோம் ''—இது பதில்.

எதற்குப் போகிறோம் என்பது உங்களுக்குத் தெரிய வேண்டாமா? தமிழக முதல்வர் அன்று செங்கை மாவட்டத்தில் பல முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். சத்துணவுத் திட்ட விழா, கிராம வேலை வாய்ப்புத் திட்டத்துவக்க விழா, காஞ்சியில் பாதாள சாக்கடைத் திட்டக்கால் கோள் விழா, எல்லாவற்றிற்கும் மேலாக 42,000 ஏழைமக்களுக்கு நிலப்பட்டா,மனைப்பட்டா வழங்கும் விழா இப்படிப் பல முக்கிய நிகழ்ச்சிகள் அன்று. அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத்தான் நாங்களும் போய்க் கொண்டிருந்தோம்.

தாம்பரம் அரங்கநாதபுரம். எங்கள் வண்டி, விழா நடத்தும் இடத்தில் போய்ச் சேரவும் முதல்வர் வந்து சேரவும் சரியாக இருந்தது. ஒரே கூட்டம். தங்களுடைய அருமைத் தலைவனைக் காண மக்கள் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தனர். குழந்தை, குட்டிகளுடன் பெண்கள் திரளாக வந்திருந்தனர். பெண்களும், குழந்தைகளும் வந்து விட்டால் சந்தடிக்குச் சொல்ல வேண்டுமா? அதுவும் கூடவே வந்துவிடுமே!

''பள்ளி செல்லாத ஆறுமாதம் முதல் மூன்று வயதிற்கு மேற்படாத குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை, தமிழ் நாடு அரசு முதன் முறையாக அக்டோபர் 1970-ல் சென்னை நகர்க் குடிசைப் பகுதிகளில் அமுலுக்குக் கொண்டு வந்தது. இப்பொழுது இத்திட்டம்செங்கற்பட்டு,மதுரை திருச்சி, கோவை முதலிய மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டுள்ளது. இருபது ஆயிரம் குழந்தைகளுக்கு 100 மையங்களில் மையம் ஒன்றுக்கு 200 குழந்தைகள்வீதம் அமுல் செய்யப்படுகிறது. ஓர் ஆண்டில் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு 23½ காசுகள் என்கிற விகிதத்தில் ரூ. 11,75,000 இம்மாவட்டத்தில் இத்திட்டத்திற்காகச் செலவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.''— மளமள வென்று எங்களிடம் இதை ஒப்பித்துவிட்டு அந்தப் பக்கம் சென்றார் மாவட்ட ஆட்சி அலுவலர் ஒருவர். ''அம்மா, அம்மா மாடர்ன் ரொட்டி'' ஒரு குழந்தையின் குரல். திரும்பிப் பார்த்தேன். மாடர்ன் ரொட்டிகள் அழகாக பிளேட்டுகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குழந்தைகளின் ஆரவாரத்திற்கும் சத்தத்திற்கும் எனக்குக் காரணம் இப்பொழுது தெளிவாகப் புரிந்தது. முதல்வரின் கார் வந்து நின்றதும் மக்களின் ஆரவாரம் சொல்லி முடியாது. ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைக்க ஏழைகளின் தலைவன் வந்துவிட்டார்.

அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் சத்துணவுத் திட்ட விழாவைத் துவக்கிவைத்து முதல்வர்இரத்தினச் சுருக்கமாகப் பேசினார் :

''அரும்புப் பருவத்திலே உள்ள குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டால் தான், ஒளி மிகுந்தஎதிர்காலத்தைநாட்டிற்கு அளிக்கின்ற ஒப்பற்ற மேதைகளாக அவர்கள் திகழ முடியும். உடல் வலிவு மட்டுமல்லாமல், மூளையும் நல்ல வளர்ச்சி பெற வேண்டும். விளையும் பயிர்களை நல்ல வளமான பயிர்களாக விளைவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை மாநிலஅரசு துவக்கியுள்ளது. எந்தத் திட்டமானாலும், அந்தத் திட்டத்தின் நன்மைகளை அடித்தளத்தில் உள்ள மக்கள் பெற்றிட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். இப்பொழுது பள்ளி செல்லாத 6 மாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு என்று இருக்கும் இந்தத் திட்டத்தை 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் விரிவாக்க வேண்டும் என்ற கருத்தை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்'' என்று முதல்வர் கூறி முடித்ததுமே ஒரே கைதட்டல், சத்தம் கூச்சல் எல்லாம். ''இது என்ன சத்துணவுத் திட்ட விழாவா அல்லது சத்த உணவுத் திட்ட விழாவா என்றே எனக்குத்தெரியவில்லை'' என்று அவருக்கே உரித்



16-6—5




தான நகைச் சுவையுடன் முதல்வர் கூறியதும் மறுபடியும் கைதட்டல்.

அடுத்தது, படப்பை அருகில் உள்ள வட்டப்பாக்கம் கிராமத்தில் கிராமப் புற வேலை வாய்ப்புத் திட்டத் துவக்க விழா.

மிக முக்கியமான நிகழ்ச்சி. மெயின் ரோடின் அண்மையில் பெரிய பந்தல் போட்டு மிகப் பெரிய அளவில் கூடியிருந்தனர் கிராம மக்களும், ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வட்டப்பாக்கம் ஊராட்சி எல்லையில் ரூ. 5 ஆயிரம் மதிப்பீட்டில் அமைய இருக்கும் வட்டப்பாக்கம்-பனப்பாக்கம் 3 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை வேலையை, மதிப்பிற்குரிய முதல்வர், இத் தீவிரத் திட்டத்தின்கீழ் மாநிலத்திலேயே முதல் வேலைத் திட்டமாகத் தன் பொற்கரங்களால் துவக்கி வைத்தார்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் தலைமை தாங்க, முதல்வர் அவர்கள் திட்டத்தைத் துவக்கிவைத்தார்கள். அந்தப் பகுதி கிராம மக்களின் உவகையைச் சொல்ல முடியாது. ''இந்தப் பகுதியிலே கிராமங்களை இணைக்கச் சாலை வசதி இல்லை. இது பெரிய குறையாக இருந்தது. நாங்களே கேட்க வேண்டுமென்றிருந்தோம்; ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் எங்களை முந்திக் கொண்டு விட்டார்கள். எப்படி நன்றிசொல்வதென்றே எங்களுக்குத் தெரியவில்லை'' என்று உள்ளம் நெகிழ உரைத்தார் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. பாலகிருட்டிணன், தன்னுடைய வரவேற்புரையில். போட்டி போட்டுக் கொண்டு மாலைகளை முதல்வருக்கும் அமைச்சருக்கும் அணிவித்தார்கள்.

மாலைகள் போட்டார்கள். கைத்தறித்துணி போட்டார்கள். ஒருவர் முதல்வருக்கு ஒரு லுங்கியைக் கூடக் கொடுத்தார்.

இப்படிப்பட்ட குதூகலத்திற்கு என்ன காரணம் தெரியுமா?

இந்தக் கிராம வேலை வாய்ப்பு தீவிரத் திட்டத்தை தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக முதல்வரின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பெற்ற பெரும்பேற்றினை அல்லவா அவர்கள் அன்றுஅடைந்திருந்தார்கள்! இது புதிய திட்டம். பெரிய திட்டம். மைய அரசினால் கொடுத்துள்ள இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் 100 ரூபாய் கிடைக்கும். இத்திட்டத்தின் கீழ்,

கிராமச் சாலைகள் அமைத்தல்

நிலங்களின் வளத்தினைப் பெருக்குதல்.

சாக்கடைகள், கரைகள் கட்டுதல்.

குடிநீர்ப் பாதுகாப்பு வேலைகள்.

சீரிய நீர்ப்பாசனப் பாதுகாப்பு வேலைகள்.

மண் வளப் பாதுகாப்பு வேலைகள்.

செயல்படுத்தப்படும்.

இதற்கென்று தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 1½ கோடி.

திட்டத்தைத் துவக்கி வைத்து முதல்வர் பேசுகையில் ''தமிழ் நாட்டின் விழிப்பிற்கே காரணமான அண்ணா பிறந்த செங்கற்பட்டு மாவட்டம் என்ற காரணத்தினால் இத் திட்டமானது இம்மாவட்டத்தில் தொடங்கப் பெறுவது சாலப் பொருத்தமுடையதாகும்'' என்று குறிப்பிட்டு விட்டு, ''தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒன்றரைக் கோடி ரூபாய் மிகவும் குறைவானதாகும். தமிழ் நாட்டிற்கு 6 கோடி ரூபாயாவது இதற்கென்று ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆறு கோடியே போதாது. இப்படி இருக்க 1½ கோடி ஒதுக்கியிருப்பதற்காக வருத்தப்படுகிறோம். மாவட்ட அளவில் இதை ஒதுக்குகிறார்கள். இதனால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படுகிறது. மாவட்ட அளவிலே இல்லாமல், ஒன்றிய அளவிலே எடுத்துக் கொண்டு ஒதுக்கீடு செய்யுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன். தமிழ் நாட்டில் மாவட்டங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. மாவட்டங்களும் குறைவு, மாவட்டங்களின் பரப்பளவோ அதிகம். இதனால் பெற வேண்டிய பயனைப் பெற இயலாத நிலை உள்ளது. இப்படி முன்கூட்டியே தெரிந்திருந்தால்

செங்கை மாவட்டத்தை நான் காகப் பிரித்திருப்போம். தெரியாமல் போய் விட்டது. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள 375 ஒன்றியங்கள் என்ற அளவிலே ஒதுக்கீடு செய்யுங்கள் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். கிடைத்ததற்காக நன்றி. கிடைக்க வேண்டும் என்பதற்காக வேண்டுகோள்''.

கிராம மக்களின் ஏழை எளிய மக்களின் நலனில் முதல்வருக்குத் தான் எவ்வளவு அக்கறை! எந்தப் பிரச்சினையையும், இந்த இலட்சியத்தை மையமாகக் கொண்டே பார்க்கும் அவருடைய இதய சுத்தியை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதற்குச் சாட்சியாக, கூடியிருந்த மக்கள் எழுப்பிய கரவொலி அமைந்திருந்தது.

அதன்பிறகு செந்தமிழ்க்காஞ்சி அண்ணா பிறந்தமண்ணை நோக்கிப் பயணம். வழிநெடுக அலங்கார வளைவுகள், கொடிகள், தோரணங்கள்! இதுவென்ன செங்கை மாவட்டமே விழாக் கோலம் பூண்டு விட்டதா என்ன? வழி நெடுகப் பாதையின் இரு மருங்கிலும் சாரி சாரியாக மக்கள் நின்று தங்கள் அருமைத் தலைவனை வரவேற்கக் குழுமியிருந்த காட்சி உள்ளத்தைப் புல்லரிக்க வைத்தது.

காற்று சுழன்று சுழன்று அடித்தது. வெப்பம் தணிந்துவிட்டது; மாலைக் கதிரவனின் ஒளிக் கதிர்கள் பட்டு, அன்னை பூமி பொன்னிற மங்கை போல் ஒளி வீசிக் கொண்டிருந்தாள்.

காஞ்சி எல்லையை இன்னும் முதல்வரின் வண்டி தொடக்கூட இல்லை. எல்லைக்கு வெளியிலேயே விழா, களை கட்டிவிட்டது. அழகான வளைவுகள்-''உணவு உற்பத்தியில் தஞ்சையையும் மிஞ்சுவோம்'' என்று ஒரு வளைவு—தோரணங்கள், ஒளி விளக்குகள்—சாலை இரு மருங்கிலும் மக்கள் நின்று தங்கள் அருமைத் தலைவனை ஆனந்தக் கண்ணீர் மல்கக் கரங்கூப்பி வரவேற்றனர்.

காஞ்சியில் அன்று பெரிய திருவிழா. ஊரெங்கும் ஒளி மயம்! திரும்பிய திசையெல்லாம் ஒளி விளக்குகள், தோரணங்கள், அலங்கார வாயில்கள் வரலாற்றுப் புகழ் படைத்த—வரலாற்றுக் காவியத்திலேயே பல பொன்னேடுகளைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டுள்ள அந்தச் சிங்காரத் திருநகர் அன்று விழாக் கோலமே பூண்டிருந்தது. வீதிகளிலே சாரி சாரியாக மக்கள்! எங்கு பார்த்தாலும் ஓர் பரபரப்பு, ஓர் இனம் புரியாத இன்பக் கிறுகிறுப்பு.

''முதல்வர் வந்து விட்டார்''
''முதல்வர் வந்து விட்டார்''

காஞ்சி மாநகரம் அந்தத் தலைவனை, தமிழக முதல்வரை, கலைஞரை எத்தனையோ முறை பார்த்திருக்கிறது. அவர் ஒன்றும் அந்த மண்ணிற்குப் புதியவரல்ல. அவர் பிறந்தது, தஞ்சை மண். ஆனால் படித்தது காஞ்சியில் அண்ணாவின் பல்கலைக் கழகத்தில் தானே! இருந்தும் ஏன் இவ்வளவு குதூகலம்! இவ்வளவு மகிழ்ச்சி. இவ்வளவு ஆரவாரம்! அதில் உள்ள சூட்சமத்தைப் புரிந்து கொண்டால் கலைஞரின் வெற்றியின் இரகசியம் தெள்ளெனப் புரிந்து விடும். அவர் தொடாத துறை ஒன்றுமில்லை. தொட்டது பொன்னாகாமல் இருந்ததுமில்லை.

மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். பிரம்மாண்டமான மேடை. குழல் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன.

கூட்டம் சொல்லி முடியாது. காஞ்சி நகரமே திரண்டு வந்து விட்டதா?

மேடையிலே கம்பீரமாக முதல்வர். அருகில் வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில். புதுவை முதல்வர் பரூக், தண்ணீர்-வடிகால் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு, காஞ்சி நகரத் தலைவர் திரு. கே. டி. எஸ். மணி. சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சீதாராம தாஸ்

''நீராடும் கடலுடுத்த....'' தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுகிறது.

நினைவு அலைகள் எங்கோ ஓடுகின்றன. அன்றொரு நாள் அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன் பாராண்ட பல்லவப் பெருந்தகைகள் மகேந்திர பல்லவன்.. மாமல்ல பல்லவன் இப்படித் தான் அத்தாணி மண்டபத்திலே கொலுவீற்றிருந்திருப்பார்கள்.

காலம் ஓடி விட்டது. ஆனால் அதே வீரம், அதே இராச தந்தி

கால் முடமான முடிதிருத்தத் தொழிலாளருக்கு மூன்று சக்கர வண்டியைத் தருகிறார் முதல்வர்



ரம், அதே கலை உணர்வு, அதே செயல்திறன் எல்லாம் உருண்டு திரண்டு மறுபிறப்பாக கலைஞர் வடிவில்........

திரு அன்பில் அவர்களின் கம்பீரமான குரல் மேடையிலிருந்து ஒலிக்கிறது. அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி விட்டு அவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். இதற்காகும் செலவு மதிப்பீடு ரூபாய் 3 இலட்சம். பல முக்கிய நிகழ்ச்சிகள். ஆனால் எல்லாம் ஒரேமேடையில்ஒன்றன் பின் ஒன்றாக நடந்தேறுகின்றன. அன்னை அஞ்சுகம் திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழா, கலை துணி தேய்க்கும் பெட்டி வழங்குதல்—இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக,

நெஞ்செல்லாம் இனிக்கும்படியாக, 42,000 நிலமற்ற ஏழைகளுக்கு நிலப்பட்டாவும் குடிமனைப் பட்டாவும் வழங்கு விழா..............

இத்தனை விழாக்களும் ஒரே இடத்தில்....ஒரே மேடையில்-அஞ்சுகம் திருமண மண்டபத்திற்குச் செலவு மதிப்பீடு ரூபாய் 3 லட்சம். கலைஞர் கருணாநிதி விளையாட்டரங்கத்திற்குச் செலவு மதிப்பீடு ஏழு இலட்சம் ரூபாய். காஞ்சிமா நகர் பாதாளச்சாக்கடைத் திட்டத்திற்கு 1 கோடி ரூபாய்......42,000 ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் யார் என்ன சொன்னாலும், எதிர்த்தாலும் நான் பின்வாங்கப் போவதில்லை. அண்ணா சமாதியை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவு அழகு படுத்தவும், அண்ணன் நினைவு எந்தப்பக்கம் திரும்பினாலும் இருக்குமளவிற்கு அண்ணனின் பொன் மொழிகள் இருக்கத்தக்க அளவிற்குச் செய்து முடிக்கத்தான் போகிறேன்'' அண்ணா பிறந்த மண்ணில் நின்று அவருக்கே உரித்தான கம்பீரத்துடன் கலைஞர் அறிவித்த பொழுது எழுந்த கரவொலி வானைப் பிளந்தது.

'' காஞ்சியில் நீண்ட நாளைய ஆவலாக இருந்தது பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ. 1 கோடிக்குமேல் செலவிடப்






காஞ்சியில் கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கை புதுவை முதல்வர் பரூக் அவர்கள் திறந்துவைக்கிறார்கள்

ஞர் கருணாநிதி விளையாட்டரங்கம் அடிக்கல் நாட்டு விழா, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊர்க்காவல் துறைக் கண்காணிப்பாளர் இல்லங்கள் திறப்பு விழா, காஞ்சிப் பாதாள சாக்கடைத் திட்டத் துவக்க விழா, மாமல்லன் கூட்டுறவுக் குடியிருப்புத் திறப்பு விழா, செங்கற்பட்டு மாவட்ட சாதனைமலர் வெளியீட்டு விழா, கலப்பு மணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம், நரிக்குறவர்களுக்கு ''வானொலிப் பெட்டிகளை அளித்தல், முடமான நாவிதர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல், சலவையாளர்களுக்கு நிலப்பட்டா குடிமனைப்பட்டா நிலங்களின் மதிப்பு சுமார் 3 கோடி ரூபாய்.

செங்கை மாவட்டத் தமிழாசிரியர் சங்கம் தேன் தமிழில் வரவேற்பு மடல் வாசித் தளித்தது.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அமைந்தது முதல்வரின் பேருரை....அண்ணன் பிறந்த மண்ணில் அவருடைய அருமைத் தம்பி தன் பேச்சால் அனைவரின் மனத்தையும் உருக்கிவிட்டார்.

''..சென்னைக் கடற்கரையில் உள்ள அண்ணா சமாதியை ஒரு பிருந்தாவனமாக்கப்போகிறேன். படும் பெரியதிட்டம் இது. இன்று அதன் கால் கோள் விழா நடைபெற்றிருக்கிறது. இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திருமண மண்டப விழாவை விட, விளையாட்டரங்கத்தை விட எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்கது 42,000 ஏழை எளிய நிலமற்ற மக்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப்பெறும் நிகழ்ச்சியேயாகும். அதற்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலமும் வீட்டு மனையும் 42,000 பேருக்கு இன்று தரப்பட்டுள்ளது'' என்று ஏழை எளிய மக்களின்பால் தனக்குள்ள,

தன் அரசுக்குள்ள ஈடுபாட்டைக் கோடிட்டுக் காட்டிவிட்டு, எழுப்பப்பட்ட கோரிக்கையைப் பற்றி முதல்வர் தனக்கே உள்ள நகைச் சுவையுடன் ''அண்ணா, திரைப் படம் ஒன்றிலே 'சேடி இல்லாத ராஜகுமாரி....ஜோடி இல்லாத மாடப்புறு இருக்க முடியாதாம்.' என்ற வசனம் எழுதியிருந்தார். அத்துடன் 'கோரிக்கை இல்லாத மந்திரிகள் வரவேற்பும் இருக்க முடியாது' என்று சேர்த்துக்கொள்ளலாம். 5,000 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை காஞ்சிபுரத்தில் அமைய வேண்டும் என்ற கோரிக்கை நண்பர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் எழுப்பப்பட்டது. 5,000 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை உருவாவது என்றால் அதற்குப் பல கோடி ரூபாய் தேவை. தனிப்பட்ட யாராவது முன்வந்தால் கூட ''அளித்தேன் அனுமதி'' என்று சொல்லக் கூடிய அதிகாரங்கள் என்னிடமில்லை.

''5,000 பேர் வேலை செய்யும் தொழிற்சாலை காஞ்சிபுரத்திற்கு வேண்டும் என்று கேட்பது சுவையாக இருக்கிறது.

"தொழிற்சாலையின் புகைப் போக்கிகள் ஆலயத்தின் கோபுரத்தைவிட உயரமாகவும், அதிலிருந்து கிளம்பும் புகை மண்டலம் மேக மண்டலத்தோடு போட்டி போட்டுக் கொண்டு புகை மண்டலம் எது, மேக மண்டலம் எது, என்று தெரியாத அளவுக்கு இருக்கின்ற காட்சிகளை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் களிப்பான காட்சி—ஆனால் கண்ணைத் திறந்து பார்த்தால் சாவி நம்மிடமில்லை. டில்லியிலிருக்கிறது. அப்போது தான் இப்படிப்பட்ட நேரங்களில் வேண்டுகோள் விடும் பொழுது மகிழ்ச்சி அடைவதை விட மனக் கிலேசம் அடைகிறேன்" என்று கூறிவிட்டு செங்கை மாவட்டத்தின் நான்காண்டு வளர்ச்சியைப் புள்ளி விவரங்களோடு விளக்கினார் :—

'' செங்கை மாவட்டத்தில் 1960-லிருந்து 67 வரை நிலப்பட்டா பெற்றவர்கள்—1,163 பேர்.

1967-லிருந்து 1971 வரை நான்காண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்—16,992 பேர்

(இன்று கொடுத்தது நீங்கலாக)

1960-லிருந்து 1967 வரை வீட்டு மனைப் பட்டா பெற்றோர் —1,630 பேர்.

1967-லிருந்து 1971 வரை வீட்டு மனைப்பட்டா பெற்றோர் 25,215 பேர்.

1960-லிருந்து 1967 வரை மிகு விளைச்சல் தரும் நிலச்சாகுபடி செய்யப்பட்ட நிலம்—79,900 ஏக்கர்.

இந்த நான்காண்டுக் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலம்— 9,57,314 ஏக்கர்.

பாராண்ட பரம்பரையின் மறு பதிப்பாக, தமிழக முதல்வர்! தமிழகத்து வரலாற்றுக் கதாநாயகர்கள்—செந்தமிழ் நாட்டுக்குப் புகழ் தேடித் தந்த வீரத் திருமகன்கள், இராச இராச சோழன், இராசேந்திர சோழன்-களம்பல கண்ட கடமை வீரர்கள்—கல்லெல்லாம் கதை சொல்லும் மாமல்லபுரம் கண்ட பல்லவப் பேரரசர்கள்-மகேந்திர பல்லவரின் இராச தந்திரம், மாமல்ல பல்லவனின் வீரம்—அத்தனையும் கல்லக்குடி கொண்டானின் பார்வையிலே, செயலிலே, நடையிலே, அவருடைய அழகுத் தமிழிலே நின்று நிலவிப் பரிமளிக்கிறது —இதயம் எங்கெங்கோ ஓடியது. வரலாறு திரும்புகிறது. தமிழகத்தின் பொற்காலம் மலர்ந்து கொண்டிருக்கிறது.




**அனைத்து இந்திய அளவில் மிகச் சிறந்த கிராமமாக தமிழ் நாட்டிலுள்ள 'மணவாளக் குறிச்சி, என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று முதல் பரிசு பெற்றுள்ளது. இதற்குரிய பரிசு 27-4-71 அன்று புதுடில்லியில் மத்திய உணவு வேளாண்மை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.**

இதை வைத்துக் கொண்டு தான் ''உணவு உற்பத்தியில் தஞ்சையையும் மிஞ்சுவோம்'' என்று எழுதியிருக்கிறார்கள் போலும். முடியாது. தஞ்சையை மிஞ்ச முடியாது. இருப்பினும் இந்தப் போட்டி மனப்பான்மை உணவு உற்பத்தியில் வருவதை வரவேற்கிறேன்'' என்று கூறி முடித்தார்.

நாட்டுப் பாடலுடன் விழா நிறைவு பெற்றது. வீதிகளில் எல்லாம் மக்கள் வெள்ளம். ஒளிமயம்; காஞ்சி மாநகரை வண்டி தாண்டும் பொழுது மனத்திலே விவரிக்கவொண்ணாத நினைவுகள். கலைஞரின் கம்பீரக் குரல் காதுகளிலே ரீங்காரம் செய்து கொண்டே இருந்தது.

தமிழகத்தில் தான் எவ்வளவு வியத்தகு மறுமலர்ச்சி......!

வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. இதயம் வாழ்த்தொலி எழுப்புகிறது. தூக்கம் கண்ணைப் பொத்துகிறது. அயர்ந்து தூங்கிவிட்டேன். கண் விழித்துப் பார்த்தால்—நடு நிசியாகி விட்டது. சிங்காரச் சென்னையின் இதயமான அண்ணாசாலை—இரவைப் பகலாக்கும் ஒளி உமிழ் விளக்குகள் —காஞ்சி விழா கண்ட நெஞ்சு இனித்தது. நிறைவு பெற்றது. பஞ்சைப் பராரிகளை வாழ்விக்க வந்த காஞ்சித் தலைவன் அண்ணாவின் சிலையை நோக்கிக் கரம் கூப்பி வணங்கி விட்டு வண்டியை விட்டு இறங்கினேன்.

அண்ணாவின் சமாதி அழகுப் பிருந்தாவனமாக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு தேனாக இனிக்க, தெம்புடன் வீட்டை நோக்கி வீதியில் நடைபோட்டேன்.



# திருவாளர் பொன் மொழியார்

அன்புள்ள ஆசிரியருக்கு,

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். என்னைப்பற்றி நீங்கள் என்ன எழுதியிருந்தாலும் உலகுக்குத் தெரியத்தான் போகிறது உண்மை. நான் அஞ்சவில்லை. குருட்டுக் கழுதை இருட்டுக்குப் பயப்படுமா?

'இவரைச் சந்தியுங்கள்' என்ற அறிவிப்புடன் எழுதியிருந்தீர்கள்:

''இவர்தான் திருவாளர் பொன் மொழியார்'' என்று உங்களுக்கு அவசியம் அறிமுகம் செய்துதான் ஆக வேண்டும்.

அடுத்த இதழ் முதல் ஒவ்வொரு இதழிலும் இவரைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டீர்களே!

'இதென்ன அறுவைக் கேஸ்' என்று அஞ்ச வேண்டாம். திருவாளர் பொன்மொழியார் பொல்லாத மனிதரும் அல்லர்; புனிதமானவரும் அல்லர்!

ஏதையும் வெள்ளை உள்ளத்துடனே நோக்கும் இவரை ஒரு சராசரி மனிதராகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

''சராசரி மனிதரைச் சந்திப்பதில் என்ன சுவையிருக்கும் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

பூர்வீகத்தில் புண்ணிய கோடி என்ற பழம் பெயருக்குச் சொந்தக்காரரான இவரையும் இவர் மனைவி அருந்ததியையும் சந்தித்த பிறகு நீங்களே சொல்லுவீர்கள்.

வேறு விவரம் வேண்டுமா?

அடுத்த ' இதழில்தான் நீங்களே சந்திக்கப் போகிறீர்களே..'' என்று

இதையெல்லாம் படித்தவுடன் எனக்கு உடனே ஆசிரியருக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று தோன்றியது.

"இளவல்"

''ஆசிரியருக்குக் கடிதமா? ஏன் என்று கேட்கிறீர்களா?''

ஆசிரியருக்குக் கடிதம் எழுதக் காரணம் வேண்டுமா?

'எதையும் எதிர்ப்பது, எதையும் சொல்வது என்பது தானே புதுமை! அதுபோல எதைப்பற்றியும் எப்படி வேண்டுமானாலும் கருத்துக்களை எழுதுவது தானே ஆசிரியருக்குக் கடிதம் எழுதுவது! பெயரும் பத்திரிகையில் வரும். இப்படி நாம் எழுதாவிட்டால் புல ஏடுகளில் ஆசிரியர்களே அந்தக் கடிதத்தை எழுதிப்போட்டுக்கொள்வார்கள். ஆகவேதான் ஆசிரியருக்குக் கடிதம் எழுதிவிடத் துணிந்தேன்.

அறிவிப்பை இன்னொரு அறிவிப்பால்தானே முறியடிக்க முடியும்:

முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்! அதே நேரத்தில் இன்னொன்றும் நினைவுக்கு வந்தது, 'தீயைத் தீயால் அணைப்பதில்லையே', என்று!

எனவே அவசரமாக ஒரு தந்தியை அனுப்பினேன்.

'இந்த வாரம் என்னைச் சந்திக்க முடியாது' என்று தந்தி அடித்தேன்.

நீங்களும் 'அடுத்த இதழில் தான் வருகிறார் பொன்மொழியார்' என்ற அறிவிப்பை அழகாக வெளியிட்டுள்ளீர்களே!

இனிமேல் பிகு செய்வது பிரயோஜனமில்லை என்று வந்து விடுகிறேன்:

''கத்தி சாணைக் கல்லைத் தின்கிறது. சாணைக்கல் கத்தியைத் தின்கிறது.''

நீங்கள் அழைத்து வந்தால் என்ன? நானாக வந்தால் என்ன?

புகழ்மிக்க நண்பன்,

பொன்மொழி.

* * *

தண்ணீர் எரிவதில்லை!

தங்கம் துருப்பிடிப்பதில்லை!

பொன்மொழி பொய் பேசுவதில்லை!

அப்பப்பா என்ன பாராட்டுகள்! என்ன புகழுரைகள்! அந்த விழாவில் பொன்மொழியாரைப் பாராட்டாதவர்கள் மேடையில் ஏறாதவர்கள்தாம்!

பீச்சிலே உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்துப் பட்டாணி சுண்டல் விற்பவர்கள் எல்லாம் அருகில் வந்து ஒரு சுற்றுச் சுற்றி ''தேங்காய் மாங்காய் பட்டாணி

சுண்டல், முறுக்கு, அடை" என்று கூறுவதுபோல் மேடையில் ஏறியவர்கள் எல்லாம் 'மைக்' பக்கம் வந்து பொன்மொழியார் புகழ் பாடினார்கள்.

பொன்மொழி சொன்னால் பொய்யாவதில்லை.

''பூலோக வாழ்வே அவர் வாய்மொழி!

"திருவாளர் 'பொன்மொழியார்' தேசத்தின் திரண்ட சொத்து. பொன்மொழியார் இந்த நூற்றாண்டின் இணையற்ற அறிவுக் கருவூலம்" அப்படி இப்படின்னு யார் யாரோ சொன்னாங்க....

அவருடைய பால்ய சிநேகிதன் பரட்டைத்தலை பரமசிவம் கூட என்னென்ன சொன்னான்.... எப்படி எப்படிப் பாராட்டினான்...!

''ஏய் புண்ணியகோடி! புத்தகப் புழுவே! பிழைக்கத் தெரியாதவனே!" என்று, காணும்பொழுது எல்லாம் அந்தக் காலத்தில் நாவார் வசை பாடும் அவன் கூட அல்லவா எல்லோரையும் போல—தொண்டை கட்டிக் கொண்டிருந்ததால் கீறல் விழுந்த இசைத் தட்டைப்போலவே பேசினான்.

'பொன்மொழியை எனக்கு அப்



போதே தெரியும்! பொரியுருண்டை வாங்கித்தின்போம். நாட்டிலே நாலு பேர் பாராட்டும் அறிவாளியாக மேதையாக வளர்வார் நடப்பார் என்பதைக் காதறுந்த செருப்புடன் நடந்து வரும் அவருடைய அந்தக்கால நடையே சொல்லும், என்று பாராட்டினான்.

பொன்மொழியார் எழுதிய புத்தகம் ஒன்று 1,000 பிரதிகள் விற்றதால் இந்தப் பாராட்டு விழா நடைபெற்றது!

ஆயிரம் பிரதிகள் விற்றதால் ஆயிரம் பிறை காண எல்லாரும் வாழ்த்தினார்கள்.

'அறிவு' தலைக்குக் கிரீடம் அடக்கம் காலுக்குச் செருப்பு' என்ற பேருண்மையை உணர்ந்த மனத்துடன் அமர்ந்திருந்தார் பொன்மொழியார்.

'எல்லாப் பாவங்களும் முதுமையடையும் போதுகூடப் பேராசை மட்டும் இளமையாக இருப்பது போல்' எல்லோரும் பாராட்டினாலும் அவர் மனைவி பாராட்ட வேண்டும் என்ற ஆசை பொன்மொழியார் நெஞ்சில் துளிர்த்தது.

அருந்ததியை வருந்தி வருந்தி அழைத்தார். அந்த அம்மை யாரோ ''விருந்து ஒன்றினுக்குப் போகவேண்டும்; வேறு வேலை இருக்கிறது" என்று மறுத்துவிட்டார்.

பொன்மொழியாரைப் பற்றி இங்கு பேசியவர்கள் எல்லாம் கூறியதைக் கேட்டால் அருந்ததிக்கு எவ்வளவு மனங்குளிரும் என்பது மட்டுமல்ல......இதுவரை தான் புரிந்துகொள்ளாமல் தன் கணவரைப் பற்றி அலட்சியமாக இருந்ததை மாற்றிக் கொள்ளமாட்டாளா?

அருந்ததி கேட்காத புகழுரைகள் பாராட்டுகள் எல்லாம்...

காட்டில் எரித்த நிலவு

கடலில் பெய்த மழை

காப்ரே பார்த்த குருடன் போலாகும் என்று நினைவு ஓடியது. அந்தக் காலக் காட்சிகள் கண்முன்னே வந்தன.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்துத் திருமணம் செய்து கொள்ள அவர் பெண்ணல்லவே! ஆண் மகன் அல்லவா?

ஆகவே ஆட்டுக்கல்லை மிதித்து அருந்ததியைப் பார்த்தார்.

ஆமாம், ஆட்டுக்கல் மீது நின்று, இடிந்த சுவர் வழியாக அடுத்த வீட்டுத் தோட்டத்தில் நிற்கும் அருந்ததியைக் கண்டார்!—கண்டார்கள்!—கட்டுண்டார்கள்!—கடிமணம் — காதல் மணம் செய்து கொண்டார்கள்.

'அறிவாளியின் ஒருநாள், முட்டாளின் முழு வாழ்வுக்குச் சமம்' என்பதுபோல ஆனந்த வெள்ளத்தில் சில காலம் வாழ்க்கை ஓடியது.

ஆனால் ரஷ்யப் பழமொழிக்கு இலக்கியமானாள் அருந்ததி. ஆனந்த வெள்ளம் பிரேக் டவுன் பஸ்ஸாகிவிட்டது.

ஓகோ.. உங்களிடம் சொல்லவில்லையே திருமதி பொன்மொழியார் இலக்கியமாகிய தற்கான இலக்கண மொழி எது என்று சொல்லவில்லையே.. நினைவுபடுத்திச் சரியாக சொல்கிறேன்......

''உழவனுக்கு நிலம் வேண்டும்; பிரபுவுக்குக் கௌரவம் வேண்டும்; சிப்பாய்க்குச் சண்டை வேண்டும்; வியாபாரிக்குப் பணம் வேண்டும்; விவசாயிக்குச் சமாதானம் வேண்டும்; தொழிலாளிக்கு வேலை வேண்டும்; ஓவியக்காரனுக்கு அழகு வேண்டும்; பெண்ணுக்கு முழு உலகமும் வேண்டும்''.

அருந்ததி பெண் தானே! எனவே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நோக்கோடு ரஷ்யப் பழமொழிக்கு இலக்கியமானாள்......

'மணம் செய்யும் பொழுதும் மாத்திரை சாப்பிடும் பொழுதும் ரொம்ப அதிகம் சிந்திக்கக் கூடாது'என்பதாலோ என்னவோ அவசரப்பட்டு அருந்ததியைக் கைப்பிடித்தோம் என்று பல முறை பொன்மொழியார் சிந்தித்தார்......சிந்திக்கிறார்....

பாராட்டு விழா நடத்தியவர்கள் நன்றியுரை கூறப் பொன்மொழியாரை அழைத்தபொழுது தான் பழைய சிந்தனையிலிருந்து விடுபட்டார்.

வீடு திரும்பும் பொழுது அதே சிந்தனைகள்......கையில் மாலையுடன் டாக்சியிலிருந்து பாராட்டு வாழ்த்திதழைத் தூக்கிக் கொண்டு இறங்கினார். உள்ளே அவர் கண்டகாட்சி......

துரும்பாய்த் தேய்ந்தாலும் சந்தனக் கட்டை மணம் மாறாது என்பது போல அருந்ததி பொன்மொழியார் மனைவி என்பதை உறுதிப்படுத்தியது.

(தொடரும்)


## வேளாண்மை, தொழிற்சாலைகளுக்கு நீர் ஊற்று கண்டுபிடிக்க வேண்டுமா?

புதிதாகக் கிணறு வெட்டவும், குழாய்க் கிணறு அமைக்கவும், வேண்டுமானால் மணிக்கு 1,000 முதல் 2,500 காலன் தண்ணீர் கொடுக்கக் கூடிய நீர் ஊற்று உள்ள இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்கவும், எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதைக் கூறவும் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

எஸ். பி. பிரேம்சந்தர ராவ், பி.எஸ்சி.
5, முதல் தெரு, சேத் காலனி,
எழும்பூர், சென்னை-8.

தொலைபேசி எண்: 84728

பிரேம்சந்தர ராவ் அவர்கள் ஆந்திரப் பிரதேச அரசு, தென் இரயில்வே ஆகியவைகளின் அலுவல் பற்றிய நீர் ஊற்று நிபுணராவார்.


## வெண்பாப் போட்டி-12

ஈற்றடி :

காவிரியைக் காத்திடுவோம் காண்!

முடிவு நாள் : 1—7—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

# முதலும் முடிவும்



**பொ**ழுது விடிந்தும் தலையைத் தூக்காமலே படுத்திருந்த ராகவனுக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. விடிந்திருக்கும் பொழுது மாதக் கடைசியில் முதல் தேதியை எட்டிப்பிடிக்கும் வரையிலும் சமாளிக்க வேண்டிய செலவுகள் என்னென்ன என்பதெல்லாம் கண்களைத் திறந்ததும் நினைவுக்கு வரும்போது, உள்ளம் குளிரவா செய்யும் ?

போர்வையை உதறிவிட்டுக், கட்டிலிலேயே உட்கார்ந்து கொண்டான் ராகவன்.

ஜன்னல் வழியாக வெளியே பார்க்கும்போது, முதலில் அந்தக் காட்சிதானா கண்ணில் பட வேண்டும்?

இந்த வீட்டிலே சம்பாதித்துப் போடுபவன், இங்கே பல் துலக்காமல் உட்கார்ந்திருக்கும் போது, வழிநடையில் கால்நீட்டிப் பாங்காக அமர்ந்து, ஆவிபறக்கும் இட்டலிகளை ரசித்து உண்கிறாள் வேலைக்காரி ரெங்கம்மாள்.

இவளைக் கண்டால் ராகவனுக்குக் கட்டோடு பிடிக்காது. யாரையுமே மரியாதையோடு பேசவே ரெங்கம்மாளுக்குத் தெரியாது. இவள் மீது கமலத்துக்கு அவ்வளவு பிரியம். உண்பது எதையும் இவளுக்குக் கொடுக்காமல் இருக்க மாட்டாள்.

எதற்கும் ஒரு வரைமுறை இருக்க வேண்டாமா ?

" கமலம்மா . . . ஐயா என்ன எந்திரிச்சு கட்டில்லேயே குந்தி இருக்காரு? நேரமாகலையோ? " என்று இவன் காது கேட்கவே கேட்கிறாள்.

இவளுக்கென்ன அக்கறை? வேலைக்காரி எதைப் பேசவேண்டுமென்ற அளவு இல்லையா? முதலில் இந்தச் சனியனை ஒழித்துக்கட்ட வேண்டும்.

ராகவன் பற்களைக் கடித்துக் கொண்டான்.

அப்போது, ' என்ன அப்படியே உட்கார்ந்திட்டீங்க ' என்று கேட்டுக் கொண்டே கமலமும் அறைக்குள் நுழைந்தாள்.

" காலையிலே ரெங்கம்மா சொல்லித்தானா நான் எழுந்திருக்கணும். வர வர ரொம்ப உச்சிக்குப்போறாப்பிலே இருக்கு" என்றான் ராகவன் கோபத்தை உள்ளடக்கிக்கொண்டு.

" என்னிக்கும் தான் ரெங்கம்மா பேசறா" என்றாள் கமலம்.

"இதுக்கு முதல்லே முடிவு கட்டியாகணும் "

" எதுக்கு ? "

" உனக்கும், இந்த ரெங்கம்மாளுக்கும் இருக்கும் உறவுக்கு" என்று தணிவான குரலில் சொல்லி விட்டு எழுந்தான் ராகவன்.

" கண்ணைத் திறந்ததுமே இதைத்தான் ஆரம்பிக்கணுமா?" என்று சொல்லிக் கொண்டே பின்னால் வந்தாள் கமலம்.

அவன் சொன்னது, குழாயடியில் நின்ற ரெங்கம்மாளுக்குக் கேட்டிருக்க வேண்டும்; அவள் அங்கிருந்தே ஆரம்பித்தாள்.

" காலங்காத்தாலே கண்ணைத் தொறந்ததுமே ஐயா என்ன துர்வாச முனியாட்டமா நிக்கிறாரு? பல்லு தேய்க்காட்டியும் பரவாயில்லை. காப்பியைக் கொடும்மா கமலம் " என்று ரெங்கம்மாள் சொன்னதைக் கேட்டதும் ராகவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"இந்தா ரெங்கம்மா –நீ வேலைக்காரியா லட்சணமா இருந்தா இரு. இல்லை, இப்பவே நின்னுக்கோ" என்று சொல்லி, தைரியமாகவே அவளுக்கு முன்பாகப்போய் நின்றான்.

" ஐயா . . போகட்டும் போ! உன் வீட்டு வேலை இல்லையின்னா, நான் செத்தா பூடுவேன்? என்னமோத்தான் அலட்டிக்கிறே! இந்தப் பொண்ணு முகத்துக்குத் தான் இங்கே வந்து நிக்கிறேனாக்கும்" என்றாள் ரெங்கம்மாள் நீட்டி முழக்கி.

" ரெங்கம்மா . . பேசாமத் தான் இருமே. காலையிலே உன்னோட பெரிய வம்பாப் போச்சு " என்று இடையிலே புகுந்து அலுத்துக்கொண்டாள் கமலம்.

" நீ யாருக்காகவும் இங்கே வந்து நிக்க வேணும். முதல்தேதி வந்து சம்பளத்தை வாங்கிக்கிட்டுப் போ" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான் ராகவன்.

" நீயும் எத்தனையோ வாட்டி இந்த

மாதிரித்தான் சொல்லிக் கிட்டே இருக்கே'' என்று சொல்லி விட்டு, அவனது சொல்லைப் பொருட்டாகக் கொள்ளாமலே, காய்கறிப் பையை எடுத்துக் கொண்டு கடைக்குப் போய் விட்டாள் ரெங்கம்மாள்.

அவள் தலைமறைந்ததும், ஆங்காரத்தோடு கமலத்தின் மீது பாய்ந்தான் ராகவன்.

'' எல்லாம் நீ கொடுக்கிற இடம்தான். நாளையிலிருந்து ரெங்கம்மா இங்கே வர வேண்டாம். கண்டிப்பாகச் சொல்லிப்போடு '' என்ருன் கொதிப்புடன்.

'' அதான் நீங்களே சொல்லிட்டிங்களே— என்னமோ பாசத்தோட பழகுரு. நாலு மாசமா ரெங்கம்மாளுக்குச் சம்பளமே கொடுக்கலே. அதை மறந்திட்டிங்க '' என்று சொல்லி அடுத்த பானத்தைத் தூக்கிப் போட்டாள் கமலம்.

அத்தோடு பாத் ரூமிற்குள் நுழைந்து விட்டான் ராகவன்.

மனது கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

அவளுக்குக் கொடுக்க வேண்டிய பணம் தள்ளியேதான் போய் விட்டது. வரும் சம்பளத்தில் அவளுக்குக் கொடுத்து விட்டால், வேறெதில் வெட்டு விழ முடியும்?

முதல் தேதிக்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்குபோது இதென்ன கவலை? இப்போது வீட்டுக்கும் கைச் செலவுக்குமாக பத்து ரூபாய்களுக்கு மேலாக வேண்டுமே, யாரிடம் கேட்பது?

ராகவன் தலையில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டான்.

அவன், குளித்து விட்டுவெளியே வந்த போது, சரியாகத் தபால் காரனும் '' சார் தந்தி '' என்று சொல்லிக் கொண்டே படியேறி வந்து நின்ருன்.

'' தந்தியா ?'' ராகவனுக்குத் திகைப்பாக இருந்தது.

இந்த நேரத்தில் எது வந்து நிற்கப் போகிறதோ?

கமலமும் படபடப்புடன் பக்கத்தில் வந்தாள்.

ராகவன் அவசரத்துடனே தந்தியைப் பிரித்தான்.

தூத்துக்குடியில் அவனது தாத்தா—தனது எண்பத்தியேழாவது வயதில் காலமாகி இருந்தார்.

'' என்னங்க ? '' என்று கலவரத்துடன் கேட்டாள் கமலம்.

'' தாத்தா— போய்ச்சேர்ந்திட்டாராம். நாம எப்ப குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு தூத்துக்குடிக்குப் போய்ச் சேர்றது '' என்று கவலையோடு சொன்னுன்.

கமலத்துக்கு அழுகை அழுகையாக வந்தது.

ராகவனின் கண்கள் கலங்கின.

தாத்தாவுக்காக அல்ல. 'உடனடியாகப் புறப்படவேண்டுமே, ஆகவேண்டிய செலவுகள் எவ்வளவு, அதற்கு என்ன செய்வது, என்ற கவலைதான் முன்னுக்கு நின்றது.

'' என்னங்க— திகைச்சுப் போய் நின்னுட்டீங்களே! இப்பவே வண்டியிருக்கா ?'' என்று பெட்டிக்குள் பணத்தை வைத் திருப்பவளைப் போலக் கேட்டு, அப்போதே புறப்பட ஆயத்தமாகி நின்ருள் கமலம்.

'' வண்டி இருக்கு. அந்தா இந்தான்னு குறைந்தது இருநூறு ரூபாயாவது வேணுமே'' என்று கவலையுடன் சொன்னுன் ராகவன்.

குளித்தவுடன் இருந்த பசி அடங்கிப் போய்விட்டது அவனுக்கு.

'' யாரு கிட்டேயாவது வாங்குங்க '' என்ருள் கமலம்.

ராகவன் சோர்வுடன் நாற்காலியில் உட்கார்ந்து விட்டான்.

யாரிடம் கேட்பது? பத்துப் பதினைந்து புரட்டுவதென்பதே திகைப்பாக இருந்தபோது, மாதக் கடைசியில் நூற்றுக்கணக்கில் யாரிடம் கைமாற்ருக வாங்க முடியும் ?

நினைத்து, நினைத்துப் பார்த்த பொழுது, அவனுக்கு நம்பிக்கை ஏற்பட வில்லை.

தூத்துக்குடியில் அவனது உறவினர்களும் செழிப்பாக இல்லை. எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு, பெரிய இழவுக்கென அங்கே போகும்போது, இருக்கும் தரித்திரத்தைக் காட்டிக் கொண்டிருக்க முடியுமா ?

திடீரென்று அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?

''என்னங்க இப்படி உட்கார்ந்திட்டிங்க?'' என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் வந்து நின்ருள் கமலம்

ராகவன் ஏறிட்டுப் பார்த்தான்.

அவனது பார்வை, அவளது கழுத்தில் சுருண்டு கிடந்த தாலிச் சரட்டின் மீது பதிந்தது.

கழுத்து நிறையவே போட்டிருந்தாள். ஒவ்வொன்ருக பேங்கிலும், மார்வாடி கடையிலும் அடைக்கலம் புகுந்துள்ளன. எஞ்சி இருப்பது இது ஒன்றுதான், தாலியோடு கோத்த பொற்சரடு. தாலியை ஒதுக்கிளுல், நான்கு பவுன்களாவது தேறும். இருநூறுக்கு மேலேயே கிடைக்கும். அவசரத்துக்கு மார்வாடியிடமே வாங்க வேண்டியதுதான்!

''பேசாம இருந்தா எப்படி'' என்று கமலமே ஆரம்பித்தாள்.

''வேறே ஒரு வழியும் தோணலே கமலம்''—அவன் தொடர்ந்தான்.

''அப்படின்ரு''

''அவசரத்துக்கு, இருக்கிற சங்கலியை வைச்சுத்தான் பணம் வாங்கணும்.''

கமலம் ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டாள்.

'இத்தனை காலத்துக்குப் பிறகு சொந்த ஊருக்கு வெறுங் கழுத்தோடவா போறது?' என்பதை நினைத்தாலும் வெளியிட்டுச் சொல்லவில்லை.

''என்ன கமலம்?'' என்ருன் அவன் மேலும்.

அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

''கழட்டித்தாரேன்'' என்று மட்டுமே சொல்லிவிட்டுத் திரும்பினுள்.

ராகவன் அப்படியே அமர்ந்திருந்தான்.

கமலத்தின் மீது அவன் உயிரையே வைத்திருக்கிருன். அதையொன்றும் குறைத்து மதிப்பிட முடியாது. 'அவளுக்குப் பொன் அணிகளாகப் பூட்டிப் பார்க்க வேண்டும்' என்பது அவனது அடங்காத ஆசை.

என்ன செய்வது?



சிக்கனமாக வாழ்க்கையை வகுத்துக்கொள்ள அவனும் அடிக்கடி முயற்சிப்பதுண்டு. எப்படி யெப்படியோ இடையிடையே செலவுகள் வந்துவிடுகின்றனவே!

ராகவன் திரும்பிப்பார்த்தான்.

படுக்கையறையில், பெட்டியை முன்ஞல் தூக்கி வைத்து, கமலம் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

சங்கிலி கழுத்திலேயே இருக்கும்போது, அங்கே எதைத் தேடுகிருள்?

பொறுமை இழந்த ராகவன்,' என்ன கமலம்?' என்று கேட்டுக்கொண்டே, அவளுக்குப் பக்கமாகச் சென்ருன்.

குனிந்திருந்த கமலம், நிமிர்ந்து கணவனைப் பார்த்

தாள். அவள் விழிகள் நீரில் மூழ்கி இருந்தன.

''தாலியைக் கோத்துக் கட்டிக்க மஞ்சள் கயிறு வேண்டாமா? அதைத்தான் தேடி எடுத்தேன்'' என்று சொல்லி விட்டு எழுந்தாள் கமலம்.

ராகவனுக்கு நெஞ்சு நடுங்கியது. ஒன்றும் சொல்லாமலே திரும்பி முன் கட்டுக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்தான்.

அதற்குள் காய்கறிப் பையோடு ரெங்கம்மாளும் வந்து விட்டாள்.

ராகவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

காலையில் கண் திறந்ததும் இவள் முகத்தில் தானே விழித்தான்! உடனடியாக, நெடுந் தூரப் பயணம் நேர்ந்திருக்கிறது.

ரெங்கம்மாளும் விறைப்பாகவே அவனைக் கடந்து வீட்டிற்குள்ளே போய்விட்டாள்.

இவளுக்கு, கமலம் சொல்ல வேண்டியதைச் சொல்லுவதில் சிறிது நேரம்தான் கழிந்திருக்கும்; உள்ளிருந்து ரெங்கம்மாளின் குரல் கேட்டது.

''நல்ல பொண்ணு நீ! வெள்ளிக்கிழமையும் அதுவுமாகத் தாலிச் சரட்டைக் கழட்டுவியா? நல்லா பொழச்சிங்க போங்க!'' என்று சொல்லி, கமலத்தை அவனுக்கு முன்னால் இழுத்துவந்து விட்டாள் ரெங்கம்மாள்.

எப்போதுமே, இந்த அறிவு கெட்டவளுக்குத்தான் சந்தர்ப்பமே தெரியாதே!

''எங்க பாடு-நாங்க என்னமோ செய்யிறோம்! உன் வேலை எதுவோ அதைப் பாரு'' என்று எரிச்சலோடு சொன்னான் ராகவன்.

''இந்தக் கோபந்தானே மிச்சமாகி இருக்கு உனக்கு? இந்த மாதிரிச் சமயத்துக்கு வேணும்னு.... அப்பப்ப கொஞ்சமாணும் சேர்த்து வச்சிருக்கணும். எவ்வளவு வந்தாலும் உன்னோட ஆட்ட பாட்டமெல்லாம் பத்துத் தேதியோட தீர்ந்து போகுதே! நானும் பக்கத்திலே தானே இருக்கேன்!'' என்று மேலும் முழக்கினாள் ரெங்கம்மாள்.

''ரெங்கம்மாள் நீ பேசாமத் தான் இருமே. இப்ப அவசரமா இருநூறு ரூபா வேணுமே, அவசரத்துக்கு வேறே என்ன செய்யறது?'' என்ற கமலம் சங்கிலியைப் பிரிக்க ஆரம்பித்தாள்.

ரெங்கம்மாள் அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

''சங்கிலியைப் போட்டுக் கோம்மா. ரெண்டு நூறு தானே இப்ப வேணும்?'' என்று கேட்டாள்.

கமலம் வியப்புடன் தலையசைத்தாள்.

''நீங்க புறப்படுங்க. கொஞ்ச நேரத்திலே பணம் கொண்டாந்து தாரேன்.''

ராகவன் பரபரப்புடன் திரும்பினான். ரெங்கம்மாளிடம் இவ்வளவு பணம் இருக்க முடியுமா? கேலி செய்கிறாளா?

''என்னய்யா பாக்குறே? உன்னைப்போல், நாளை வேணும் பிறகு வேணும்னு நினைக்காம வர்றதையெல்லாம் உதறிட்டு நின்னா, இப்ப அவசரத்துக்கு மொத்தமா வந்து நிக்குமா? நாலு வீட்டுலே வேலை செய்யிறேன். எப்படியும் ''ரெண்டு வீட்டுப் பணத்தை மாசா மாசம் தபாலாபீசிலே போட்டுக் கிட்டே வாரேன். அதிலே இருந்துதான் இப்பப் பணத்தை எடுக்கணும்'' என்று, மேலும் சொன்னாள் ரெங்கம்மாள்.

ராகவன் வியப்போடு அவளைப் பார்த்தான்.

ஒன்றும் தெரியாதவள் என்றிருக்க, இவனை ஒன்றும் தெரியாதவனாக்கி விட்டாளே!

''உனக்காவது முடியுது! எங்களாலே முடியலையே! இப்படித்தான் ஏதாவது ஒரு செலவு வந்துசேருது'' என்றாள் கமலம்.

''செலவு வரத்தாம்மா செய்யும். சீட்டுப்போடுற மாதிரி, மாசத்துக்கு இவ்வளவுன்னு, அதையும் ஒரு செலவா நினைச்சுத்தான் சேர்த்துவைக்கணும். சட்டுன்னு புறப்படுங்க; தாமதிக்கப்படாது. நான் இப்ப வந்திருவேன்'' என்று சொல்லிவிட்டு அவசரத்துடனே போய் விட்டாள் ரெங்கம்மாள்.

* * *

வீட்டு வாசலிலிருந்து டாக்சி புறப்பட்டது.

கமலம் திரும்பிப்பார்த்தாள். ரெங்கம்மாள் வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவளது கண்கள் கலங்கின.

''ரெங்கம்மா ஏன் என் மேலே இவ்வளவு பாசமா இருக்கா தெரியுமா?'' என்று கேட்டாள்.

ராகவன் திரும்பினான்.

''அதுக்குத் தனியா வேறே காரணம் இருக்கா?'' என்றான்.

''என் வயசிலே ரெங்கம்மாளுக்கு ஒரு மகள் இருந்தாளாம். கட்டிக் கொடுக்கிறதுக்கு முன்னாலேயே செத்துப்போயிட்டாளாம். நான் அந்தப் பொண்ணாட்டமே இருக்கேனாம். அதான் ரெங்கம்மாளுக்கு என் மேலே இத்தனை பாசம்'' என்ற கமலம் குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ராகவனது கண்களும் கலங்கின.



### நின்று கொண்டே தூங்கும் யானைகள்

ஆப்பிரிக்கக் காடுகளிலுள்ள யானைகள் நின்று கொண்டே தூங்குவது வழக்கம். இந்திய யானைகள் அப்படியல்ல. பிற விலங்குகளைப் போல் படுத்தபடி உறங்கும்.

ஆப்பிரிக்க யானைகள் இந்திய யானைகளைவிடப் பெரியவை, உயரமானவை. அதோடுஅவற்றிற்கு இந்திய யானைகளை விடக் காதுகள் மிகப் பெரியவை. ஆனால் ஆப்பிரிக்க யானைகளை விட இந்திய யானைகளைப்பிடித்துப் பழக்குவது எளிது.

யானை ஒரு நாளைக்கு சுமார் 200 லிட்டர் (100 படி) தண்ணீர் குடிக்கும்.

# மாம்பழம் உண்ண வந்த மாஸ்கோ மங்கையர்

“சார்! மாஸ்கோவிலிருந்து உங்களுக்கு ‘டிரங்கால்’ வந்திருக்கு! ஐயா, உங்களைக் கூப்பிடுகிறார்!” என்று கூறிக்கொண்டே ஓடி வந்தார் கடை நிலை ஊழியர் செல்லையா.

“எனக்கா! மாஸ்கோவிலிருந்தா?” என்று கேட்டுக்கொண்டே நாற்காலியை விட்டு எழுந்து ஓடினேன்.

மாஸ்கோவிலிருந்து எனக்கு ‘டிரங்கால்’ வந்திருக்கு என்று செல்லையா கூறியதைக் கேட்டவுடனே அலுவலகத்தில் இருந்த அத்தனை ஊழியர்களும் என்னவோ, ஏதோ, என்ற ஆச்சரியத்துடன் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர். அலுவலரின் கையில் இருந்த ‘ரிசீவரை’ வாங்கி “இளங்கோ ஸ்பீக்கிங்” என்றேன்.

“குட்மார்னிங் மிஸ்டர் இளங்கோ! மிஸ் வாலண்டினா ஸ்பீக்கிங். ஐ ஹோப் யூ வில் ரிமெம்பர் மீ!” என்ற குரல் கேட்டது.

வாலண்டினு என்பது யார் என்ற நினைவு எனக்கு உடனே வரவில்லையாதலின், சற்று யோசித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய மௌனத்தை அறிந்த அந்த மாது மீண்டும் ''மிஸ் வாலண்டினு, புரொபசர் ஆப் எக்கனுமிக்ஸ், மாஸ்கோ யுனிவர்சிட்டி, ஸ்பீக்கிங்'' என்று கூறினுர்.

'புரொபசர்' என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே எனக்கு அவரைப் பற்றிய நினைவு வந்துவிட்டதால், ''குட்மார்னிங் டாக்டர்! டு யூ வாண்ட் எனி ஹெல்ப் ஃப்ரம் மீ, டாக்டர்?'' என்று கேட்டேன்.

''எஸ்! தேங்யூ! வீ வாண்ட் டு டேஸ்ட் தி மோஸ்ட் டெலிஷியஸ் புரூட்ஸ் ஆப் யுவர் தமில் நாட், பர்ட்டிகுலர்லி மேங்கோஸ்! வீ பைவ் மெம்பர்ஸ் ஆர் கமிங் டு மெட்ராஸ் ஆன் டொண்டியத், மே 1971. வீ வில் பி வித் யூ பார் எபௌட் டென் டேஸ். வில் யூ பிளீஸ் மேக் நெசசரி அரேன்ஞ்மெண்ட் டு டேஸ்ட் ஆல் வெரைட்டீஸ் ஆப் புரூட்ஸ் அண்டு டு விசிட் சம் புரூட் கார்டன்ஸ்?'' என்று கூறினுர்.

''எஸ் டாக்டர்!'' என்று பதிலளித்தேன்.

''ஐ வில் ரைட் எ டிடெய்ல்டு லெட்டர் டுமாரோ, தேங் யூ வெரி மச்'' என்று கூறிமுடித்து விட்டார்.

ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினேன். எல்லாரும் என் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''உன் முகத்தில் ஏனிப்படி வியர்த்துக் கொட்டுகிறது? யார் பேசியது?'' என்று கேட்டார் அலுவலர்.

கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டே ''மிஸ் வாலண்டினு.. இல்லே.... இல்லே! டாக்டர் வாலண்டினு பேசினுர்கள்'' என்றேன்.

''மிஸ் என்கிருய்; டாக்டர் என்கிருய்; என்ன உளறுகிருய்? யாரந்த வாலண்டினு? உனக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டு விட்டுத் தனக்கே உரிய குறும்புத்தனத்துடன் என்னை நோக்கினுர் அலுவலர்.

என்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த அலுவலகத் தோழர்களும், தோழியர்களும் அலுவலர் கேட்டதை ஆமோதிப்பது போல் என்னைக் குறும்புத் தனமாகவே நோக்கினர்.

''சார், டாக்டர் வாலண்டினு மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றுகிருர். அவர்களும், மற்றும் நான்கு பேரும் 20-ஆம் தேதி சென்னை வருகிருர்களாம். தமிழ்நாட்டின் எல்லா வகையான பழங்களையும்— அதுவும் குறிப்பாக மாம்பழங்களைச் சுவைத்துப் பார்க்கவும், பழத் தோட்டங்களைப் பார்வையிடவும் அவர்களுக்கு ஆசையாம். ஒரு பத்து நாள் தமிழ்நாட்டில் தங்கப் போகிருர்களாம். அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி இருக்கிருர்கள். நாளைக்கு விவரமாக லெட்டர் எழுதுவதாகச் சொல்லி விட்டு ரிசீவரை வைத்து விட்டார்கள். மாதக் கடைசியில்-கையில் காசில்லாத நேரத்தில் வருகிருர்களே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் எல்லோரும் என்னைக் கிண்டல் செய்கிறீர்களே!'' என்றேன்.

''ப்பூ! இவ்வளவுதானு சமாச்சாரம்?'' என்ருர் அலுவலர்.

''அது சரி, உன்னை அவர்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று ரெங்கனுதன் கேட்டார்.

''நல்ல பாயிண்டான கேள்வியப்பா!'' என்று கூறிவிட்டு அலுவலர் என்னைப் பார்த்தார்.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்பு! தேனும்பேட்டையில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு அந்த அம்மையார் வந்திருந்தார்கள். நம்ம துறையின் சார்பில் ஏற்பாடு செய்திருந்த அரங்கத்தைப் பார்வையிட்டு விட்டு என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார். அக் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி விளக்கினேன். கடைசியாக என்னிடம் அந்த அம்மையார் பழங்களைப் பற்றிக் கேட்டார். அதற்கும் பதிலளித்தேன். ''தற்பொழுது மாம்பழம் கிடைக்காது என்ருர்களே, இந்த மாம்பழங்கள் எப்படிக் கிடைத்தன!'' என்ருர். 'இது ஆப் சீசன் வெரைட்டி'' (off-season) என்று கூறி விளக்கினேன். ''ஒரு மாம்பழம் விலைக்குக் கொடுப்பீர்களா?'' என்று கேட்டார். ''மாம்பழங்கள் விற்பனைக்கு அல்ல; பார்வைக்காகவே!'' என்றேன். அதன்பின் அந்த அம்மையார் எனக்கு நன்றி சொல்லிவிட்டு எனது முகவரியையும் பெற்றுக் கொண்டுபார்வையாளர்குறிப்புப் புத்தகத்தில் ஏதோ எழுதிவிட்டு, அடுத்த அரங்கத்திற்குச் சென்று விட்டார். சற்று நேரத்திற்குப் பின்பு அந்த அம்மையார் என்ன எழுதியிருக்கிருர் என்ற ஆர்வத்துடன் பார்வையாளர் குறிப்புப் புத்தகத்தைத் திறந்து பார்த்தேன். நம்ம அரங்கத்தைப் பற்றி மிகவும் பிரமாதமாகப் புகழ்ந்தும் நான் கொடுத்த விளக்கங்களைப் பாராட்டியும் எழுதி, கையெழுத்துப் போட்டிருந்தார். முகவரியைப் பார்த்தவுடன் தான் அந்த அம்மையார் ஒரு டாக்டர், பேராசிரியர் என்று தெரிந்து கொண்டேன். அந்த அம்மையார் ரஷியாவிலிருந்து வந்தவர் என்பதை அறிந்தவுடன், அவருக்கு ஒரு மாம்பழம் கொடுக்க முடியவில்லையே என்று நினைத்து வருந்தினேன். அந்த அம்மையார் தான் என் முகவரியைப் பத்திரமாக வைத்திருந்து, இன்று தொலைபேசியின் மூலம்என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார்'' என்று விளக்கினேன்.

''இளங்கோ! பணம் இல்லை என்று கவலைப்படாதே! வெளி நாட்டுக்காரர்கள் உனக்குச் செலவு வைக்க மாட்டார்கள். நம்ம இயக்குநர் அவர்களிடம் சொல்லி 'ஆன் டியூட்டி'' யிலேயே நீ அவர்களுடன் செல்ல அனுமதி வாங்கித் தருகின்றேன். ஆனுல் நீ அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தயக்கமின்றிப் பதிலளிக்க வேண்டும். நீ சரியாகப் பதில் கூறவில்லையெனில், அவர்கள் உன்னைப் பற்றியும், நமது துறையைப் பற்றியும், நமது நாட்டைப்பற்றியும் குறைவாக நினைத்து விடுவார்கள். மாம்பழங்களின் பெருமை மாஸ்கோவில் பரவினுல் விரைவில் ரஷியாவுக்கு நம் நாட்டு மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்படும். அதனுல் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். எனவே, நீ மேற்கொள்ள விருக்கும் பொறுப்பு மிக முக்கியமானது.

அதை மனத்தில் வைத்து, முன் கூட்டியே தயாராகிக் கொள்!'' என்றார்.

''ஆகட்டும் சார்'' என்றேன்.

மூன்றுநாள் கழித்து மாஸ்கோ விலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அந்த அம்மையார் தன்னுடன் மனைஇயல் பேராசிரியர் டாக்டர் செவட்லானா, அயல் நாட்டு வர்த்தக இயக்குநர் டாக்டர் மேரி, பிரபல மருத்துவர் குமாரி எலினா, தோட்டக் கலை ஆராய்ச்சி மாணவி குமாரி புளு ஐ ஆகியோர் வருவதாகவும் என்னென்ன செய்யவேண்டும் என்பதையும் விளக்கி எழுதியிருந்ததுடன், இதுபற்றிச் சென்னையிலுள்ள ரஷிய தூதரகத்திற்குத் தபால் எழுதியுள்ளதாகவும், அவர்கள் இது பற்றித் தொடர்பு கொள்வார்கள் என்றும் எழுதியிருந்தார்.


அன்று மாலையே ரஷிய தூதரக அலுவலர் ஒருவர் என்னைச் சந்தித்து, டாக்டர் வாலண்டினா குழுவினருக்காக ஏற்பாடுகளைச் செய்தார்.

இருபதாம் தேதி காலை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நானும், ரஷிய தூதரக அலுவலர்களும் இரு கார்களுடன், டில்லியிலிருந்து வரும் விமானத்திற்காகக் காத்திருந்தோம். விமானம் வந்தது. டாக்டர் வாலண்டினா முன்னால் வந்தார்கள். அவரைத் தொடர்ந்து நான்கு பெண்களும் வந்தார்கள். ரஷிய தூதரக அலுவலர் அவர்கள் ஐவருக்கும் மாலை அணிவித்தார். நான் ஐந்து பேர்களுக்கும் பூச்செண்டுகளைக் கொடுத்தேன்.

டாக்டர் வாலண்டினா, எங்களை ரஷ்யப் பெண்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அறிமுகம் முடிந்து, ரஷிய தூதரகத்திற்கு வந்து கொண்டிருந்தோம். வரும் வழியிலேயே புரோகிராம் பற்றிய பேச்சு எழுந்தது. டாக்டர் வாலண்டினா சில சந்தேகங்களைக் கேட்டார். நான் அவைகளுக்கு விளக்கமளித்தேன். புரோகிராம் படியே தொடரலாம் என்றார். அதன்பின் அவர்களுக்கென்று ஏற்பாடு செய்திருந்த பிரபல ஓட்டலுக்குச் சென்று அவர்களைத் தங்கச்செய்தோம். ''நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்; நான் அலுவலகத்திற்குச் செல்கிறேன்; நாளை காலை 8 மணிக்கு வந்து விடுகின்றேன்; சரியாக 9 மணிக்கு நாம் புறப்படுகிறோம்'' என்றேன்.

மறுநாள் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டோம். ரஷிய தூதரக அலுவலர்கள் ''விஸ் யூ ஹேப்பி ஜெர்னி'' என்று வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தனர். பின் வண்டியில் பெட்டி படுக்கைகளை வைத்துவிட்டு, முன் வண்டியில் 6 பேர்களுமே அமர்ந்து சென்றோம்.

வேலூரில் ருமானி மாம்பழம்



சாப்பிட்டுவிட்டு, கோட்டையையும் பார்த்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். சற்று நேரத்திற்குப் பின், ''எவ்வளவு காலமாக இந்தியாவில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது? வரலாற்றுச் சான்றுகள் உள்ளனவா?'' என்று டாக்டர் மேரி கேட்டார்.

''முத்தமிழ் நாட்டின் முக்கனிகளில் ஒன்றான மா, பழங்களின் மன்னனாகவும் விளங்குகின்றது. டி. கான்டோலி (Candolle) என்ற ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி 4,000 ஆண்டுகளாகவே இந்தியாவில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கி.மு. 327-ஆம் ஆண்டில் பேரரசன் அலெக்சாந்தர் சிந்துவெளி பள்ளத்தாக்கில் மாந்தோப்புகளைக் கண்டதாக வரலாறு கூறுகிறது. கி.மு. 110-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது என்று கருதப்படும் 'பர்கட்' கல்தூணில் காணப்படும் விவரங்களும், மா சாகுபடி பற்றிக் குறிப்பிடுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களிலும், வடமொழி இலக்கியங்களிலும், 'ரிக்' வேதத்திலும் மாம்பழங்களின் சிறப்புப் பற்றிச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

'பாகியான்', 'யுவான்சுவாங்' என்ற சீன யாத்திரிகர்களும் மா பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியாவில் வெளியே உள்ள மக்களுக்கு மா பற்றித் தெரிவதற்கு 'யுவான்சுவாங்' தான் காரணம் என்றால் மிகையல்ல.

மொகலாயப் பேரரசர்களின் காலத்திலேயே மா சாகுபடி மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. அவர்களே பெரிய பெரிய மாந்தோட்டங்களை ஏற்படுத்திச் சிறந்த ரகங்களை நடும் பழக்கத்தைத் தூண்டினர்.

பேரரசர் அக்பர் (கி.பி. 1556 முதல் 1605) 'தர்பாங்கா' அருகில் 1,00,000 மாங்கன்றுகளை நட்டார். அந்த மாந்தோட்டத்தை 300 ஆண்டுகளுக்குப் பிறகு பார்வையிட்ட 'சார்லஸ் மேரிஷ் (Charles Maries) என்பவர் அங்கிருந்த மரங்களில் சில, நன்கு காய்க்கும் நிலையில் இருந்தது கண்டு வியந்து குறிப்பிட்டுள்ளார்.

அக்பரின் காலத்தில் எழுதப்பட்ட 'அயின்-ஈ-அக்பரி' என்ற நூலில் (கி.பி. 1590) மாவின் வகைகள், குணங்கள் பற்றிய விளக்கங்கள் நிறையக் காணப்படுகின்றன. இதனால் 16-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே, இந்திய மக்களுக்கு மா சாகுபடியும், வெவ்வேறு மா வகைகளின் குணங்களும் தெள்ளத் தெளியத் தெரிந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது'' என்றேன்.

''மா வெளிநாடுகளுக்கு எப்பொழுது பரவியது? எந்த நாட்டில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது?'' என்று கேட்டார் டாக்டர் செவட்லானா.

"பதினாறும் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்களால், தூரக் கிழக்கு நாடுகளுக்குக் கடல் வழி கண்டு பிடிக்கப்பட்டபின்பே, மேற்கத்திய நாடுகளுக்கு மா பரவியுள்ளது. முதலில் போர்ச்சுகீசியர்கள் கோவாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவிற்கு மாம் பழங்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். அதன்பின் அங்கிருந்து கி.பி. 1700-ஆம் ஆண்டு வாக்கில் பிரேசில் நாட்டிற்கும், பிறகு 40 ஆண்டுகள் கழித்து பார்படாஷ் நாட்டிற்கும் மாம் பழங்கள் போர்ச்சுகீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"ஸ்பானிஸ் கடற்பயணிகள் மாம்பழங்களை இந்தியாவிலிருந்து மணிலாவிற்குக் கொண்டு வந்தனர். அவர்களே பிலிப்பைன்சு நாட்டிலிருந்து மாவை பதினேழாம் நூற்றாண்டில் மெக்சிகோவிற்குக் கொண்டு சென்றனர். மெக்சிகோவிலிருந்து 1809-ல் ஹாவாய் தீவுக்கும், 1861-ல் புளோரிடாவுக்கும், 1880-ல் கலிபோர்னியாவுக்கும் மா பரவியது.

"தற்பொழுது இந்தியா, பர்மா, இந்தோனேசியா, ஜாவா, தாய்லாந்து, மலேசியா, சிலோன், பிலிப்பைன்சு முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும், எகிப்து, இஸ்ரேல், தென் ஆப்ரிக்கா, மெக்சிகோ, புளோரிடா, கலிபோர்னியா, குயின்ஸ்லாந்து ஆகிய மேற்கத்திய நாடுகளிலும் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

"ஆனால், இந்தியாவில்தான் பெரும்பரப்பிலும், வணிக முறையிலும் மா சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது."

"மாவில் எத்தனை வகைகள் உள்ளன? தமிழ்நாட்டில் என்னென்ன வகைகள் முக்கியமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன?" என்று கேட்டார் தோட்டக் கலை ஆராய்ச்சி மாணவியான குமாரி நீலக்கண்ணி ('மிஸ் புளூ ஐ' அவர்களைத்தான் நான் குமாரி நீலக்கண்ணி என்று கூப்பிட்டு வந்தேன்).

"தென் இந்தியாவில் 350-க்கும் மேலான மா வகைகள் சாகுபடி செய்யப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் எங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பெங்களூரா, பங்கன பள்ளி, நீலம், அல்பான்சோ, ருமானி, என்ற 5 ரகங்களுமே வணிக முறையில் சாகுபடி செய்வதற்குச் சிறந்தவை என்று வேளாண்மைத்துறை பரிந்துரைக்கிறது. ஆனால், சுவை கருதி, பீட்டர், மல்கோவா, ஹிமாயுதின், பாதிரி, பஞ்சவர்ணம் என்ற ஐந்து சிறப்பு வகைகளையும் (choice varieties) சாகுபடி செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது. அத்துடன் கே.ஓ. 7/5, கே.ஓ. 9/3, கே. ஓ. 11/13 என்ற மூன்று பண்பகக் கலப்பு வகைகளும் (Hybrids) தமிழ் நாட்டிற்கு ஏற்றதாகப் பரிந்துரை செய்யப்படுகிறது" என்று கூறினேன்.

"தமிழ்நாட்டிற்கு ஏற்றதாகப் பரிந்துரைக்கப்படும் 13 ரகங்களையும் எங்குப் பார்க்கலாம்?" என்று மீண்டும் கேட்டார் குமாரி நீலக்கண்ணி.



"பரிந்துரைக்கப்படும் 13 ரகங்களில் 10 ரகங்களை இன்னும் சில நிமிடங்களில் பார்க்கலாம்; நீலம், பாதிரி, பஞ்சவர்ணம் என்ற 3 ரகங்களையும் வேறு இடத்தில் காண்பிக்கின்றேன், என்று கூறி முடிப்பதற்கும், சேலத்திலிருந்து 20 மைல் தூரத்தில் உள்ள என்னுடைய நண்பனுக்குச் சொந்தமான மாந்தோட்டத்தை அடைவதற்கும் சரியாக இருந்தது.

எங்கள் வருகைக்காக எதிர் பார்த்து என் நண்பன் மாந்தோட்டத்து வாசலிலேயே காத்திருந்தான். ரஷியப் பெண்களைப் பார்ப்பதற்காக அங்கு ஒரு பெரிய கூட்டமே கூடியிருந்தது. காரை நிறுத்தச் சொல்லி, எல்லாரும் இறங்கினோம். என் நண்பனை ரஷியப் பெண்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தேன். என் நண்பன் எங்களை மகிழ்ச்சியுடன் மாந்தோப்பிற்கு அழைத்துச் சென்றான். ஒரு பெரிய மரத்தின் அடியில் ஒரு பெரிய மேசையைப் போட்டு அதைச் சுற்றியும் பத்து நாற்காலிகளைப் பரப்பி வைத்திருந்தான். அந்தத் தோட்டத்தில் உள்ள 10 வகை மாம் பழங்களையும்தனித்தனித் தட்டில் நிரப்பி வைத்திருந்தான். அத்துடன் நான் முன்பே எழுதியிருந்தபடி என் நண்பன் ஒவ்வொரு வகை மாம்பழத்தையும் தனித்தனியே துண்டு செய்து, தனித்தனித் தட்டுகளில் வைத்திருந்தான்.

"பத்துவகை மாம்பழங்கள் உள்ளன, சாப்பிடுங்கள்" என்று என் நண்பன் கூறினான். நான் ஒவ்வொரு வகையினுடைய பெயரையும், அதன் குணங்களையும் கூறினேன்.

அந்த மாம்பழங்களைக் கண்ட ரஷியப் பெண்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். மாம் பழங்களை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தனர். மூக்கின் அருகில் கொண்டு சென்று முகர்ந்து பார்த்தனர். அதன்பின் ஒவ்வொரு வகை மாம்பழத்தையும் தனித் தனியே சுவைத்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

"விச் வெரைட்டி சீம்ஸ் டு பி தி பெஸ்ட்?" என்று கேட்டேன்.

"ஆல் ஆர் சீம்ஸ் டு பி பெஸ்ட்!" என்று அனைவரும் ஒருமுகமாகக் கூறினர்.

ஏறத்தாழ ஆளுக்கு 4 பழம் அளவுக்கு சாப்பிட்டிருந்தும் அவர்களால் எந்த வகைப்பழம் சிறந்தது என்று முடிவு செய்ய முடியவில்லை.

"வீ மஸ்ட் ஈட் சம்மோர் புருட்ஸ்! தென் ஒன்லி, வீ கேன் டிசைட் தி பெஸ்ட்" என்றார் டாக்டர் செவட்லானா.

அப்பொழுது ஒரு சிறுவன் மாம்பழத்தைக் கடித்துத் தின்று கொண்டிருந்ததைப் பார்த்த குமாரி மஞ்சளழகி (மிஸ் எலினா) அந்தக் காட்சியைக் குமாரி நீலக் கண்ணிக்குக் காட்டினார். உடனே குமாரி நீலக்கண்ணி ஒரு மாம்பழத்தை எடுத்துக் கடித்துத் தின்ன ஆரம்பித்தார். அதைக்கண்ட மற்ற நால்வரும் அதுபோலவே மாம்பழத்தைக் கடித்துத் தின்ன ஆரம்பித்தனர். மாம்பழச்சாறு அவர்களுடைய வாயிலிருந்தும், கையிலிருந்தும்



ஒழுகியது. கையில் வடியும் சாற்றை நக்கிச் சுவைப்பதில் இனிமை கண்டு கொண்டிருந்தனர்.

'' பிளீஸ் டோண்ட் டேக் டூ மச் ஆப் மேங்கோஸ் அட் எ டைம் ! இட் வில் ஸ்பாயில் யுவர் ஹெல்த்!'' என்றேன்.

'' டோண்ட் ஒர்ரி மிஸ்டர் இளங்கோ! வீ ஆர் ஹேவிங் எ டாக்டர் '' என்று டாக்டர் வாலண்டின கூறினர்.

''மன்னிக்கவும் ! இந்த மாந் தோப்பு ஒரு சிறந்த மாதிரித் தோட்டமாகும். இத் தோட்டத்திற்குப் பல தடவை முதல் பரிசு கிடைத்துள்ளது. மாம்பழ விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு அதிக மகசூல் விளைவித்ததற்காக என் நண்பன் முதல் பரிசும் பெற்றுள்ளான். எனவே, இந்தத் தோட்டத்தைப் பார்வையிடுங்கள் '' என்றேன்.



மாந்தோப்பின் உள்ளே புகுந்து ஒவ்வொரு வகையையும் குறிப்பிட்டு விளக்கினேன். அவ்வாறு கூறிக்கொண்டு வருகையில் குமாரி மஞ்சளழகி '' எங்கள் நாட்டில் மா கிடையாதே! மா சாகுபடி செய்வதற்கு ஏற்ற கால நிலை என்ன?'' என்று கேட்டார்.

"குளிர் நாடுகளில் மா வளராது. மா ஒரு வெப்ப மண்டலப் பயிர். கோடை காலத்தில் 105 முதல் 120 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை இருக்கும் வெப்ப நாடுகளில் மட்டுமே மா நன்கு பயிராகும். மா மரங்கள் பூக்கும் காலத்திலும், காய் பெருத்துப் பழுக்கும் காலத்திலும் மழை பெய்யக் கூடாது. மா நன்கு வளர்ந்து பலன்தர ஜூன் அக்டோபர், மாதங்களில் மழை இருக்க வேண்டும்.

"மாம்பழத்தில் உள்ள விதைகளை நட்டுத்தான் மாமரம் வளர்க்கின்றீர்களா?" என்று கேட்டார் டாக்டர் செவட்லானா.

"சிலர் மாங்கொட்டைகளை நட்டுத்தான் மாமரம் வளர்க்கின்றனர். ஆனால் அம்மாதிரிச் செய்யக் கூடாது என்று வேளாண்மைத்துறை அறிவுரை கூறி வருகிறது. ஏனெனில், மாங்கொட்டைகளை நட்டு, கன்றுகளை வளர்த்து, உற்பத்தி செய்யும் மாமரங்கள் காய்க்க நீண்ட காலம் ஆகும்; காய்ப்பும் குறைவாகவே இருக்கும்; அத்துடன் ஆண்டுதோறும் ஒரே மாதிரியாகக் காய்க்காது; கிடைக்கும் பழங்களும் தரமானவைகளாக இருக்காது" என்றேன்.

"பின் எப்படி மாவில் இனப்பெருக்கம் (Propagation) செய்கின்றீர்கள்?" எனக் குமாரி நீலக்கண்ணி கேட்டார்.

"விரைவாகப் பலன் பெறவும், நிறைய மகசூல் பெறவும் ஒட்டுச் செடிகளையே நடுமாறு வேளாண்மைத்துறை பரிந்துரை செய்கிறது. ஒட்டுச் செடிகளைத் தயாரிக்கப் பல முளைக்கருவுள்ள (Polyem bryony) மாவகைகளின் நாற்றுகள் வேர்ச்செடிகளாகப் (Root stocks) பயன்படுத்தப்படுகின்றன. ஓலூர், பாபக்காய், சந்திகாரன் போன்ற மாவகைகளில் முளைக் கருக்கள் உள்ளன. இவ்வகை விதைகளை நட்டால், பலமுளைகள் தோன்றி வளருகின்றன. ஆனால் அம்முளைகளில் ஒன்றே ஒன்றுதான் பால் சேர்க்கையினால் (Sexual reproduction) தோன்றுகிறது. கருவை ஒட்டிய மற்றப் பாகங்களிலிருந்து மற்ற முளைகள் தோன்றுவதால், அவைகள் தாய்ச் செடியைப் போலவே எல்லாக் குணநலன்களையும் கொண்டிருக்கும். அம்முளைகள் பால்சேர்க்கையினால் உண்டாகும் முளையைவிட வீரியமாக வளரும். வீரியமற்ற-வளர்ச்சி குன்றிய கன்றுகளை அகற்றிவிட்டால், பால் சேர்க்கையினால் தோன்றும் கன்றுகள் அகற்றப்பட்டுவிடும். மீதியுள்ள கன்றுகள் ஒரே மாதிரியான குணநலன்களையும், வீரிய வளர்ச்சியையும் கொண்டிருப்பதால், அவைகளை வேர்ச்செடிகளாகக் கொண்டு அமைக்கப்படும் ஒட்டுச் செடிகள் விரைவாகவும், ஒரே மாதிரியான தரமுடைய மரங்களாகவும் வளர்ந்து நிறைய மகசூல் கொடுக்கும். இந்த வேர்ச்செடிகளின் மீது நிறைய மகசூல் தருவதுடன், சிறந்த குணநலன் கொண்ட, தாய் மரங்களைத் தேர்ந்தெடுத்துக் ஒட்டுக் கட்டப்படுகிறது. ஒட்டுக் கட்டுவதற்குப் பக்க ஒட்டு முறையும் (Side grafting), நெருக்கஇணை ஒட்டு முறையும் (Inarching) பயன்படுத்தப்படுகிறது. இம்மாதிரித் தயாரிக்கப்பட்ட 1 அல்லது 1½ ஆண்டு வயதுடைய ஒட்டுச் செடிகளையே நடுமாறு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது. உழவர்கள் தங்களுக்குத் தேவையான ஒட்டு மாஞ்செடிகளை, வேளாண்மைத் துறையிலிருந்து அல்லது வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நர்சரிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று தெளிவு படுத்தினேன்.

"ஒட்டுமாஞ்செடிகளை எப்படி நட்டுப் பராமரிப்பது?" என்றார் டாக்டர் வாலண்டினா.

"மாந்தோட்டம் அமைக்கவிருக்கும் நிலத்தில் 35 அடி × 35 அடி அல்லது 40 அடி × 40 அடி இடைவெளி விட்டு 3 அடி × 3 அடி × 3 அடி அளவுள்ள குழிகளைத் தோண்ட வேண்டும். பின்பு அக்குழிகள் ஒரு மாத காலத்திற்கு ஆறப் போடப்படுகின்றன. அக்குழிகளில் தீய நுண் கிருமிகள் இருப்பின், அவை ஒட்டு மாஞ்செடிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும். இத்தீய நுண்கிருமிகளை அழிக்க, அக்குழிகளில் காய்ந்த இலை, சருகுகளைப் போட்டுத் தீயிடுதல் நல்லது.

"மே மாதத்தில் அக்குழிகளில் மக்கிய தொழு உரம் 75 கிலோ கிலோ, சாம்பல் 4 கிலோ, எலும்புத்தூள் 3 கிலோ, மணல், செம்மண் ஆகியவைகளைக் கலந்து நிரப்ப வேண்டும். பின்பு ஓரிரு முறை நன்றாகத் தண்ணீர் கட்ட வேண்டும்.

"ஒட்டு மாஞ்செடிகளை ஜூலை—செம்டம்பர் மாதங்களில் நடுவது நல்லது. நடும்பொழுது, ஒட்டுப் போட்ட பாகம் தரை மட்டத்திலிருந்து 15 செ.மீ. உயரத்தில் இருக்குமாறு நடுவது அவசியமாகும். செடிகளை நட்ட பிறகு தண்ணீர் பாய்ச்சவும். ஒவ்வொரு செடிக்கும் ஆதரவாக ஒரு குச்சியை நட்டு, செடியைக் குச்சியுடன் சேர்த்துக் கட்டவேண்டும். ஒட்டுக் கட்டிய பாகத்தில் செடியில் காயம் ஏற்படாமல் கத்தியால் நேராகக் கீறிவிடவும். இவ்வாறு செய்யாவிட்டால், ஒட்டுக் கட்டிய பாகம் இறுக்கமடைந்து, கோடு கோடாகப் பள்ளம் ஏற்

---

அறைக்குள்ளே டெலிவிஷன் செட்டை வைத்துப் பார்ப்பதால் கண் பார்வை கெடாமல் இருக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி இங்கிலாந்து மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் யோசனை கூறியுள்ளனர்.

டெலிவிஷன் பெட்டியிலிருந்து குறைந்தது 8 அடி (2.5 மீட்டர்) தூரத்தில் உட்கார்ந்துதான் காட்சிகளைக் காண வேண்டும்.

இருட்டறையில் இருந்து பார்க்காமல், வெளிச்சமான அறையில் இருந்து பார்க்க வேண்டும்.

சிறிய மேஜை விளக்கு ஒன்றை டெலிவிஷன் செட் மீது வைக்கலாம்;

டெலிவிஷன் செட்டில் ஏதேனும் சரி (அட்ஜஸ்ட்) செய்ய வேண்டும் என்றால் ஒரு கண்ணை மூடிக்கொண்டு செய்ய வேண்டும். அதுவும் இமைகளை அழுத்தி மூடாமல், கையைக் கொண்டு கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.



பட்டுவிடும். அதனுல் ஒட்டுச் செடியின் வளர்ச்சி தடைப்படும் அல்லது ஒட்டுக் கட்டிய இடத்தில் முறிவு ஏற்படும். இளஞ் செடிகளுக்கு நிழல் அளிப்பது அவசியம். வேர் செடிகளிலிருந்து வளரும் கிளைகளை அவ்வப் போது அகற்றிவிடவேண்டும்."

"மாங்கன்றுகளுக்கு இரசாயன உரமிடவேண்டாமா?" என்று கேட்டார் மிஸ் புளு ஐ.

"உரமிடவேண்டியது மிகவும் அவசியமாகும். ஒரு ஆண்டு வயதுள்ள செடிக்கு மக்கிய தொழு எரு-10 கிலோ. அமோனியம் சல்பேட்—0.5 கிலோ. எலும்புத் தூள்—1.0 கிலோ. சூப்பர்பாஸ்பேட்—0.5 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசு 0·5 கிலோ வீதம் இடவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 5 கிலோ தொழு உரம், 0·5 கிலோ அமோனியம் சல்பேட், 0·5 கிலோ எலும்புத்தூள், 0·25 கிலோ சூப்பர்பாஸ்பேட், 0·25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசு அளித்து வரவேண் வேண்டும்.

நன்முக வளர்ந்த பெரிய மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டு தோறும்,

| | | கிலோ. |
|---|---|---|
| மக்கிய தொழு எரு | .. | 50 |
| அமோனியம் சல்பேட் | .. | 5 |
| எலும்புத்தூள் | .. | 5 |
| சூப்பர்பாஸ்பேட் | .. | 2·5 |
| மியூரியேட் ஆப் பொட்டாசு. | .. | 2·5 |

வீதம் இடவேண்டும்.

அம்மோனியம் சல்பேட் முழுவதையும் மியூரியேட் ஆப் பொட்டாசில் பாதியளவையும் ஜூன் மாதத்தில் வைத்துவிட வேண்டும். மீதி உரங்களை அக்டோபர் மாதத்தில் வைத்து விட வேண்டும். அப்பொழுது, என் நண்பன் "சில மரங்கள் ஆண்டுதோறும் தொடர்ந்துப் பலனளிக்காமல் மாறி மாறிப் பலன் தருகின்றனவே அதை எப்படிப் போக்குவது?" என்று கேட்டான்.

அவ்வகை மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் 90 கிலோ மக்கிய தொழு எரு, 1·80 கிலோ ஆமணக்குப் பிண்ணுக்கு 4·50 கிலோ எலும்புத்தூள், 2·25 கிலோ அமோனியம் சல்பேட், 13·50 கிலோ சால்பல் தூள் இட்டால் ஆண்டுதோறும் தொடர்ந்து பலனளிக்கச் செய்யலாம். அது போல் செய்து பார்க்கவும்" என்றேன்.

"இந்த மாமரங்களுக்கு நீர்ப் பாசனம் செய்யப்பட்ட அறிகுறியே தென்படவில்லை. நீர்ப் பாசனம் தேவையில்லையா?" என்ருர் டாக்டர் செவட்லான.

பொதுவாக மாஞ்செடிகளுக்கு நட்ட ஆரம்ப காலத்தில் மட்டுமே நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது. முதல் இரு ஆண்டுக்காலம் வரை வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சப் பட வேண்டும். அவ்வாறு தண்ணீர் பாய்ச்சும் பொழுது, செடியின் அடித்தண்டிலும், ஒட்டுக் கட்டிய பாகத்திலும் தண்ணீர் படாமல் செய்ய வேண்டும். அதன்பிறகு, பொதுவாக நீர் பாய்ச்சுவது இல்லை. தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியுள்ள இடங்களில் மரங்கள் பூக்கும் பொழுதும், காய்கள் வளர்ச்சி அடையும்பொழுதும் தண்ணீர் பாய்ச்சலாம். இவ்வாறு செய்தால், மாமரங்களின் காய்ப்பு அதிகமாவதுடன், பழங்களும் பெரியதாக ஆகின்றன" என்றேன்.

"மாந்தோப்பிற்குச் செய்ய வேண்டிய பின்செய் நேர்த்தி முறைகள் யாவை?" என்று கேட்டார் டாக்டர் மேரி.

மே-ஜூன் மாதங்களிலும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் மழைக்குப் பின் மாமரங்களின் இடைவெளியை உழுதுவிட வேண்டும் அல்லது கொத்திவிட வேண்டும். மாமரங்கள் காய்க்கத் தொடங்கும் வரை அவைகளின் இடைவெளிகளில் நிலக்கடலை, தட்டைப் பயறு, கத்தரி, வெண்டை, அவரை, சனப்பை முதலியவைகளை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். மாமரங்கள் காய்ப்புக்கு வந்தபின் ஊடு பயிர் சாகுபடியை நிறுத்திவிட வேண்டும். கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளை இளந்தோப்புகளில் பயிர்செய்தால், அவைகள் நிலத்தில் உள்ள சத்துக்களை இழந்துவிடுமாதலின், அவைகளைப் பயிரிடக் கூடாது.

"மாங்கன்றுகள் நட்ட எத்தனை ஆண்டில் காய்க்கத் தொடங்கும்? எத்தனை ஆண்டில் நிறையக் காய்க்கும்?" என்று கேட்டார் மிஸ் புளு ஐ.

"ஒட்டு மாஞ் செடிகள் 2 அல்லது 3 ஆண்டுகளிலேயே பூத்துக் காய்க்கக்கூடும். ஆனல் நட்டு 5 ஆண்டுகள் ஆகும் வரை, இளம் மரங்களைக் காய் பிடிப்பதற்கு விடக்கூடாது. 5 ஆண்டிற்குள் காய்க்க விட்டால் மரங்களின் வளர்ச்சி குன்றி, பிற்காலத்தில் நிறைய மகசூல் கொடுக்காது. எனவே, 5 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றும் பூங்கொத்துகளை அகற்றிவிட வேண்டும். நட்ட 5 ஆண்டுகளுக்குப் பின்புதான், மாமரங்களைக் காய்ப்புக்கு விடவேண்டும். மாமரங்கள் நட்ட 12-வது ஆண்டிலிருந்து நல்ல மகசூல் கொடுக்கும்" என்று கூறினேன்.



## 48 ஆண்டுகள் வாழும் வால்வு

1923-ஆம் ஆண்டில், அதாவது 48 ஆண்டுகளுக்கு முன்பு, தயாரிக்கபட்ட ஒரு ரேடியோ வால்வ், சிறிதுகூடச் சக்தி குன்ருமல் இப்போதுதான் தயாரான 'வால்வ்' போல் உறுதியுடன் இருக்கிறது.

"முல்லார்டு கம்பெனி" என்ற இங்கிலாந்து நாட்டு நிறுவனம் தயாரித்தது இந்த ரேடியோ வால்வ். 1923-ல் மாதிரிக்காக இந்த வால்வை இந்த நிறுவனம் தயாரித்து, பார்வைக்காக வைத்தது. 48 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அதனைச் சோதித்துப் பார்த்ததில், இன்றைக்குத் தயாரான வால்வ் போலவே நன்கு இயங்குகிறது.

ரேடியோவில் இதனைப் பயன்படுத்தவில்லை என்ருலும், செய்தது செய்தபடியே 48 ஆண்டுகளுக்குப் பிறகும் இருப்பது விந்தையல்லவா!

"ஒவ்வொரு மரமும் எத்தனை காய்கள் கொடுக்கும்? ஒரு ஏக்கரில் எவ்வளவு பழம் கிடைக்கும்? ஒரு ஏக்கர் மா பயிரிடச் செலவு என்ன? வரவு என்ன?" என்று கேட்டார் பொருளாதாரப் பேராசிரியரான டாக்டர் வாலண்டினா.

"ஒவ்வொரு மரமும் பத்தாவது ஆண்டுவரை, ஆண்டுதோறும் 500 முதல் 600 பழங்களைக் கொடுக்கும். ஒரு ஏக்கர் மா 5,000 முதல் 10,000 கிலோ வரை பழங்களைக் கொடுக்கக் கூடும்.

வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் முறைப்படி ஒரு ஏக்கரில் மா சாகுபடி செய்ய முதல் 5 ஆண்டுகளுக்கு ரூபாய் 5,120, அதன்பின் 5 ஆண்டுகளுக்கு ரூ. 2,000-ம் ஆக மொத்தம் ரூ. 7,120 செலவு ஆகும்.

முதல் 5 ஆண்டுவரை ஊடு பயிர் சாகுபடி செய்வதன் மூலம் ரூ. 2,500-ம், அதன்பின் 5 ஆண்டுகளில் கிடைக்கும் பழங்களை விற்பதன்மூலம் ரூ. 5,600ம் ஆக மொத்தம் ரூ. 8,100 வருமானம் கிடைக்கக்கூடும். செலவு ரூ. 7,120 போக, லாபம் ரூ. 980 கிடைக்கலாம்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2,500 வருமானம் கிடைக்கும். ஆனால் செலவு ரூ. 500 மட்டுமே ஆகக் கூடும். எனவே பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஏக்கர் மாந்தோப்பும் ரூபாய் 2,000 லாபம் கொடுக்கும்.

எல்லா வேலைகளுக்கும் செலவு செய்வதாகவே கணக்கிட்டுச் சொல்லியுள்ளேன். ஆனால் உழவர்கள் பலர் 10 ஆண்டுகளுக்கு ரூபாய் 3,000 மட்டுமே செலவு செய்து, ரூபாய் 3,000 நிகர லாபம் பெற்றுள்ளனர்.

பத்தாண்டுகளுக்குப் பின் ஒவ்வொரு மரத்திலிருந்தும் அதிகமான பழங்கள் கிடைக்கும். சில மரங்கள் ஆண்டிற்கு 3,000 பழங்கள் கொடுத்துள்ளதற்கும் சான்றுகள் உள்ளன என்றேன்.

உடனே அந்த அம்மையார் என் நண்பனைப் பார்த்து, "எத்தனை ஏக்கரில் மா சாகுபடி செய்கிறீர்கள்? என்ன செலவு? லாபம் என்ன?" என்றார்.

"20 ஏக்கரில் மா சாகுபடி செய்கிறேன். அவைகளுக்குத் தற்பொழுது ஆண்டிற்கு ரூபாய் 8,000 செலவு செய்கின்றேன். ஆண்டுதோறும் 50,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர லாபம் கிடைக்கிறது" என்று நண்பன் சொன்னான்.

அதன்பின் அவர்கள் வேறு விளக்கம் கேட்காததால் "புறப்படுவோமா?" என்றேன். அவர்களும் "சரி" என்றனர்.

என் நண்பன் ஒரு கூடை நிறைய மாம்பழங்களைக் கொண்டு வந்து காரில் வைத்தான். அதைக் கண்ட டாக்டர் வாலண்டினா, ஒரு நூறு ரூபாய் நோட்டை என் நண்பனிடம் கொடுக்க வந்தார். என் நண்பன் மறுத்துவிட்டு "யூ ஆர் மை கெஸ்ட்" என்று கூறிவிட்டான். அதைக் கேட்ட உடனே மிஸ் வாலண்டினாவும், மற்றவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவனது கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு விடை பெற்றுக் கொண்டனர்.

"சேலத்தில் மதிய உணவு சாப்பிடுகின்றீர்களா?" என்றேன். அவர்கள் "வேண்டாம்" என்று கூறிவிடவே சேலம் கடைவீதியைச் சுற்றிக் காண்பித்துவிட்டு அங்கு ஜஹாங்கீர் என்ற மாம்பழத்தில் ஒரு டசனையும், ஒரு டசன் ஸ்பூன்களையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டோம். எங்கள் கார் கோயம்புத்தூரை நோக்கி விரைந்தது. வழியில் ஸ்பூனைக் கொண்டு மாம்பழம் சாப்பிடும் முறையைக் கற்றுக் கொடுத்தேன். ஐஸ்கிரீம் சாப்பிடுவதுபோல மாம்பழத்தைச் சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

ஊத்துக்குளி மாதுளை மிகவும் புகழ்பெற்றது என்று கூறி 2 டசன் மாதுளைகளை வாங்கி அவர்களுக்குக் கொடுத்தேன். கோவையில் இரவு உணவை முடித்துக் கொண்டு உடனே ஊட்டிக்குப் புறப்பட்டு விட்டோம். ஏனெனில் மறுநாள் ஊட்டியில் பூக்காட்சி இருந்தது. மறுநாள் ஊட்டியில் நடைபெற்ற பூக்காட்சிகளுக்கு சென்றோம். எனக்கு 'ஊட்டியின் குளிர் தாக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு ஊட்டியின் குளிர் மிகவும் ஏற்றதாக இருந்ததால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் காலையிலேயே காண்பித்துவிட்டு, பூக்காட்சிக்குச் சென்றோம். பூக்காட்சியைத் தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திறந்து வைத்து உரையாற்றினார். எண்ணற்ற வண்ண நறுமலர்களைக்கண்ட மகிழ்ச்சியில் அவர்கள் ஓடியும் ஆடியும் விளையாட ஆரம்பித்து விட்டனர். "உங்கள் விருப்பப்படி சுற்றிவிட்டு வாருங்கள்" என்று கூறிவிட்டு நான் காரிலேயே தங்கி விட்டேன்.

அன்று ஊட்டியிலேயே தங்கி விட்டு மறுநாள், காலை புறப்பட்டு கூனூர், கல்லார், பர்லியார் பழ ஆராய்ச்சி நிலையங்களைப் பார்த்து விட்டு, கோவை வேளாண்மைக் கல்லூரி சென்றோம். அங்குப் பல இடங்களைப் பார்த்துவிட்டு அடுத்த நாள் கொடைக்கானல் புறப்பட்டோம், கொடைக்கானலில் ஒருநாள் தங்கிவிட்டு மறுநாள் திண்டுக்கல்லில் திராட்சை சாப்பிட்டுவிட்டு மதுரை, குற்றாலம் ஆகிய இடங்களுக்குச் சென்றோம்.

திட்டமிட்டபடி பத்தாவது நாள் சென்னை வந்து சேர்ந்தோம். எனக்கு ஒரு பெரிய பொறுப்பு முடிந்தது என்று நிம்மதி ஏற்பட்டது.

மீதியிருந்த பணம் 625 ரூபாயும் கொடுத்து "நான் விடைபெற்றுக்கொள்ளட்டுமா?" என்றேன்.

என்னை விட்டுப் பிரிய அவர்களுக்கு மனமே இல்லை. எல்லார் கண்களும் கலங்கின. மிஸ் புளு ஐ கண்களில் நீர்த் துளிகள் மல்கின. "மிஸ்டர் இளங்கோ! உங்களுக்கு மிகவும் நன்றி. உங்களை வெகு விரைவில் ரஷியாவுக்கு அழைக்கின்றோம். நீங்கள் அவசியம் வரவேண்டும். எங்களுக்கு மாம்பழம், மாம்பழச் சாறு, ஊறுகாய் போன்றவைகளை உடனே அனுப்பிவைக்கவும். அதன்பின் இங்கிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஆவன செய்கிறோம்" என்றனர்.

"கண்டிப்பாகச் செய்கிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

மாஸ்கோவிலிருந்து மாம்பழம் சாப்பிட வந்த மங்கையர்கள் பிரிய மனமின்றி விடை கொடுத்து அனுப்பினர்.


காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள் தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர் - கிராமத் தொழில் துறை, உ. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை - 4.

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

**அம்பாசமுத்திரம்-14 என்ற நெல் பயிரிடும் முறையை விளக்கிக் கூற முடியுமா ?**

—ஆறுமுகராயர், திருநெல்வேலி.

அம்பாசமுத்திரம் 14 என்ற நெல்லுக்கு 'பெண்ணை' என்ற பெயரும் உண்டு. 'பெண்ணை' நெல்லின் சாகுபடிக் குறிப்புகள் ஏப்ரல் 16-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் 'நெல்லைக்கு ஏற்ற கண்ணல்லவா, பெண்ணை நெல் அல்லவா?' என்ற தலைப்பில் 12, 13, 14-ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன. தயவு செய்து அந்த இதழைப் படியுங்கள்.

**நிலவள வங்கியில் கடன் பெறுவதற்கு யாரை அணுகவேண்டும் ?**

—ராவுத்தர்,
லெப்பைக்குடிக்காடு.

உங்கள் வட்டாரக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலரை அணுகி விசாரித்தால், கடன் பெறுவதற்கு எப்படி விண்ணப்பிக்க வேண்டும், என்னென்ன சான்றிதழ்கள் வாங்கி அனுப்ப வேண்டும் என்ற விவரங்களை யெல்லாம் தெரிவிப்பார்.

**எஸ். ஏ. 1. ஆமணக்குப் பயிரிடச் சிறந்த பட்டம் எது ? விதைகளை எங்கிருந்து பெறலாம் ?**

—சுப்பிரமணியம், வேலூர்.

'எஸ்.ஏ. 1' ஆமணக்குப் பயிரிடச் சிறந்த பட்டம் ஜூன்-ஜூலை மாதம் ஆகும்.

'எஸ்.ஏ. 1' ஆமணக்கு விதைகள் உங்கள் அருகில் உள்ள வேளாண்மைக் கிடங்குகளில் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

''உதவி எண்ணெய்வித்து
நிபுணர்,
ஆமணக்கு ஆராய்ச்சி
நிலையம், சேலம்.''

**'காவேரி' ரக நெல்லை குறுவை அல்லது கார் பட்டமாக ஆவணி மாதம் நாற்று விட்டுப் புரட்டாசி மாதம் நடவு செய்யலாமா ? தயவு செய்து விவரம் கூறவும். நாற்று விடுவது எப்போது ?**

கோ. ஆறுமுகம்,
சாத்தம்பாடி.

'காவேரி' ரக நெல்லை, குறுவை அல்லது கார் பட்டத்தில் சாகுபடி செய்யலாம். ஆனால் குறுவை அல்லது கார் பட்டம் என்பது வைகாசி-ஆனி (மே-ஜூன்) முதல் ஆவணி-புரட்டாசி (ஆகஸ்ட்—செப்டம்பர்) வரை உள்ள காலத்தையே குறிக்கும். எனவே தாங்கள் ஆவணி மாதத்தில் நாற்று விட்டுப் புரட்டாசி மாதத்தில் நடவு செய்யக்கூடாது. குறுவை அறுவடை புரட்டாசியில் முடிந்துவிடும். அறுவடை செய்ய வேண்டிய காலத்தில் நடவு செய்வதென்பது காலங்கடந்த செயல் மட்டுமல்ல, பயனற்ற செயலுமாகும். எனவே காவேரி நெல் சாகுபடி செய்ய விரும்பினால், ஆனி மாதத்திற்குள் நாற்று விட்டு விடுங்கள். காவேரி நெல் பற்றிய சாகுபடிக் குறிப்புகளை அறிய மே 16, 1971 'தமிழரசு' இதழின் 21, 22, 23 பக்கங்களைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**எங்கள் மூன்று ஏக்கர் நிலத்தில், வருகிற ஜூன் மாதத்தில் விவசாய கம்பு நடவு செய்ய நினைத்துள்ளேன். அடுத்து, கருணை நெல் நடவு செய்யலாமா என்பதையும் நடவு செய்யும் முறையையும் விளக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

எம். அருணசலம்,
விருத்தாசலம்.

எச்.பி. கம்பு ரகத்தையே தாங்கள் விவசாய கம்பு என்று குறிப்பிடுகின்றீர்கள் என நினைக்கின்றோம். அந்தக் கம்பினை ஜூன் மாதத்தில் நடவு செய்தால் அது அனேகமாக ஆகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்டம்பர் மாதத்தில் அறுவடைக்கு வரும். அதன்பின் 'கருணை' நெல் சாகுபடி செய்வதற்கு ஏற்றதல்ல. செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகம் ஐ.ஆர். 5, கோ.-25 நீண்ட நாள் வயதுடையது. செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கார்த்திகைச் சம்பா (ஏ.எஸ்.டி. 5), ஒட்டுக்கிச்சிலி (ஏ.எஸ்.டி. 11), கோ.-32 போன்று பொறுக்கு நெல் வகைகளையும் பயிரிடலாம்.

**சென்னையில் நல்ல பக்குவமான இடத்தில் காய்கறி விதை வியாபாரத்திற்குக் குறைந்த வாடகையில் கடையும், விடும் கொடுத்தால் நான் அங்கு வந்து காய்கறி விதை வியாபாரம் செய்ய நினைக்கின்றேன். 16—5—71 தமிழரசு பத்திரிகையைப் பார்த்ததில் 'வீடு உண்டு வேறு என்ன வேண்டும் ?' என்ற கேள்வியும் பதிலும் என்னை இதை எழுதத் தூண்டியது. எனது பணியை ஏற்றுக் கொண்டு தகுதியான இடத்தை அளித்து நல்லது செய்வீர்களென்று நம்புகின்றேன். எனது விண்ணப்பம் நியாயமானது என்று தாங்கள் கருதினால் தங்களால் முடிந்ததைச் செய்யும்படி, பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

—கே. ஆர். எஸ். கோபாலன்,
செயங்கொண்டம்.

தங்களுக்குத் 'தமிழரசு' சார்பில் உதவமுடியாமைக்கு வருந்துகின்றோம். தங்களுக்குக் குறைந்த வாடகையில் கடையோ அல்லது வீடோ கிடைக்க வேண்டுமானால், குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்பிவைக்கவும். குடிசை மாற்று வாரிய விதிமுறைகள் அனுமதிக்குமானால், தங்கள் கோரிக்கைகள் நிறைவேறலாம்.

**ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு புதிய தண்டுக்கீரை ரகம் வந்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். அதன் பெயர் என்ன? அதன் விதை எங்குக் கிடைக்கும்? அதன் சாகுபடி முறைகளைக் கூறவும்.**

மு. இளஞ்சேரன்,
மதுரை.

தாங்கள் கேள்விப்பட்ட புதிய ரக தண்டுக் கீரைக்கு 'கோ.-1 தண்டுக்கீரை' என்று பெயர். இந்த ரகத்தை ஆண்டு முழுவதும், எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம். இந்த ரகம் விரைவாக வளர்ந்து அதிக மகசூல் தரக் கூடியது. நாட்டு ரகத் தண்டுக்கீரை வகைகளை விட 50 சத அளவு அதிக மகசூல் அளிக்கும். ஒரு ஏக்கரிலிருந்து விதைத்த 7 வாரங்களுக்குள் 8,000 கிலோ கீரைகளும், இளந் தண்டுகளும் கிடைக்கும். இந்த ரகத் தண்டுக்கீரையின் இலைகள் கரும் பச்சையாகவும், மொத்தமாகவும், சதைப்பற்று மிகுந்ததாகவும், சுவை மிக்கதாகவும் இருக்கும். குறுகிய வயது காரணமாக இந்த ரகத்தைப் பயன்படுத்தி ஒரே ஆண்டில் தொடர்ந்து 5 அல்லது 6 தடவை பயிர் செய்யலாம். இந்த ரகத்தை இலைப்புள்ளி நோயும், அந்துப் பூச்சியும் அதிகமாகத் தாக்காது.

கோ.-1 தண்டுக்கீரை விதையை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்; அல்லது கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக்கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் ''காய்கறி நுண்ணறிஞர்'' அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

கோ.-1 தண்டுக்கீரை சாகுபடி செய்ய ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எருவிட்டு 4 முறை நன்கு உழுது விட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ 3-ஆம் நெம்பர் தரப்படுத்தப்பட்ட கலவை உரத்தையோ, அல்லது அமோனியம் சல்பேட் 50 கிலோ, சூப்பர்பாஸ்பேட் 120 கிலோ, மியூரியேட் ஆப் பொட்டாஷ் 24 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அதன்பின் முளைக் கீரையாகப் பயன்படுத்துவதற்கென்றால் நிலத்தை 80 சென்டி மீட்டர்×80 சென்டி மீட்டர் (2 அடி 8 அங்குலம்×2 அடி 8 அங்குலம்) அளவுள்ள பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அப்பாத்திகளில்

கோ 1. தண்டுக்கீரை



விதைகளைத் தெளித்து விதைக்க வேண்டும். தண்டுக் கீரையாக வளரவிட்டுப் பயன்படுத்துவதென்றால் நிலத்தில் 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். பார்களின் சரிவில் விதைகளை வரிசையாக விதைக்கலாம்.

ஒரு ஏக்கர் தண்டுக்கீரை விதைக்க ஒரு கிலோ விதை வேண்டும். விதையுடன் 10 மடங்கு சிறு மணலைக் கலந்து விதைப்பது சிறந்த முறையாகும். விதைக்கப்பட்ட கீரை விதைகளை எறும்பு இழுத்துச் சென்று தின்று விடாமல் தடுக்க பி.எச்.சி. 10 சத மருந்துத் தூளை விதைப் பாத்திகளில் தூவுதல் நல்லது. விதைகளை விதைத்த உடன் தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். அதன் பின் 5 அல்லது 7 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. களைகள் தோன்றினால் அவ்வப்போது அகற்றிவிட வேண்டும்.

மூன்று வாரம் கழித்து நெருக்கமாக இருக்கும் கீரைச் செடிகளை அகற்றிவிடவேண்டும். அவ்வாறு அகற்றப்படும் செடிகளை முளைக்கீரையாகப் பயன்படுத்தலாம்.

தண்டுக்கீரையில் தோன்றும் இலை தின்னும் கம்பளிப் புழுக்களையும், இதர பூச்சிகளையும் கட்டுப்படுத்த மாலத்தியான் 0·05 சதம் (1 மில்லி லிட்டர் மாலத்தியான் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவேண்டும். இலைப்புள்ளி, மற்றும் ஏதேனும் நோய் தோன்றுவதைத் தடுக்க "டைத்தேன் இஸட்-78" (1கிலோ மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும். மருந்து தெளித்த 15 நாட்களுக்குள் கீரைத் தண்டுகளைப் பிடுங்கிச் சமையலுக்குப் பயன்படுத்தக்கூடாது. மருந்து தெளிக்கப்பட்ட கீரைத் தண்டுகளைத் தண்ணீரில் கழுவிய பின் விற்பனை செய்வதே சிறந்தது.

கோ.-1 தண்டுக்கீரையை விதைத்த 15 முதல் 20 நாட்களில் முளைக்கீரையாக அறுவடை செய்யலாம். விதைத்த 6 முதல் 7 வாரங்களுக்குப் பிறகு தண்டுக் கீரையாக அறுவடை செய்யலாம்.

**எஸ். ஏ. 1 துவரையை மானாவாரியாகப் பயிரிடலாமா? அதற்கு ஏற்ற பருவம் எது? ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் கொடுக்கும்?**

ந. முத்துக் கவுண்டர்,
ஆத்தூர்.

எஸ். ஏ. 1 (S. A. 1) துவரையை ஜூன், ஜூலை மாதங்களில் மானாவாரியாக விதைக்கலாம். ஏக்கருக்குச் சராசரியாக 500 கிலோ மகசூல் கிடைக்கும்.



# ஆக்குவதும் அழிப்பதும் உங்கள் கையில்


பம்ப்-செட் வைத்திருந்தால் மட்டும் போதாது. அமோக விளைச்சலுக்கு முறைப்படி நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். அதற்கு உங்கள் பம்ப்-செட் எந்த சமயத்திலும் சீராக இயங்கும் வண்ணம் இருக்க வேண்டும். உங்கள் மோட்டாரை ஸ்டார்டர் நன்கு பாதுகாத்தால்தான், பம்ப்-செட் எந்த விதமான தொல்லையும் இல்லாமல் சரிவர இயங்கும்.

இந்த உண்மையை உணர்ந்து, அதன் அடிப்படையில் லார்ஸன் டுப்ரோ ஸ்டார்-டெல்டா ஸ்டார்டர் தயாரிக்கப்படுகிறது. இதன் பித்தானை அழுத்தியவுடனே மோட்டார் தானாக இயங்கத் தொடங்குகிறது. இளையோர், முதியோர் யாவரும் இதை இயக்கலாம். ஒவ்வொரு ஸ்டார்டருக்கும் மூன்று கான்டாக்டர்கள் உள்ளன. அவை உறுதியான தூய வெள்ளி காண்டாக்ட்கள் கொண்டவை. இதனால் மோட்டார் சட்டென்று தானாக இயங்குவது எளிதாகிறது. எங்கள் ஸ்டார் டெல்டா ஸடார்டர் உங்கள் மோட்டாருக்கு பூரண பாதுகாப்பு அளிக்கும்

ஸ்விட்ச்கியர் டிவிஷன்

**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**

தபால் பெட்டி 278, பம்பாய்-1 • தபால் பெட்டி 619, கல்கத்தா-16 • தபால் பெட்டி 323, புது டில்லி-1 • பை தபால் 5247, மதறாஸ்-2.



LT-1956

# வட சென்னையிலே வளரும் படகு!

சென்னை மாநகரின் கடற்கரையையொட்டி அமைந்துள்ள இராயபுரத்தில் நீண்ட நெடுஞ்சாலையாக அமைந்துள்ளது சூரியநாராயணச் செட்டிதெரு. 5–6–1971 மாலை 6–00 மணி அளவில் 8-ஆம் எண்ணுள்ள இல்லம் விழாக்கோலம் பூண்டு விளங்கியது. குழல்விளக்குகள் தம் முழு ஒளியை விழா நடக்கும் இடம்வரை பரப்பிக்கொண்டிருந்தன. இனிய நாதஸ்வர இசை, வருவோரையெல்லாம் வரவேற்றுக்கொண்டிருந்தது. விழா மேடையின் அருகே இரு மின்விசைப்படகுகள் வண்ண விளக்குகளால் அணிசெய்யப்பட்டுக்காண்பவர் அனைவரையும் கவர்ந்து கொண்டிருந்தன. மேடையின் முன்னால் அமர்ந்திருந்த மக்கள் வெள்ளம் எதையோ ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஒருசில நிமிடங்கள் சென்றிருக்கும், அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் எழுந்து தங்களுடைய பார்வையை ஒரே பக்கம் திருப்பினார்கள். அவர்தம் முகத்திலே ஒருவகை மலர்ச்சி; மகிழ்ச்சி. மேடை நோக்கி வந்துகொண்டிருந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும், அரிசனநலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களையும் அவர் தம் கண்கள் கண்டன.

ஆம்! அன்று தமிழக முதல்வர், அரிசனநல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையாரின் தலைமையில், சிந்தனைச்சிற்பி மா.சிங்காரவேலர் அவர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் துறையைத் திறந்துவைத்தார்கள். மீன் துறை இயக்குநர் திரு தயாப் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முதல் முதல், சென்னை மெரினா கடற்கரையில், 1955-ஆம் ஆண்டு ஒரு சிறு படகுகட்டும் துறையைத் தமிழக அரசு ஆரம்பித்தது, முதலில்சிறுபடகுகட்டும் துறையாகத் தொடங்கியிருந்தாலும் நாளடைவில் அதன் வளர்ச்சி பெருகிக் கொண்டே வந்தது. சென்னை மெரினாவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மின்விசைப் படகுகள் கட்டும் துறையில் முதன் முதலில் 25 அடி நீளமுள்ள படகுகள் கட்டப்பட்டன. பின்னர் 30, 32, 36, 38 அடிகள் நீளம் கொண்ட விசைப்படகுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னை மெரினாவைத் தவிர, இராயபுரத்தில் படகுகட்டும் துறை ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. மீன்துறையினரின் ஆரம்ப எண்ணம், இராயபுரத்தில் படகுத்துறை கட்டிவிட்டு மெரினாவை மூடிவிடுவது என்பதேயாகும். ஆனால், மீனவப் பெருங்குடியினரின் வேண்டுதலாலும் வற்புறுத்தலாலும் இரண்டும் இயங்கலாயின. தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரை எழில்மிக்க நகரமாக மாற்றி அமைக்க வேண்டும்; சென்னையை அழகுபடுத்தி அதை ஓர் உல்லாச நகராகவும், இந்திய துணைக்கண்டத்தில் ஒரு தலைசிறந்த நகரமாகவும் அமைத்திட வேண்டும் என்ற சீரிய பணிகளில் தமிழ்நாடு அரசுஈடுபட்டுச்செயல்படத் துவங்கியது; எனவே மெரினா படகு கட்டும் துறையை மூடிவிட வேண்டும் என்று வற்புறுத்தியது. தமிழக அரசு மட்டுமின்றிச் சென்னை மாநகராட்சியும் இதனையே விரும்பிற்று; ஆதலால் மீன் துறையினர் சிந்தனைச் சிற்பி மா.சிங்காரவேலர் பெயரில் சென்னை இராயபுரத்தில் படகு கட்டும் துறையினை அமைத்தார்கள். இந்தப் படகுகட்டும் துறைக்கு அனாதை ஆசிரமம் அருகிலுள்ள நிலம் ஒதுக்கப்பட்டது. இந்தப் படகு கட்டும் துறை ஏறக்குறைய 4·75 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இந்த இரு படகு கட்டும் துறைகளைத்தவிர, நாகைப்பட்டினம், மண்டபம் ஆகியஇருஇடங்களிலும்இத்துறைகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நான்குபடகுகட்டும்துறைகளிலும் சேர்ந்து ஆண்டுக்குச் சுமார் 200 விசைப் படகுகள் வீதம் கட்டப்படுகின்றன. நடப்பு ஆண்டில் கட்டப்பட விருக்கிற 208 படகுகளையும்சேர்த்துமொத்தம் 1,500 படகுகள் உள்ளன. இந்தியாவிலேயே மொத்தம் 8,000 விசைப் படகுகள்தான் உள்ளன. சென்னையிலுள்ள இரண்டு படகுத்துறைகளிலும் சேர்ந்து சுமார் 150 ஊழியர்கள் வேலைசெய்கிறார்கள். முப்பது அடி நீளம் கொண்ட ஒரு படகு கட்டுவதற்குச் சுமார் ரூபாய் 55,000 வரை செலவாகிறது. முப்பத்திரண்டு அடி நீளத்துக்குச் சுமார் ரூபாய் 65 ஆயிரமும் முப்பத்தாறுஅடி நீளம் கொண்ட படகுக்குச் சுமார் ரூபாய் 1,12,000-மும் செலவாகின்றன. முப்பத்தியாறு அடி நீளம் கொண்ட படகு தனியார்களுக்கு மட்டும் தள்ளுபடியின்றிக் கொடுக்கப்படுகிறது.

தற்பொழுது மீன் பிடி விசைப் படகுகளுக்காகக் கட்டப்படும் படகுகளுக்கு அரசாங்கம்தான் பொருள்உதவிஅளித்துவருகிறது. மரம், இரும்பு ஆகியவற்றைக் கொண்டு படகுகள் கட்டுவதால் அவை துருப்பிடித்து நாளடைவில் கெட்டுவிடுகின்றன என்பதற்காக தற்பொழுது 'ஃபெரோ சிமிண்ட் படகுகள்' (Ferro Cement Boats) கட்ட ஆரம்பித்துள்ளனர். இப்பொழுது 15 அடி நீளம் கொண்டசிமெண்ட் படகு ஒன்று கட்டப்பட்டுள்ளது. தவிர 32, 36 அடி நீளத்திலும் கட்டத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசும் அனுமதி அளித்துள்ளது. இதைப் போன்ற சிமெண்ட் படகுகள் அமெரிக்காவில் உள்ளன. இந்தியாவிலேயே முதன் முதலில் இதுபோன்ற சிமெண்ட் படகுகள் கட்டப்படுவது தமிழ்நாட்டில்தான் என

எண்ணும்போது நாம் பெருமிதம் அடைகிறோம்.

தமிழக அரசு மீனவர்களுக்கு வேண்டிய விசைப்படகுகளைத் தவணை முறையிலும் உதவித் தொகை முறையிலும் (Subsidy cum hire purchase) கொடுக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மூன்று மீனவர்கள் கொண்ட குழுவுக்கு ஒரு விசைப் படகு வீதம் கொடுக்கப்படுகிறது. மீனவச் சமுதாயத்தினருக்கு விசைப் படகுகள் அளித்தல், அவர்கள் மீன்பிடிப்பதற்கு வேண்டிய நைலான் போன்ற பொருட்களைத் தவணை முறையில் கொடுத்தல் இது போன்ற செயல்களைக் காணும் பொழுது தமிழ்நாடு அரசு பாட்டாளி மக்களுக்கும் மீனவச் சமுதாயத்தினருக்கும் பாடுபடுகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. சிங்காரவேலர் படகுகட்டும் துறையைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்துகையில், '' மீனவர்களுடைய துயரம் எத்தகையது ; அவர்களுடைய வாழ்வு எத்தகைய பயங்கரமானது என்பதையெல்லாம் உணர்ந்து, அந்தச் சமுதாயத்தினரை மேம்படுத்த எந்த அளவுக்குத் திட்டங்கள் தீட்ட வேண்டுமோ அந்த அளவுக்குத் திட்டங்கள் தீட்டி முன்னேற்றி வருகிறது, தமிழ்நாடு அரசு'' எனப் பலத்த கரவொலிக்கிடையில் கூறினார். மேலும் பேசுகையில், ''மேலை நாடுகளில் மீன் பிடிப்பதற்காக அளிக்கப்படும் படகுகள் ஆழ் கடலில் மீன் பிடித்து, அங்கேயே குளிர்பதனப் படுத்தி—ஏற்றுமதி செய்கின்ற அளவுக்குச் செப்பமுற அமைந்துள்ளன. அதுபோன்று நம் நாட்டிலும் ஏற்படவேண்டும். அதற்கு—தொழிலுக்காக உதவி செய்துவரும் வணிக வங்கிகள் இதனையும் தொழிலாகக் கொண்டு கடன் உதவி அளிக்க முன்வர வேண்டும், தமிழ்நாடு அரசின் சார்பில் இதற்கு உதவும்படி வேண்டுகிறேன்'' என்றும் கூறினார்கள். இவற்றின் வாயிலாகத்தான் தமிழக முதல்வர் அத்தொழிலின் மீது கொண்டுள்ள பற்றும் அச்சமுதாயத்தின் முன்னேற்றத்தில் தமிழக அரசு காட்டும் அக்கறையும் வெளிப்படுகின்றன.

மீன் பிடிக்கும் தொழில், வேளாண்மைத்தொழில் போன்று முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய ஒரு தொழில். ஆரம்பத்தில் தமிழகத்தில் சுமார் 80 ஆயிரம் டன் வரையில் மீன்கள் பிடிக்கப்பட்டு ஏற்றுமதியும் செய்யப்பட்டன. ஆனால்இன்று சுமார் 3 லட்சம் டன்கள் வரை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மீன்கள் ஏற்றுமதியில் சுமார் 2½ கோடி ரூபாய் வரையில் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. எனவே இத்தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது நியாயமானதாகும்.

---

## விசைப் படகு—சில விவரங்கள்

மீன் பிடிப்பதற்காக, விசைப் படகுகளைக் கட்டி, மீனவர்களுக்கு வழங்குவதற்கெனத் தமிழக அரசு திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும், படகு அமைப்பின் விலையில் 25 சதவீதமும், என்சின்கள் விலையில் 50 சத வீதமும் மீனவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மீதித்தொகை கடனாகக் கருதப்பட்டுத் தவணை முறையில் வசூல் செய்யப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 விசைப் படகுகளைக் கட்டிமுடிப்பதெனத் திட்டமிடப்பட்டது. அத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுக் கட்டி முடிக்கப்படாத 54 விசைப் படகுகளையும் மூன்றுவதுஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டது.

மூன்றுவதுஐந்தாண்டுத்திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் (1961-65-ஆம் ஆண்டுகளில்) கட்டிமுடிக்கப்பட்ட விசைப்படகுகள் 231. 1965-66-ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட விசைப் படகுகள் 143.

இத்திட்டத்தின் கீழ் 1966-67-ஆம் ஆண்டில் 143 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1967-68-ஆம் ஆண்டில் 195 விசைப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1968-69-ஆம் ஆண்டில் 104 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1969-70-ஆம் ஆண்டில் 145 விசைப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1970-71-ஆம் ஆண்டிலும் 145 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் (1971-72-ஆம் ஆண்டில்) 208 விசைப் படகுகள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது 1,500 விசைப் படகுகள் உள்ளன. இதைத் தவிர 30,000 கட்டுமரங்களையும், தோணிகளையும் தமிழகத்து மீனவப் பெருமக்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்துகின்றனர்.

# நாளைய தலைமுறை



கதையும் பாட்டும் படிப்பதால்
கல்வி யறிவு சேருமே !
எதையும் கேட்டுப் பார்ப்பதால்
இயற்கை யறிவு கூடுமே !

—நாரா. நாச்சியப்பன்.

அண்டவெளி 50,000,000, 000,000 ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்தது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

அப்போது ஹைட்ரஜன், ஆக்சிஜன், இரும்பு, செம்பு, கந்தகம், தங்கம் போன்ற இந்தப் பொருள்களெல்லாம் எந்த மூலப்பொருள்களினால் ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்த புரோட்டான், எலெக்ட்ரான், நியூட்ரான் என்ற அடிப்படைப் பொருள்கள் இருந்தன. அப்போதைய உஷ்ணம் மிக மிக அதிகம்; அதிக அமுக்கம். அந்த நிலையில் ஓர்அரை மணி நேரத்தில் பல சேர்க்கைகள் நிகழ்ந்து நாம் இன்று காணும் 92 மூலப் பொருள்களைத் தோற்றுவித்தன.

இவை அனைத்தும் அப்படியே குழம்பாய், கூழாய் இருந்தன. இந்தக்கூழ்தன்னைத்தானேசுற்றிக் கொண்டிருந்தது. காலப் போக்கில் இந்தக் கூழ் சுருங்க ஆரம்பித்தது. சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகம் அதிகமாகிறது. வேகம் அதிகமாக ஆக உருண்டை வடிவமான கூழ் தட்டையாகிச் சிறுசிறு தூசிக் கூட்டங்களைத் தன்னைச்சுற்றிப் பரப்பியது. இத்தூசிக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து நட்சத்திரமாகத் தோன்றின. இதுதான் அண்டவெளி தோன்றிய கதை.

சூரியனிலிருந்து சூரிய குடும்பம் எப்படித் தோன்றியது? சூரியனுடைய எடையில் 745-ல் ஒரு பாகத்தினால் சூரியனைச் சுற்றி வரும் மற்றெல்லாப் பொருள்களும் செய்யப்பட்டிருக்கின்றன. சூரியன் நமது பூமியை விட 13,000,000 பங்கு அளவில் பெரியது. சூரிய கோளத்தின் வெளிப்புற உஷ்ணம் சுமார் 6,000° செ. அதன் உள்ளேயோ இலட்சக் கணக்கான டிகிரி உஷ்ணம்.

சூரியனில் 50 பாகத்திற்குமேல் ஹைட்ரஜனும் பாதிக்குக் குறைவாக ஹீலியம் என்ற வாயுவும் குறைந்த அளவில், மற்றப் பொருள்களும் இருக்கின்றன. பூமியில் அதிகம் பிராணவாயுவும், சிலிகான் என்ற மணல் பொருளும் பல்வேறு தனிப் பொருள்களும் இருக்கின்றன.

ஹைட்ரஜன் குண்டு வெடித்தால் என்ன மாறுதல் நேருகிறதோ, அதேபோல் சூரியனுள் தினம் ஹைட்ரஜன் குண்டு வெடித்து ஹீலியம் என்ற பொருளாக மாறுகிறது. அப்போது வெளிப்படும் சக்தியைத்தான் நாம் சூரியவெளிச்சமாகத் தினமும் பெறுகிறோம்.

**குழந்தைகள் பகுதி நாளைய தலைமுறை என்ற தலைப்பில் இந்த இதழிலிருந்து தொடங்குகிறது. சிறுவர்களுக்கான இப்பகுதி வளரும் பயிர்களுக்கு அறிவு விருந்தளிக்கும் பகுதியாகும்.**

சூரியன் மீது பெரிய ‘விண்கொள்ளி’ அல்லது மற்றோர் சூரியன் வீழ்ந்து, மோதி, அதனால் சூரியன் சிதறிக் கிரகங்கள் உண்டாயின என்று பஃபன் என்பவர் கூறினார்.

லாப்லாஸ் என்பவர் சூரியனைச் சுற்றிரு வாயுமண்டலம் இருக்கிறது, சூரியனின் சுழற்சியால் அது தட்டையாகிச் சூரியனைச்சுற்றி வளையமாகப் பொருளை விட்டுச் செல்கிறது; நாளடைவில் இவ்வளையங்கள் உடைபட்டுத் தனித்து கிரகங்களாகின்றன” என்று கூறினார்.

லாப்லாஸ் கொள்கையே சரியானதென்று கருதுகின்றனர்.

எப்படி சூரியனிலிருந்து பூமி தோன்றியதோ, அதேபோல் பூமியிலிருந்து சந்திரன் பிறந்தது. ஒரு காலத்தில் சந்திரன் பூமியிலிருந்து துண்டித்துக்கொண்டு ஓடிவிட்டது. அது கிளம்பிய இடத்தை இன்னும் பூமியின் மீது பள்ளமாகக் காணலாம். அந்தப் பள்

ளத்தில் இப்போது தண்ணீர் நிரம்பி பசிபிக் மகாசமுத்திர மாகக் காட்சி தருகிறது.

இதுவரையில் பூலோகம், தேவ லோகம், பாதாள லோகம், ஈரே ழுலோகங்கள் என்பதெல்லாம் வெறும் கதை என்பதையும் அண் டவெளி அமைப்பையும் பற்றி அறிந்து கொண்டோம்.

நமது பூமியின் எதிர்கால மென்ன? சூரியனின் எதிர்கால மென்ன? இதைப் பற்றி அறிந்து கொள்ள நாம் சோதிடர்களிடம் போக வேண்டியதில்லை. விஞ்ஞா னிகள் கூறுகிறார்கள்.

சூரியனில் ஹைட்ரஜன் என்ற எரி பொருள்கள் இணைந்து சக்தி தருகின்றன. இதிலிருக்கும் ஹைட் ரஜன் எவ்வளவு நாளைக்கு வரும்? ஹைட்ரஜன் குறையக் குறைய மிகுந்துள்ளது வேகமாக எரியும். ஆகவே சூரியன் போகப் போக மிக அதிக ஒளியுடனும் உஷ்ணத் துடனும் எரியும். அப்போது பூமி மண் சூட்டையும், ஒரு நாள் தண்ணீரெல்லாம் நீராவியாக மாறி நிற்கும். அந்தச் சூட்டில் மனிதன் வாழ முடியாது.

சூரியனின் அந்தியக் காலம் சாதாரண இறப்பு அல்ல. இறக்கு முன் அது வெடித்துச் சிதறிப் பூவாணமாகப் போகும்.

அது என்று ஏற்படும்? பயப்பட வேண்டியதில்லை. அதற்கு இன் னும் 5,000,000,000 ஆண்டுகள் இருக்கின்றன.

அதற்குள் நமது அறிவு முன் னேறி நாம் வெளி மண்டலங்க ளுக்குப் போவதைச் சகஜமாக மேற்கொண்டிருக்கலாம். அப்படி யொரு முடிவு வருமுன்பு மக்கள் இனம் பத்திரமாக வேறு கிரகத் திற்குக் குடியேறி விடலாம்!



# அன்னை

தராவகை - பன்னீர் செல்வன்






ஈன்ற தாயைப் போற்றல் செய்யா
  இழிந்தோன் தனைநீ சாடிடு !—பெற்ற
ஞான்று முதலாய்த் தனைம றந்த
  நல்லாள் புகழே பாடிடு !

வாயைக் கட்டி வயிற்றை யொட்டி
  வளர்ப்புக் கலையைக் கற்றவள் !—ஒரு
நோய்வ ராமல் நொடியுங் காக்கும்
  நோட்டம் நிரம்பப் பெற்றவள் !

வாழப் புகுந்த காலந் தொட்டு
  வரம்பு கொண்டே வாழ்ந்தவள் !—உனை
ஈழ நாட்டுத் தமிழ னென்றே
  எடுத்தெ டுத்தே மோந்தவள் !

கோழிச் சேவல் கூவும் முன்னே
  குடும்பம் செய்ய முனைபவள் !—அது
பாழிக் குடிலைப் போன்றிட் டாலும்
  பளிங்கு செய்யும் வினையவள்!

நாடு காக்கக் கணவர் செல்ல
  நலமாய் மகிழ்ந்து விடுப்பவள் !—நீ
ஏடு தூக்கிப் பள்ளி செல்ல
  எழுத்துப் பயிற்சி கொடுப்பவள் !

கோயில் குளங்கள் சுற்றி னும்
  கொழுநன் தனையே மதிப்பவள் !—ஒரு
பாயில் லாமல் வாழ்ந்த போதும்
  பண்பை நெஞ்சில் பதிப்பவள் !

வரவு செலவு கணக்கு வைத்து
  வரம்பு காக்கும் முறையினள் !—முழு
இரவுங் கூட விழித் திருந்தே
  இல்லம் பேணும் நிறையினள் !

தலைவன் தந்த பொருளைப் பேணித்
  தனித்த கொடியை உயர்த்துவாள் !—கடல்
அலையைப் போல விருந்து வரினும்
  அன்பு விழவை அயர்த்துவாள் !

முன்னை மரபின் முறைகள் தேர்ந்து
  முயன்று பணிகள் ஆற்றுவாள் !—நாம்
அன்னை மாண்பை உணரா விட்டால்
  ஆரே நம்மைப் போற்றுவார் !


இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும் வீட்டுக்கும் நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9.
முத்து

'சமையல்கலை' என்பது வளர்ந்துவரும் உலகத்தில் எவ்வளவு முன்னேற்றங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது!

'சமையல் இயல்'—தொழில் நுட்பக் கல்வியாகவும் மாறியுள்ளது. பட்டப்படிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

மனித இனத்தின் வளர்ச்சியும் தேவையும் விரைவான போக்குவரத்தும் உலகத்தைச் சுருக்குவதால் ஒவ்வொரு நாட்டின் உணவு, பழக்க வழக்கங்களும் மற்ற நாடுகளுக்குப் பரவிவருகின்றன.

அந்தந்த நாட்டு உணவு முறைகள் அந்தந்த நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு அயல் நாடுகளில் கிடைக்கும்பொழுது அவர்கள் மிகவும் கவரப்படுகிறார்கள்.

மற்றவர்களைக் கவர உலக அளவில் உணவு முறைகளைத் தயார் செய்வதை நாம் அறியாவிட்டாலும் நம் நாட்டு அளவில் உணவு வகைகளைச் செய்யும் முறைகளை அறிந்து கொள்வது பயனளிக்கும்.

## காமோன் தோக்லா

இது வடநாட்டில் வழக்கிலுள்ள உணவு வகையாகும்.

தேவையான பொருள்கள் :

கடலைப் பருப்பு 200 கிராம்.
உளுத்தம் பருப்பு. 75 கிராம்.
இஞ்சி .. 10 கிராம்.
பச்சை மிளகாய். 10 கிராம்.
எண்ணெய் .. 100 கிராம்.
பெருங்காயம் .. 5 கிராம்.
சர்க்கரை .. 10 கிராம்
சோடா-பை-கார்பனேட்டு ½ தேக்கரண்டி.
உப்பு .. 10 அல்லது 15 கிராம்.
மஞ்சள்பொடி. ½ தேக்கரண்டி

தாளிக்கத் தேவையானவை

எண்ணெய் .. 50 கிராம்.
கடுகு .. 5 கிராம்.
தேங்காய் .. 115 கிராம்.
கொத்தமல்லிக் கீரை. 30 கிராம்.

செய்யும் முறை :

கடலைப்பருப்பையும் உளுத்தம் பருப்பையும் சேர்த்து ஆறு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் ஆட்டுக் கல்லில் நன்றாக ஆட்டவேண்டும்.

நன்றாக அரைத்த மாவுடன் இஞ்சி, பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம், சோடா-பை-கார்பனேட்டு, சர்க்கரை முதலிய வற்றைச் சேர்க்க வேண்டும்.

நூறு கிராம் எண்ணெய்யை அடுப்பில் வைத்து நன்றாகச் சூடாக்கியவுடன் கலந்து வைத்திருக்கும் மாவுக் கலவையுடன் கலந்து 12 மணி நேரம் வைத்திருக்க வேண்டும்.

பின்பு கொதிக்க வைத்து, கொதி வந்தவுடன் நெய் பூசிய தட்டில் விடலாம்.




தாளிக்க வேண்டும் என்று நினைத்தால் தாளிக்க வேண்டிய பொருள்களை எடுத்து, வழக்கம் போல் தாளித்த சமைத்த பொருள்களுடன் சேர்த்துவிடலாம்.

தேங்காய் துருவல், கொத்தமல்லி இலை முதலியவைகளையும் கடைசியில் சேர்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள அளவில் செய்தால் நான்கு பேர் சாப்பிடலாம்.

## பட்டாணிச் சட்டினி

பட்டாணிச் சட்டினி செய்வது மிகச் சுலபமானது. நான்கு நபர்களுக்குப்பட்டாணிச்சட்டினி செய்யத் தேவையான பொருள்கள் :—

வறுத்த பட்டாணி—55 கிராம்.
உப்பு—சுவைக்கு ஏற்றபடி.
மிளகாய்வற்றல்—2 கிராம்.
நறுக்கிய இஞ்சி—3 கிராம்.
எலுமிச்சம் பழச்சாறு—2 அல்லது 3 துளிகள்.

செய்யும் முறை :

முதலில் மிளகாய் வற்றலை வதக்கிக் கொண்டு வழக்கம் போல எல்லாப் பொருள்களையும் சேர்த்து அரைக்க வேண்டும். அவ்வளவுதான் பட்டாணிச் சட்டினி தயாராகிவிடும்.

## உருளைக் கிழங்கு பரோட்டா

உருளைக்கிழங்கு பரோட்டா ஓர் ஆளுக்குத் தேவையான அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

உருளைக்கிழங்கு—100 கிராம்.
பச்சை மிளகாய்—2 கிராம்.
இஞ்சி—2 கிராம்.
கொத்தமல்லி இலை—2 கிராம்
உப்பு—5 கிராம்.
கோதுமை மாவு—25 கிராம்.

செய்யும் முறை :

உருளைக் கிழங்கை வேக வைத்துத் தோலை உரிக்கவும்.

பச்சை மிளகாய், இஞ்சி, கொத்தமல்லி இலை முதலிய வற்றை நன்ருக அரைத்துக் கொள்ளவும்.

உப்பையும் போடவும்.

கோதுமை மாவில், தண்ணீரை விட்டுப் பிசைந்து கொள்ள வும்.

கோதுமை மாவையும், உருளைக்கிழங்குக் கலவையையும் தனித்தனியாகப் பந்துபோல் செய்து கொள்ளவும்.

உருளைக்கிழங்குக் கலவையில் கோதுமை மாவுப் பந்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

சப்பாத்தி மாதிரி இட்டுக் கொண்டு சூடான தோசைக் கல்லில் வாட்டிக் கொள்ளவும்.

மேலே சொன்ன அளவு ஒரு நபருக்குத்தான். எத்தனை பேருக்கு வேண்டுமோ அத்தனை மடங்கு தேவையான பொருளைப் பயன்படுத்தவும்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2


## வெண்டைக்காய் மசாலா

நான்கு பேருக்கு வெண்டைக் காய் மசாலா செய்வதற்குத் தேவையான பொருள்கள் :

வெண்டைக்காய்—450 கிராம்.

உப்பு—1 தேக்கரண்டி.

மஞ்சள்பொடி—½ தேக்கரண்டி.

மிளகாய்ப் பொடி—½ தேக்கரண்டி.

பச்சை மிளகாய்—2.

கொத்தமல்லித் தூள்—1 தேக்கரண்டி.

எண்ணெய்—55 கிராம்.

முதலில் வெண்டைக்காயைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை நறுக்கிக் கொள்ளவும்.

எண்ணெய்யைச் சூடாக்கி வெண்டைக்காயையும் மசாலாவையும் கலந்து கிளறிவிட்டுப் பாத்திரத்தை மூடவும்.

ஏறத்தாழ 25 நிமிடங்கள் வரை வதக்க வேண்டும்.

—அஞ்சனை

## பறவைகள் பல விதம்

இந்தியாவைப் போல் வேறு எந்த நாட்டிலும் வகை வகையான பறவைகளும் விலங்குகளும் கிடையாது. ஆப்பிரிக்கக் காடுகளில் கூட விலங்குகளின் எண்ணிக்கை ஏராளமானதாக உண்டே யொழிய பலதரப்பட்ட வகைகள் (Species) குறைவுதான்.

இந்தியாவில் மொத்தம் 100 கோடி சதுர மைல் நிலப் பரப்பு உள்ளது. 500 வகையான விலங்குகளும் 2,041 வகையான பறவைகளும் இங்கு உள்ளன.

இந்தியாவை விட நாலு மடங்கு (400 கோடி சதுர மைல்) பரப்பளவு உள்ளது கனடா. ஆனல் அங்கு 200 வகை விலங்குகளும், 500 வகைப் பறவைகளுமே உண்டு.

இந்தியாவின், பூகோள, தட்ப வெப்ப நிலையே இதற்குக் காரணம்.

## எட்டு இலட்சம்

இந்தியத் துணைக்கண்டத்தில் மொத்தம் 8 லட்சம் தொலைபேசிகள் உள்ளன.

இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் ஒரு லட்சத்து 15 ஆயிரம் தொலைபேசிகள் உள்ளன. அவற்றில் சென்னையில் மட்டும் 66,425 தொலைபேசிகளும், பிற பகுதிகளில் 48,896ம் உள்ளன.

கோவை நகரில் உள்ள தொலைபேசிகள் 8,643 ; மதுரையில் 6,286 ; திருச்சியில் 3,843 ; சேலத்தில் 3,833 உள்ளன.

இங்கிலாந்து நாட்டில் மொத்தம் ஒரு கோடியே 30 லட்சம் தொலைபேசிகள் உள்ளன.

அமெரிக்காவில் 10 கோடியே 38 லட்சம் தொலைபேசிகள் உள்ளன. ஜப்பானில் 1 கோடியே 82 லட்சமும், சோவியத் நாட்டில் 91 லட்சமும் உள்ளன.

# புள்ளி விவரம்

ஜி. குழந்தைவேலு, பி.எஸ்சி.

புள்ளி விவரங்கள் (Statistics) என்பதின் ஆங்கிலச் சொல்லுக்கு முதற் சொல், அரசு (State) என்பதாகும். "Status" என்ற இலத்தின் வார்த்தையை அடிப்படையாகக் கொண்டு தான் "Statistica" என்ற இத்தாலிய மொழியைத் தழுவி முடிவில் "Statistics" என்று உருப்பெற்றது. அரசு என்பதன் அடிப்படையிலிருந்து இந்தச் சொல் பிறந்ததன் காரணம், முதன் முதலில் அரசாங்கங்கள் புள்ளி விவரங்களைச் சேகரித்துப் பயன்படுத்தியமையேயாகும். அரசாட்சி முறை வளர்ச்சியுருத காலத்தில்கூட, ஒவ்வொரு கூட்டத்தின் தலைவனும் சில புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் அக்கறை காட்டினன். ஏசுநாதரின் பிறப்பின்போது ஒரு கணக்கெடுப்பு நடந்ததாக விவிலிய நூல் நமக்கு அறிவிக்கின்றது. மேலும் எகிப்திலுள்ள பிரமிட்டுகளைக் கட்டுவதற்கு முன்பே அந்நாட்டில் கிடைக்கக்கூடிய உழைப்பு, தேவையான பொருள் முதலியவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன என்பதற்கு ஆதாரம் இருக்கிறது.

நாகரிகம் வளர வளர புள்ளி விவரங்களும் வளர்ந்தன. அரசாங்கம், மக்களைப்பற்றிய பல புள்ளி விவரங்களைத் தொகுத்தது. மக்கள் பிறப்பு, இறப்பு திருமணம் முதலியவற்றைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டன. வாணிகப் பெருக்கத்துக்கு ஆக்கம் அளிக்கக்கூடிய புள்ளி விவரங்களைப் பிரான்சு, இங்கிலாந்து, பிரசியா ஆகிய நாடுகள் சேர்த்து வெளியிட்டன. மேலும் இன்று வரி விதிக்கவும், வாணிபம் பெருக்கவும், படை திரட்டவும் மட்டுமா புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன? மக்களது கல்வி நிலை என்ன, நாணயப் பெருக்கமும், புழக்கமும் எந்நிலையில் உள்ளன, மக்களது வருமானம் எப்படி உள்ளது, விலைவாசிகளின் உயர்வு, உணவு உற்பத்தியின் அளவு, மக்கள் தொகை அதிகரிப்பு, குடும்பக் கட்டுப்பாடு—இப்படிப் பல நிலைகளில், பல துறைகளிலும் புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டு அவற்றிற்கேற்ப அரசின் திட்டங்களும், கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் பல்துறை அலுவலகங்களில் புள்ளியியலுக்கும் இன்று சிறந்த இடம் உண்டு. மேலும் இந்திய புள்ளிவிவர நிறுவனம் (Indian Statistical Institute) இந்திய அரசாங்கப் பொருளாதாரப் புள்ளி விவர இயக்குநர் துறை, மாநில அரசாங்கப் புள்ளியியல் துறை, மாவட்ட நிலை என்றெல்லாம் வளர்ந்து இன்னும் ஒவ்வொரு நிலையிலும், குறிப்பாக நமது மாநிலத்தில் சிறப்பானதோர் அம்சமாக வட்ட நிலைகளிலும் (Taluk level) அதன் வளர்ச்சி பெருகி வருகின்றது. இன்னும் பல்வேறு நிலையிலும் அதன் வளர்ச்சி நாளுக்கு நாள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வருகின்றதென்ருல் அது மிகையாகாது. சுருங்கச் சொன்னல் ஓர் உடலுக்குக், கண்ணும் காதும் எவ்வளவு முக்கியமோ அதுபோல அரசாங்கத்திற்குப் புள்ளி விவரங்கள் கண்ணுகவும், காதாகவும் இருந்து பயன்பட்டு வருகின்றன. (Statistics are the ears and eyes of the Government.)

அமெரிக்கா, இரஷ்யா முதலிய நாடுகளிலெல்லாம் புள்ளி விவரங்களின் வளர்ச்சி தற்போது மிகவும் உச்ச நிலையிலுள்ளது. இப்போது நம்முடைய மத்திய, மாநில அரசுகளும் புள்ளி விவரத் துறை வளர்ச்சியில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றன. மேலும் நாம் வகுக்கும் திட்டங்களுக்கெல்லாம் மூல காரணமாகப் புள்ளி விவரங்கள் இருந்து வருகின்றன. எனவே திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானல் புள்ளி விவரங்களின் தரம் அவசியம் உயர வேண்டும். புள்ளி விவரங்கள் பிழையுறுமாயின், புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்ற திட்டங்களும் எதிர்பார்த்த அளவு வெற்றி பெருமல் போக நேரிடும். எனவேதான் நமது மாநில அரசு, புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவும், புள்ளியியல் துறையை நல்ல சிறந்த முறையில் விரிவாக்கவும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

தற்போது புள்ளியியல் தனித் துறையாக வளர்ச்சி பெற்றுப் பல்வேறு கலை, அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் உதவி வருகின்றது. புள்ளி விவரங்களைக் கட்டுரையாளர் ஒருவர் கையாளும்போது நமது கருத்து அக்கட்டுரையின் பால் ஈர்க்கப்படுகிறது. மழை பொழிந்தாற் போலப் புள்ளி விவரங்களைப் பேச்சாளர், அள்ளி வீசும் போது மயங்கும் மக்கள், அவை உண்மையானவையா அல்லது பேச்சாளர் கற்பனையில் தோன்றியவையா என்று கூட ஆராய்வதில்லை. அந்த அளவிற்குப் புள்ளி விவரங்களுக்கு ஒரு கவர்ச்சி இருக்கிறது.




புள்ளி விவரங்களைக் கையாளாதவர்கள் இல்லை என்றே கூறி விடலாம். பொருளாதாரம், அரசியல், மன இயல், பொறியியல், கல்வி இயல், மருத்துவம், பௌதிகம், இரசாயனம், வான இயல், மற்றும் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டவர்களது ஆராய்ச்சிக்கும் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன. பெருமளவில் பொருள்களைத் தோற்றுவிக்கும் தொழிற்சாலைகள் தங்கள் தயாரிப்புகளது தரம் குன்ருது பாதுகாக்க (Quality Control) புள்ளி விவரங்களையே நாடுகின்றன. இவைகள் மட்டும்தாஞ? நாட்டின் நலனுக்காகத் திட்டமிடும் அரசியலார், தொழிலைப் பெருக்க விழையும் தொழிலதிபர், மனித உயிர்க்குப் பணத்தால் பாதுகாப்பு அளிக்கும் இன்சூரன்ஸ் நிலையத்தினர், காலத்தை முன்கூட்டியே அறிவிக்கும் கால ஆராய்ச்சி நிபுணர்கள்—இவர்கள் எல்லாரும் புள்ளி விவரங்களைப் பெரும் அளவில் பயன்படுத்துபவர்கள்.

நம்மால் காண முடியாத தொலைவிலுள்ளவற்றைத் தொலைநோக்கி காட்டுகிறது. நம் எண்ண வரம்புக்கு மேற்பட்டுள்ள எண்ணிக்கைகளைத் தொகுத்துப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. புள்ளி விவரங்களை ஒரு நாட்டின் படத்துக்கு ஒப்பிடலாம். படத்தில் (map) எல்லாச் செய்திகளையும் குறித்தல் முடியாது. முக்கியமான சாலைகள், ஆறு, மலை, நகர் போன்ற ஒரு சில செய்திகளையே படத்தில் குறித்துக் காட்டலாம். ஓர் ஊரில் உள்ள மக்களது பண்பைப்பற்றியோ, இயற்கைக் காட்சிகளைப் பற்றியோ படத்தில் குறிக்க இயலாது. அக்குறிப்புகள் இல்லை என்பதனுல் படத்தின் மதிப்பும் உபயோகமும் குறைவதுமில்லை. புள்ளி விவரங்கள் தெரிவிக்கும் செய்திகள், சில புள்ளி விவரங்களைக் காணும்போது, தனிப்பட்ட மனிதர்களது பண்பைக் காண முடியாது. இருப்பினும் அவற்றின் வரம்புக்குட்பட்டு புள்ளி விவரங்கள் பயன் அளிக்கின்றன.

புள்ளி விவரங்களைத் தொகுக்கும்போது பலவிதமான தற்காப்புக்களோடு சேகரிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக மழைக்கும், பயிர் வளத்துக்கும் உள்ள தொடர்பைப் பல நிலங்களில் கணக்கெடுப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தப் புள்ளி விவரங்களிலிருந்து ஒரு முடிவுக்கு வருமுன், மண்ணின் தரம், உரம், வெப்பம், காற்று போன்ற பல சூழ்நிலைகளையும் எண்ணியே முடிவு காண வேண்டும். இல்லையேல் முடிவு பிழையுறும்.

புள்ளி விவரங்களை மூன்று முறைகளில் தொகுக்கலாம். (1) புள்ளி விவர ஆய்வாளரே, தொடர்புடைய ஒவ்வொருவரையும் நேரில் கண்டு புள்ளி விவரச் செய்திகளைத் தொகுத்தல் நேர்முறையாகும். இது மிகவும் சிறப்பான முறையாகும். இருப்பினும் குறுகிய காலத்தில் பலரைச் சந்தித்துப் புள்ளி விவரங்கள் சேகரித்தல் இயலாத காரியம். (2) புள்ளி விவர ஆய்வாளர், புள்ளி விவரத்தைத் தொகுக்கும் வேலையைத்தானே நேரில் செய்யாது, அவர் சார்பாகத் திறமை மிக்க சில பிரதிநிதிகள் மூலமாகச் செய்யும் முறை களமுறை (Field method) ஆகும். இது மக்கள் கணக்கீடு (Census) போன்ற புள்ளியியல் ஆய்வுகளில் பயன்படுகின்றன. (3) கேள்வித்தாளைத் தனிப்பட்டோர்க்கு அஞ்சல் மூலம் அனுப்பிப் பதில் பெறுதல்தான் அஞ்சல் முறை (Postal method) ஆகும். ஆனுல் இதில் பதில் அனுப்புவோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. எனவே புள்ளி விவரம் சேகரிக்க நாளாகும்.


பலருக்குப் புள்ளி விவர எண்கள் பேசும் செய்தியைக் கேட்கப்பொறுமையோ, ஆவலோ இருப்பதில்லை. கவர்ச்சியற்ற புள்ளி விவர எண்களைச் சுவைபட வழங்கும் முறை ஒன்று உள்ளது. படங்களின் துணையோடு புள்ளி விவரச் செய்திகளை விளக்குவதுதான் அம்முறை. கசப்பு மருந்தைப் பொதி மருந்தாக (Capsule) வழங்குவதற்கு ஒப்பாகும் இம்முறை. கற்றலில் கேட்டலே நன்று! எண்களை நாம் கற்று ஆய்ந்து அறியும் கருத்தினைவிடப் படங்கள் கூறும் செய்தியே கவர்ச்சி வாய்ந்தது. மனத்திரையில் நிலைத்து நிற்கக் கூடியது. எண்களைப் பயில்கிருேம். படத்தினைப் பார்க்கிருேம். காட்சியினுல் அறியும் செய்தியை எளிதில் மறவோம். அதுவும் எண்கள் கூறும் செய்தியில் சிக்கலுண்டு. படம் தரும் காட்சியே தெளிவுடையது; சுருக்கமானது. எனவே, மக்களுக்குப் புள்ளி விவரச் செய்திகளைத் தெரிவிக்கப் படங்கள் மிகச் சிறந்தவை. புள்ளி விவரப் படங்கள் வரைபடமாகவோ (Graphs) வடிவ உருவப் படங்களாகவோ (Geometrical Figures) இருக்கும்.

இனி, புள்ளி விவர அளவைகளைக் காண்போம். ஊர்ஆய்வுக்காகப் புள்ளி விவரங்கள் திரட்டப்படுகின்றன. கிடைப்பது ஒரு புள்ளி விவரத் திரள். அதனின்று உடனடியாக எந்த முடிவுக்கும் வர முடியாது. எனவே அந்தத் திரளை ஒழுங்கு செய்கிருேம்; பாகுபாடு செய்கின்ருேம். பட்டியல் அமைக்கின்ருேம். இதன் மூலமாகச் சில செய்திகள் சிறிது சிறிதாக உருவம் பெறுகின்றன. புள்ளி விவரப் படங்கள் அமைக்கின்ருேம். மேலும் பல செய்திகள் புலனுகின்றன. மேலும் ஆராய வேண்டி, மையச் சார்பு அளவைகளின் கீழ் கூட்டுச் சராசரி, பெருக்குச் சராசரி, இசைச் சராசரி (Harmonic Mean) அரைமம் (Median) போன்ற அளவைகளையும், சிதறல் (Dispersion) அளவைகளின் கீழ், நிரை (Range), சராசரி விலக்கம், திட்ட விலக்கம் (Standard Deviation) ஆகிய



வைகளையும் கோட்ட அளவைகள் (Measures of skewness) போன்ற அளவைகளின் துணைகொண்டு, புள்ளி விவரங்களிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்புண்டு. கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் யாவும் ஒரு மைய அளவைச் சார்ந்து அமைந்திருக்கின்றன. இந்த அளவைகளுக்குப் பொதுவான பெயர், மையச் சார்பு அளவைகள் என்பதாம். இந்த மைய அளவையின் இரு புறத்திலும் கூடுதலாகவோ, குறைவாகவோ மற்ற குறிப்புகள் எந்த வரம்புக்குள் சிதறி இருக்கின்றன என்பது பற்றிக் கணிக்கும் அளவைகளைச் சிதறல் அளவைகள் என்று கூறுகிறோம். மைய அளவுக்கு இரு புறமும் உள்ள குறிப்புகள் ஒரே சீராகப் பரவியுள்ளனவா என ஆராய்கின்றோம். இந்த இருவித இசைவின் திறத்தைக் கணிக்கும் அளவைகளைக் கோட்ட அளவைகள் என்கின்றோம்.

புள்ளி விவரங்கள் பேசுமா என்ற வினவுக்கு, பேசும் என்ற பதில் கட்டாயம் கிடைக்கும். மிகப் பெரிய அளவில் உள்ள புள்ளி விவரங்களை எண்ண வரம்புக்கு உட்படுத்துவதுதான் புள்ளி இயலின் சிறப்பு. சராசரி போன்ற புள்ளி விவர அளவைகளைக் கணக்கிடுவதன் மூலம் புள்ளி விவரங்களைப் பேச வைக்க முடியும். அவை கூறும் செய்திகளிலிருந்து நமக்கு வேண்டிய முடிவுகளை வகுக்க இயலும். நாட்டின் மக்கள் கணக்கீட்டுப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டபோது அதில் பங்கு கொண்டு உழைத்த புள்ளி விவர நிபுணர்கள் பலர், புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பேசிய பேச்சு புறக்கணிக்கப்பட முடியாத பேச்சாகும்.





எனவேதான், மதிப்புக்குரிய நமது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி போன்ற தலைவர்களெல்லாம், புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவேண்டி உண்மையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்று பேசி வருகின்றார்கள். அப்போதுதான் நம்முடைய நாட்டின் இயற்கை வளத்தையும், பொருளாதாரத்தையும் ஆராய்ந்து, விஞ்ஞான ரீதியிலான பொருளாதார சோஷலிஸ சமுதாயத்தை நிறுவ முடியும்.

புள்ளி விவரங்கள் பேசும் என்று முன்பு சொன்னோம். இப்போது சில புள்ளி விவரங்கள் என்ன சொல்லுகின்றன என்று பார்ப்போம். அகில இந்திய ரீதியில் கீழுள்ள சில புள்ளி விவரங்கள் ருசிகரமானவை; **தமிழ் நாட்டின் சில சாதனைகள் சிந்திக்கத் தக்கவையாகும்.**

இந்தியாவின் பரப்பு சுமார் 13,30,000 சதுர மைல்களாகும். (820 மில்லியன் அல்லது 82 கோடி ஏக்கர்கள்) அவற்றில் பயிர் செய்யும் பரப்பு சுமார் 330 மில்லியன் ஏக்கர்கள். இது மொத்தப் பரப்பில் 40 சத வீதமாகும்; 20 சத வீதம் பாசனம் பெறுகின்றது. இந்தியாவில் ஒருவரிடம் சராசரியாக உள்ள நிலத்தின் அளவு 1.5 ஏக்கர் என்றால், பயிரிடத் தகுந்த பரப்பு ஒரு ஏக்கர்; ஒருவர் பயிரிடும் நிகரப் பரப்பு 0.7 ஏக்கராகும்.

பயிரிடத் தக்க நிலம் (Culturable waste) இன்னும் 2.4 மில்லியன் ஹெக்டர்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாமலும், நடப்பு தரிசு (Current Fallows) 0.9 மில்லியன் ஹெக்டர்களும் உள்ளன என்பது கவனிக்கத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை 1951-ல் 20·8 சத வீதம், 1961-ல் 31·4 சத வீதம்; தற்போது (1971-ல்) இது 39·39 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வெண்ணிக்கை அகில இந்தியா (29·35) சதவீதத்தை விட 10·04 சத வீதம் அதிகமாகும். தமிழக அரசு தனது மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 4-ல் ஒரு பங்கினைக் கல்வியின் வளர்ச்சிக்கெனச் செலவிடும் நோக்கம்




—நமது நாட்டின் செல்வமாம் குழந்தைகள் — இளைஞர்களின் வாழ்வு ஒளிமயமாக இருக்க வேண்டுமென்பதற்காகஅல்லவா!

1961-ல், 5,600 ஆக இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1969-70-ல் 7,551 ஆக உயர்ந்துள்ளதும், அத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் தொகை 3 லட்சம் பேர்களிலிருந்து 4·2 லட்சம் பேர்களாக (அதாவது 38·5 சத வீதம் வேலை வாய்ப்பு உயர்வு) உயர்ந்திருக்கும் சாதனையைத் தான் மறுக்க இயலுமா!

1960-61-ல் ஒருவரின் தலா வருமானம் (per capita income) ரூ. 355 ஆகவும், 1966-67-ல் ரூ. 527 ஆகவும் இருந்தநிலைமாறி, 1969-70 ஆம் ஆண்டில் ரூ. 622 ஆகவும் உயர்ந்துள்ளதைப் பார்க்கும்போது, சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளில் மட்டும் சுமார் ரூ. 100 அளவுக்கு உயர்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. அதன் பொருள் என்ன? மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துகொண்டே வருகிறது என்பது நன்றாக விளங்குகிறது அல்லவா!

எனவே, புள்ளி விவரங்கள் நம் எண்ணத்தை ஒரு வரம்புக்கு (Food for thought) உட்படுத்துகின்றன. ஆகவே, நன்றாகச் சிந்தித்துச் செயல்படுகின்றோம். அதனால் திட்டம் வகுக்கின்றோம். அலுவலர்களோடு, பொது மக்களும் ஒத்துழைத்து, அரசு வகுத்திடும் திட்டங்களுக்கெல்லாம் உயிர் நாடி போன்ற புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவும் புள்ளியியல் அளிக்கும் உண்மைகளைப் புரிந்துகொண்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் பாடுபடுவோம்.



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி எண்கள்: 20461. 20462. 20463. 20464. 20465.
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

# கருணாவை நம்பினோர் கைவிடப்படார்!



அன்புள்ள மணி,

'கருணாவை நம்பினோர் கைவிடப் படார்! எனவே கருணாவை நம்பு'! இதுதான் நான் உனக்குக்கூறும் அறிவுரை.

''என்னடா இவன்! நிலத்தை விற்பதற்கு யோசனை கேட்டால் ''கருணாவை நம்பினோர் கைவிடப் படார்!'' எனவே கருணாவை நம்பு! என்று எழுதுகிறானே! கருணா என்று யாரைக் கூறுகிறான்? நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களைக் கூறுகிறானோ? எனக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை கருணா நெல்லைப் பற்றிக் கூறுகின்றானோ? என்ற கேள்விகள் உன் மனத்தில் பிறக்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட கேள்விகள் உன் மனத்தில் தோன்ற வேண்டும் என்பதற்காகவே நான் இவ்வாறு எழுதினேன்.

கலைஞர் கருணாநிதி அவர்களையே நம்பு என்று கூறியுள்ளதாக நீ நினைத்துக் கொண்டாலும் சரி, அல்லது 'கருணா' நெல்லை நம்பு என்று கூறியுள்ளதாக நீ நினைத்துக் கொண்டாலும் சரி இரண்டு கருத்துமே பொருத்தமுடையவைதான்.

காலமெல்லாம் உழைத்து, உருக்குலைந்து, ஓடாகி, கூனி, குறுகிப்போன ஏழை உழவர்கள் ஏற்றமுற்று நிமிர்ந்து நடக்க வேண்டும்! குழி விழுந்து ஒளியிழந்துபோன ஏழை உழவர்களின் கண்களிலே ஒளி பிறக்க வேண்டும்! வயிற்றுக்கும் வாய்க்கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற ஏழை உழவர்களின் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும்! இருண்டு போன



கருணா

அவர்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் பிறக்க வேண்டும் என்பதற்காகத்தான் நமது தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். ஏழை உழவர்களின் வருவாயைப் பெருக்கிடவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் வேண்டிப் பல சலுகைகளையும், மானியங்களையும், கடனுதவிகளையும் அளித்து மிகு பயன் தரும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!"** என்ற பேரறிஞர் அண்ணாவின் இலட்சியம் நிறைவேற, சமுதாயத்தின் அடித்தளத்திலே மிதிபட்டு, நசுங்கி, நடைப்பிணமாக வாழ்ந்து வரும் எளிய மக்களின் வாழ்வை வளம்படுத்த வேண்டும் என்பதற்காகவே நமது கலைஞர் அவர்கள் அரும் பாடுபட்டு வருகிறார்.

நமது கலைஞர் அவர்களது அரும் முயற்சியால் பிச்சைக்காரர்களுக்கும், தொழுநோயாளிகளுக்கும் கூட மறுவாழ்வு பிறக்கப்போகிறது என்பதை நினைக்கும்போது, உணவு உற்பத்தியைப் பெருக்க ஓயாது உழைக்கும் உழவர் பெருமக்களின் வாழ்விலும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்கப் போகிறது என்பதில் ஐயம் வேண்டாம்.

காவிரி ஆறு அளித்த வீரமும் தீரமும் அன்று கரிகால் சோழனை காவிரி யாற்றுக்குக் கரையெடுக்க வைத்தது. அதே காவிரி ஆறு அளித்த வீரமும், தீரமும் இன்று நமது கலைஞரை காவிரியாற்றை நவீன மயமாக்கும் அரும் பெரும் முயற்சியில் ஈடுபட வைத்துள்ளது. இம் முயற்சி வெற்றி பெறப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை! விரைவிலேயே வரவிருக்கிறது! அதன்பின் தஞ்சை மாவட்டத்தில் முப்போகமும் தப்பாமல் சாகுபடி செய்ய முடியும்.

அப்பொழுது "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது" என்ற பழமொழி வழக்கொழிந்து போய்விடும்! "மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை!" என்ற புது மொழி நிலைத்து விடும்.

எனவே, காவிரியாற்று நீர் பாயும் நிலங் கொண்ட நீ 'கலைஞர் கருணாநிதி அவர்களை நம்பினோர் கைவிடப்படார்!' எனவே கருணாவை நம்பு!' என்றே நான் கூறியுள்ளதாகக் கருதிக்கொண்டாலும், அது சிறப்பான பொருத்த முடையதாகவே அமையும்.

அதுபோலவே, 'கருணா நெல்லை நம்பினோர் கைவிடப்படார்! எனவே, கருணாவை நம்பு!' என்றே நான் கூறியுள்ளதாக நீ நினைத்துக் கொண்டாலும் அதுவும் சிறப்பான பொருத்த முடையதாகவே இருக்கும்.

எவ்வாறு நம் கலைஞர் தன்னை நம்பிய தமிழ் நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறாரோ அதுபோலவே, கலைஞர் கருணாநிதி அவர்களது பெயரின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள 'கருணா' என்ற நெல்லும் உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கி வாழ்க்கையைச் செழிக்கச் செய்யும்.

சென்ற ஆண்டு ஆடுதுறை-27 நெல்லை 10 ஏக்கரில் பயிரிட்டிருந்ததாகவும், அது அறுவடை சமயத்திலே சாய்ந்து விழுந்து விட்டதாகவும், அப்பொழுது பெய்த மழையினால் கதிர்கள் நீரில் மூழ்கி மணிகள் முளைத்துப் பெருஞ் சேதம் ஏற்பட்டு விட்டதாகவும், அதற்குப் பிறகே, நிலத்தை விற்று விட்டுத் தஞ்சாவூர் சென்று வியாபாரம் அல்லது தொழிலில் இறங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டதாகவும் எழுதியுள்ளாய்.

"மூட்டைப் பூச்சிக்குப் பயந்து யாரோ ஒருவன் வீட்டையே கொளுத்தினானாம்" அதுபோல் உள்ளது உன்னுடைய முடிவு.

உன் முடிவை நீ முன்னால் தெரிவித்திருந்தால் நான் உனக்கு ஓர் அறை கொடுத்திருப்பேன். நல்லவேளை தப்பித்துக் கொண்டாய்!

நண்பன் தவறான பாதையில் செல்லுகிறான் என்றால் அவனை அடித்தாவது திருத்த வேண்டும் என்ற கொள்கையுடையவன் நான் என்பது உனக்குத் தெரியும். எனவே நான் இவ்வாறு எழுதுவதைத் தவறாக நினைக்க மாட்டாய் என நினைக்கிறேன்.

நண்பன் துன்பப்படும் பொழுது, அவன் துன்பத்தைத் துடைக்க வேண்டியது நல்ல நண்பனின் கடமையாகும். ஒருவனுடைய ஆடை அவிழ்ந்து விடும்போது, தானாகவே இயங்கி அந்த ஆடையைப் பற்றி இழுத்து மீண்டும் இடுப்பில் சரியாகக் கட்டுவதற்கு உதவும் கைகளைப் போல நட்பு இருக்க வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை நட்புக்கு இலக்கணம் வகுத்துள்ளார். அதையும் நான் மறந்து விடவில்லை. உன் இடுக்கண் துடைக்க என்னால் ஆன உதவிகளைச் செய்கின்றேன். உனக்கு உள்ள கடன் 1000 ரூபாயையும் அடைக்கப் பணம் கொடுத்து உதவுகின்றேன். ஆனால் நீ இரு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

"என்ன நிபந்தனையோ? தெரியவில்லையே! நிலத்தை எழுதிக் கேட்கிறானோ?" என்றெல்லாம் நீ நினைப்பது எனக்குத் தெரிகிறது.

பணத்திற்கு ஈடு கேட்கும் பண்பு கொண்டவனல்ல நான்; நான்



சொல்லும் நிபந்தனைகள் என்னவென்றால், ஒன்று—நிலத்தை விற்றுவிடக் கூடாது என்பது; மற்றொன்று— இந்த ஆண்டில் ஆடுதுறை-27 நெல்லுக்குப் பதில் 'கருணா' நெல் பயிரிட வேண்டும் என்பது.

இந்த நிபந்தனைகளை விதிப்பதற்குக் காரணம், நீயும் என்னைப்போல் முன்னேற வேண்டும் என்பதுதான். ஐந்து ஏக்கர் நிலமுடைய நான் சென்ற ஆண்டு குறுவைப் பட்டத்தில் 5 ஏக்கரிலும் கருணா நெல் பயிரிட்டு, அதன் பின் தாளடியில் ஐ.ஆர். 5 பயிரிட்டு அறுவடை செய்தபின், மக்காச் சோளம் பயிரிட்டு ஒரே ஆண்டில் ரூபாய் 15,000 லாபம் எடுத்துள்ளேன். அதிலிருந்து ரூபாய் 10,000 முன் பணம் கட்டித் தவணை முறையில் ஒரு டிராக்டரும் வாங்கியுள்ளேன். இன்னொரு வடிமுனைக் குழாய்க் கிணறும், அமைக்கத் திட்டமிட்டுள்ளேன். என்னைப் போல் நீயும் பாடுபட்டு முன்னுக்கு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே தான் இரு நிபந்தனைகள் விதித்து உள்ளேன்.

இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் உடனே பதில் எழுது. நான் பணத்துடன் அங்கு வந்து சேருகின்றேன். கருணா நெல்லின் சிறப்பு, சாகுபடி செய்யும் முறை ஆகியவைகளையும் கீழே எழுதியுள்ளேன். நீ படித்துப் பயனடைய வேண்டும்.




## கருணாவின் சிறப்புகள்

ஆடுதுறை-27-யும், ஐ.ஆர்.8-யும் கரு இணைப்புச் செய்து உருவாக்கப்பட்டதே 'கருணா'. கருணா பயிர் குட்டையானது; செங்குத்தானது; ஐ.ஆர்.-8 நெல்லைப்போன்றது.

சுமாரான தூர்கட்டும் திறனுடையது; வளரும் பயிரின் நிறம் நல்ல கரும்பச்சையாக இருக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர்-8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து என்ற விகிதத்திலும், ஆடுதுறை-27 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும், ஏக்கருக்கு 28 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து என்ற விகிதத்திலும் கருணா நெல்லிற்கு இரசாயன உரமிடலாம். இரண்டு அளவிலும் நல்ல மகசூல் கொடுக்கிறது.

மழையிலும் கருணா சாய்வதில்லை. கருணாவின் கதிர் ஆடுதுறை-27 போலவே தொங்கும்.

அரிசி வெண்மையாக இருக்கும்; நெல்லில் 72·6 சதம் அரிசி கிடைக்கும். கருணா அரிசியில் 10·58 சதம் புரதச் சத்து உள்ளது.

கருணா நெல் சாதாரணமாக ஏக்கருக்கு 2 டன் மகசூலுக்குக் குறையாமல் கொடுக்கும். ஆடுதுறை-27 நெல்லை விட ஏக்கருக்கு 600 கிலோ மகசூல் கூடுதலாகக் கிடைக்கும். ஐ.ஆர்-8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும் அளவில் இரசாயன உரமிட்டு, தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்கள் கூறிய முறைப்படி கருணா பயிரிட்டதில் எனக்கு ஏக்கருக்கு 3,400 கிலோ வீதம் மகசூல் கிடைத்துள்ளது.

**கருணா சாகுபடி குறிப்புகள் :**

**வயது**—108 நாட்கள்.

**விதைக்கும் பருவம்**—ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி மாதம் 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாளுக்குள்) நாற்று விடுவதே சிறந்தது. மழைக்கு முன் அறுவடை செய்ய ஆனி 16-ஆம் நாளுக்குள் (ஜூன் 30-க்குள்) நாற்று விட்டு விடுவது நல்லது.

**விதையளவு.**—ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதையை நாற்று விடவேண்டும்.

**விதையுடன் மருந்து கலக்குதல்.**—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கரிம பாதரசக் கலவை மருந்து (அக்ரசான் அல்லது செரசான்) வீதம் கலந்து, பின் விதைக்கவும்.

**நாற்றங்கால் தயாரித்தல்.**—ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். பன்னிரண்டு சென்ட் நிலப்பரப்புக்கு 2 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி தழை எரு இட வேண்டும். நாற்றங்காலை இருப்புக் கலப்பையால் நன்கு உழுது சேறுக்குவது நல்லது.

**பயிர்ப்பாதுகாப்பு.**—ஒரு ஏக்கருக்கு ஒரு தடவை மருந்து தெளிக்க பாரத்தியான் 200 மில்லி அல்லது என்ட்ரின் 400 மில்லி அல்லது பெனிட்ரோதியான் 250 மில்லி அல்லது பாஸ்பாமிடான் 110 மில்லி அல்லது என்டோசல்பான் 300 மில்லி பூச்சி கொல்லி மருந்தையும், சீராம் 200 கிராம் அல்லது டைத்தேன் இசட் 78-ல் 400 கிராம் அல்லது சினப் 400 கிராம் பூஞ்சாள மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையினால் இயக்கும் தெளிப்பானால் தெளிக்கலாம்.

இதுவரை கூறப்பட்டு வந்த நல்ல முறைகளை மேற்கொண்டு சாகுபடி செய்தால் நீயும் என்னைப்போல் ஏக்கருக்கு 3,400 கிலோ மகசூல் எடுக்க முடியும் என்பது திண்ணம். எனவே தயவுசெய்து நிலத்தை விற்கும் நினைவை விடு! ''கருணாவை நம்பினோர் கைவிடப்படார்! கருணாவை நம்பு!''

உன் அன்பு,

மாணிக்கம்.

# மாஷேடி புல் பூண்டுகளை முளைக்கும் முன்னரே அழித்து விடுகிறது




## உங்கள் நெல்விளைச்சலையும் இலாபத்தையும் பெருக்குகிறது!




இனிமேல் அகன்ற இலையுடைய களைகள் மற்றும் புல் வகைகள் உங்கள் பயிர்களுடன் போட்டியிட்டு, பூச்சிகளுக்குப் புகலிடம் தந்து உங்கள் நெல் விளைச்சலைப் பாதிக்காது. மான்ஸான்டோவின் மாஷேடி முளைக்கும் முன்னரே களைகளை அழிக்கும் ஒரு நவீன களைக் கொல்லி, அவைகளை வேரூன்று முன்னரே அழித்துவிடும். உரம், சூரிய வெளிச்சம், ஈரம், பயிருக்கே சேருவதால் உங்கள் நெற்பயிர் மிகப் பெருமளவு பயனடையும். அமோக விளைச்சல்-அபார இலாபம்!

**50% ஈஸி மற்றும் 10% குருணையாகவும் கிடைக்கிறது.**

**களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்**

# மாஷேடி

ஹெர்பிஸைடு தயாரிப்பாளர் **Monsanto.** மான்ஸான்டோ

மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட்
தலைமையகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ்,
11, ஸ்ப்ராட் ரோடு, பாலர்டு
எஸ்டேட், பம்பாய்-1. கிளைகள் புதுதில்லி, கல்கத்தா, சென்னை.

MC.G.16 TM

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்-அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட் உபயோகிப்பது.

# வெண்பாப் போட்டி

## 10. ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு !

● வங்கத்தின் சிங்கம் வலிமை ரகுமானார்
தங்கச் சுதந்திரத்தைத் தாவென்றார்—அங்கவர்கள்
ஆறெனப் பாய்ச்சும் குருதியே யாகியாவுக் (கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—பி. எம். பக்கீர் முகம்மது, திருநெல்வேலி-5

எப்பாலார் வாழ்வுக்கும் ஏற்ற வழிவகைகள்
முப்பாலால் சொன்னானே மூதறிஞன்—அப்புலவன்
கூறிய செந்நா கொடுத்த திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வாவாசியண்ணன், திருப்பனந்தாள்.

அண்ணா அறிஞர் அருந்தமிழில் வரைந்திட்ட
பண்ணொழுகும் நூல்கள் பலகாலம்—எண்ணியெண்ணி
ஏறுபோல் நம்தமிழர் எழுந்துநம்மை நாமாள
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சோம. சிவப்பிரகாசம், நாச்சியாபுரம்.

நெஞ்சத்தைப் பண்டுத்தி நேர்மை வழிசென்று
வஞ்சமற்று வாழ மறுப்பதேன் ?—நஞ்சுணர்வால்
வேறுபட்டு மாய்கின்றார் வெற்றுக்கோ மானிடர்க்கே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

செந்தமிழில் வள்ளுவனார் செய்த திருக்குறளை
இந்தமண்ணில் வாழ்மக்கள் எல்லார்க்கும்—சொந்தமெனக்
கூறற்குக் காரணம் கூர்ந்தாய்வோர் காண்பரே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ஐ. அப்துல்காதர், எருமப்பட்டி.

சொல்வளமும் ஆய்வதற்குச் சோராப் பொருள்வளமும்
பல்வளமும் உண்டாக்கும் பார்தனிலே—இல்லாத
வேறறிவை இங்கே விளம்புவதேன் கல்விதான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

வள்ளுவரின் நேரியநல் வண்குறளும், ராமலிங்க
வள்ளல் அருட்பாவின் வாய்மொழியும்—அள்ளுசுவை
ஊறுமணி வாசகமும் உற்றதிரு மந்திரமும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

சித்தர் பதினெண்மர் சீர்திருத்த நோக்குடைய
புத்தர் குறள்சோதி பூங்குன்றன்—தத்துவத்தைக்
கூறும் பெரியாரின் அண்ணாவின் கொள்கையெல்லாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ப. நாரண துரைக்கண்ணன், விழுப்புரம்.

ஏழ்மை நிலையினரும் ஏற்றநிறை கல்விபெறும்
வாழ்வை வளர்த்துயர்த்தும் வாழைதான்!—தாழ்வுணர் வாய்த்
தேறிநின்ற எத்தரைத் தீய்த்ததமிழ் நல்லரசே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு !

—எழிற்கோவன், ஒசூர்.

எங்கும் புகழ்மணக்கும் ஏற்றமிகு செந்தமிழின்
சங்க இலக்கியங்கள் தாமென்றும்—செங்கதிர்போல்
மாறா இருளகற்றும் மாந்தரினை வாழவைக்கும் !
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, சென்னை-8.

பெரியாரின் பேச்சுயர்வும், பேரறிஞர் அண்ணா
நெறிமாறாச் சொல்லும், நினைவும்,—அறிவான்றோர்
பாரறியப் போற்றும் பசுந்தமிழர் ஆட்சியுந்தான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ந. விசுவநாதன், திருச்சி-1.

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு பி. எம். பக்கீர் முகம்மது,
35, சின்னத் தெரு, மேலப்பாளையம்,
திருநெல்வேலி—5.

வீறுகொண்டு வென்றிகண்ட வீரத்தமிழ் மரபின்
பேறுபெற்ற பொய்யா மொழிப்புலவன்—ஊறின்றிக்
கூறுகின்ற பைந்தமிழ்தான் கூறலாம் இவ்வுலகில்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு

—செள. மதார் மைதீன், பொட்டல்புதூர்.

அப்பா ! மகனே ! அறம்பொருளின் பங்கூறும்
முப்பாலே என்றும் மொழிந்திடுவாய் !—ஒப்பேதும்
கூற இயலாக் குறள்தாமே என்றென்றும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—நெல்லை. ஆ. கணபதி, சென்னை-15.

தெய்வத் திருமறையாம் தேனூர் அருமொழியாம்
வையம் புகழும் வழிமுறையாம்—மென்மைநிதம்
ஊறுகின்ற ஊற்றாம் திருக்குறளே நம்மவர்க்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—செந்தமிழ் சிற்பி, சென்னை-5.

பத்தெட்டு மேல்கீழும் பாங்குடைய காப்பியமும்
முத்தென்ன ஆன்றோர்கள் முன்னூலும்—சத்தென்ன
நேரறிந்த சொற்களுடன் நேர்மையுமோர் வாய்மொழியும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சடையப்பன், திருவெண்ணெய் நல்லூர்.

இத்தரையில் எத்தனையோ முத்தமிழ்ப் புத்தகங்கள்
கொத்தாகப் பூத்துக் குவிந்தாலும்—முத்தமிழ்த்
தேறலாம், வள்ளுவரின் தெய்வத் திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—தொ. வளவன், புதுக்குளம்.

பொய்யென்னும் தீயில் புரளல் ; பிறர்க்கின்னா
செய்யல் ; முடங்கல் ; சினங்கொள்ளல்,—கைநீளல் ;
வேறொருவர் இல்லாளை வெஃகல் ; இவைதானா
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு ?

—விசாலாட்சி, மதுரை-11.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடிகண் உள்ளவென வள்ளுவர்செய்—தண்டமிழே
வேறறிவு கொள்ள வெளிநாடு செல்வோர்க்கும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர். சோ. பா. வேதாரண்யம்.

சிந்தனையை ஊக்கிச் செயற்றிறத்தை உண்டாக்கும்
நந்தமிழில் நற்றெளிவும் நற்பண்பும்—விந்தைமிகு
பேரறிவை மாந்தர் பெறுகின்ற கல்வியொன்றே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர். ந. அ. அண்ணாமலை, நத்தம்.

கற்றலும் காண்டலும் கேட்டலும் கற்றபடி
நிற்றலும் நெஞ்சத் துணிவிலும்—சுற்றமெனக்
கூறறிவைக் கொள்ளுதலும் கொண்டால் இவையென்றும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு.

போர்அறிவு காட்டும் புறப்பாட்டு ! நல்லறச்
சீர்காட்டும் தேன்குறள்! சங்கத்தின்—பேர்புகழைக்
கூறிய பேரறிஞர், கொள்கைக்'கோ' நம்அண்ணா
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. சி. மணியன், அம்மையப்பன்.

நன்றி மறவாமல் நன்றல்ல தெண்ணாமை(ல்)
அன்பின் குழவி அருள்நயந்தே—ஒன்னாரு
மாறுவணம் வாழ்ந்தார்சொல் மாண்பிலரை முன்னேற்று
மாறறி(வு) ஊட்டுகின்ற ஆறு.

—எழில்மாறன், நரிக்கல்பட்டி.

மலைபோல் மனம்படைத்த மாந்தராய் மாறிக்
கொலைகளவு செய்தாலும் ஓர்நாள்—நிலைகலங்க
ஆறாத் துயரால் அவர்நெஞ்சம் வாட்டுமதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெண்ணிகர், புதுவை.

பேருலகில் நந்தமிழைப் பெற்றியுறச் செய்திடவே
கூரறிவு சான்ற குணக்குன்றாம்—பேரறிஞர்
கூறியதோர் நல்வழியே, கொள்கை நலஞ்சேர்ந்த
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சி. இரத்தினவேலனார், சென்னை-19.

நமக்குத் தொழில்நா நிலம்போற்றும் ஆட்சி
சுமக்கும் பழியோதான் சொல்லில்—எமக்கேதான்
வேறு வினையிலையோ என்னாது காப்பதுவே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெ. கிருட்டிணமூர்த்தி, சிவகாசி.

மண்புகழ வாழ்ந்து மறைந்ததமிழ் மாமேதை
அண்ணாவின் நூல்கள் அனைத்துமே—தண்டமிழ்த்
தேறல் அருவியெனச் செப்பிடுவர் ; ஆயினவை
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—இமஹூப் ஜான், எருமப்பட்டி.

இல்லையென்ற சொல்லே இலையாக்கி இவ்வுலகில்
எல்லாரும் எல்லாமும் பெற்றிடவே—பல்வள
ஆறதனை இந்நிலத்தில் ஓடச்செய் ! அஃதன்றோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. சுந்தரேசன், கண்ணமங்கலம்.

நாடா வளம்பெருக்கி நம்நாட்டை மேல்நாட்டார்
தேடும் பொருளாக்கித் தேசமெல்லாம்—நாடிடவே
மாறுக் கலையுணர்வை மக்களிடம் தூண்டுவதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ச. வீரப்பன், போதுபட்டி.

எல்லா உயிரினும் ஏற்றமுற்று மக்களுயிர்
நல்வாழ்வு வாழ்வதுவும் நானிலத்தே—கல்வியினால்
ஆறறிந்து விண்ணேகி அம்புலியை ஆய்வதுவும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—பெ. அண்ணாமலை, சென்னை-1.

புத்தொளிர் விஞ்ஞானம் பூத்துள்ள பூமலர்கள்
மெத்த விளையுதுபார் மேல்நாட்டில்—இத்தனையும்
தேறிடவே நம்முடைய தேமதுரத் தமிழன்றோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—முல்லைதாசன், சின்னாளப்பட்டி.

விண்வெளியை ஆளுவதும் வெண்மதியைக் கிட்டுவதும்
எண்ணரிய முன்னேற்றம் எய்துவதும்-தண்டமிழா !
தேறரிய தெய்வச் செயலன்று தேறுகநீ.
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

குடும்ப நலம்பேணிக் கொஞ்சுதமிழ் காத்து
வடுவில்லாப் பண்போடு வாழ்ந்து—கடுகியே
ஆறறியா மக்கட்கும் ஆறமைத்து வாழ்தலேநம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வித்துவான் மு. சன்னாசி, ஆத்தூர்.

எந்நாளுந் தில்லியுடன் இன்னுற வேநிலவத்
தன்னாட்சி கோரும் தமிழ்நாட்டா—ரின்குரலைக்
கூறறிந்து கூறுகின்ற கொள்கைக் கலைஞரே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—குழ. அண்ணாமலை, கோவை.

எல்லாரும் இன்பங்கள் ஏற்றுநனி துய்த்தற்குப்
பல்வளங்கள் காணுதற்குப் பாடுபட்டார்—நல்லறங்கள்
கூறியிங்(கு) ஆளவந்தார் கொண்ட திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வ. இராசசேகரன், பி.ஏ., சென்னை-7.

இத்தமிழ் நாட்டில் இனியதமிழ் கற்பவர்க்கே
எத்துணையோ நன்மைகள் ஏற்படுமே—சத்தியத்தில்
மாறியே செல்லாமல் மாண்புயர்த்தும் நந்தமிழே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

முத்தமிழோ முக்கனியின் சாறு ; குறளதில்
தித்திக்கும் தேனுறு ; தேனூற்றில்—நித்தமும்
முத்தெடுக்கும் நற்பேறு வேறெது! முப்பாலே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—மு. பூங்கோவன், சென்னை-1.

சந்திரனில் கால்வைத்தும் ; சாவிக்குப் பொட்டுவைக்கும்
விந்தை மனிதரை யென்செயலாம் ?—எந்தமிழா
மாறிவரும் மன்பதையில் விஞ்ஞானம் ஒன்றேதான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சோலை. இளம்பரிதி, செயாறு.

திக்கனைத்தும் ஏவல்செயும் செல்வர்களும் சீர்நிலையைத்
தக்ககல்வி ஒன்றாலே தானடைவர்—மக்களெல்லாம்
தேறுதற்கு ஏற்ற தெளிநூல்கள் கற்கஅஃதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—எம். முருகவேள், கவரப்பட்டு.

அள்ளுதொறும் அள்ளுதொறும் ஆவல் மிகுந்தெழத்
தெள்ளுதமி ழால்வடித்துத் தந்ததிரு—வள்ளுவனின்
பேரறிவுப் பெட்டகமாய்ப் பேணும் திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—கு. பிரான்சிஸ், சென்னை-11.

அண்ணல் மகாத்மா அளித்த அறிவுரையும்
அண்ணன் அறிஞனவன் அந்நாளில்—மண்வாழ
ஆறுதனின் ஓட்டமெனத் தந்த தமிழுரையும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—செ. சுந்தரவதனம், சென்னை-35.

அன்பின் திருவுருவே ! ஆழ்ந்தகன்ற பேரொளியே !
என்பும் பிறர்க்களிக்கும் எம்தலைவா—மன்னுபுகழ்ப்
பேறுபெற்ற பொன்னாட்டின் பேரறிஞர் அண்ணா நீ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் ப. பெருமாள் பெங்களூர்-17.

யாரென்ன சொன்னாலும் யாரென்று பாராமல்
சீரிருப்பின் கொள்ளும் சிறப்பதுவும்—ஆர்வமுறக்
கூறும் கருத்துக்களைக் கூர்த்தமதி ஆய்வதுவும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

நூலெல்லாம் நூலல்ல ; நுண்புலனால் வான்குறளை
நாளெல்லாம் ஆராய்ந்து நன்குணர்ந்து—காலமெல்லாம்
மாறா(து); அதன்வழியாய்ச் செல்லுதலே கல்வியாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு .

—இரா. தியாகராசன், பனையடிங்க குத்தகை.

காரிருளை நீக்கிக் களிப்பு தனையாக்கிப்
பாரினிலே நன்மை பரப்பிடவே—சீரணியின்
மாறெதுவு மில்லா வகையான நற்றொண்டும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—து. சுப்பராயலு, பி. ஏ., பெரியகுளம்.

தமிழ்த்தாயின் மூத்தமகன் தம்பியர்கள் கோடி
இமிழ்கடல்சூழ் நல்லுலகே ஏத்த—தமிழினிய
ஆறறிவும் ஒருருவாய் ஆனஅண்ணா சொல்லெல்லாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—என். சி. கிருஷ்ணசாமி, பொன்மலை·

நெஞ்சைப் பிளக்கின்ற நீள்வறுமைத் துன்பத்தில்
பஞ்சையாய் வாடிடுவோர் பாடகற்றி—அஞ்சலென
வீறுடனே காக்கின்ற மேன்மையுறு பண்பொருவர்க்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ஜி. வி. அர்த்தநாரி, வேலூர்.

பழமையெனும் சேற்றில் படுத்துப் புரண்டே
வடிவிழந்த வாழ்வில் வழுக்கிக்—குழைந்துநிதம்
ஊறித் திளைத்தல் ஒழிக்கும் முதல்வர்சொல்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—கா. நாகேஸ்வரன், திருத்தணி.

அண்ணல்நம் காந்தி அறவழியைப் பின்பற்றி
கண்ணியமாய்த் தன்கடமை தாமாற்றி—விண்ணடைந்த
பேரறிஞர் அண்ணாவின் பேரரசே மக்களுக்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வை. நடராசன், திருமலைராயன்பட்டி.

மக்களையே காணாமல் வாழ்ந்தவனைப் பேசென்றால்
விக்கலலால் வேறென் விளம்புவான்—மிக்குயர்ந்த
ஆறறிந்து மக்களொடு வாழுமுறை கூறுவதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு .

—பாளை. மி. நோயல். நெல்லை-2.

அறிவியல் நூலும் ; அறநெறியும் ; நெஞ்சில்
குறட்கருத்தும் நீங்காது கொண்டு ;—பிறர்போற்றும்
பேறுபல காணப் பகுத்தறியும் நன்னூலும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

மண்ணிலே வாழ்பவர் மாய்வதைக் கண்டவன்
விண்ணிலே தங்க விரும்பினான்—எண்ணியதை
வேறறிவால் பெற்றதல்ல விஞ்ஞானம் என்பதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி
நல்லறிவு பெற்றிருந்த நற்றமிழில்—வல்லோர்கள்
தேறிய நூல்களில் தீந்தமிழ்க் காப்பியமே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—இரா. தேன்மொழியான், தாராபுரம்.

மதியால் மதிமிதித்த மாந்தரிங்குத் தீய
சதிபுரிந்து போரிட்டுஞ் சாவார்—அதற்கேதோ
கூறிடுவார் சாக்குகளும் கூச்சமின்றி ; ஈண்டிதுவோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு ?

—தமிழ்க்கிரன், தர்மபுரி.

# மாணவர் அரங்கம்

# அந்த நாள் வருமோ?



தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் வங்கக் கடலோரம் அமைந்துள்ளது அதிராம்பட்டினம். 'எம்மதமும் சம்மதமே' என்னும் முதுமொழிக்கேற்ப அவ்வூரில் எல்லாச் சமயத்தவர்களும் வாழ்கின்றனர். அவர்கள் கல்வியறிவில் சிறப்புற வேண்டி, காதிர்மொகைதீன் என்னும் நல்லார் ஒருவர் தன் நினைவில் ஒரு கல்லூரியினை நிறுவியுள்ளார். அதன் தோற்றப் பொலிவும், அமைந்துள்ள இடமும் தென்றல் வீசும் சரித்திரப் புகழ் வாய்ந்தவை. அதில் பயிலும் மாணவர்களும், பயிற்சிதரும் ஆசிரியர்களும் தமிழ் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களைச் சேர்ந்தவர்கள். எனவே பல்வேறுபட்ட செய்திகளையும், கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும் அங்கு ஒருமித்த முறையில் பெற இயலுகின்றது. எனவே வந்தோரை வாழவைக்கும் அக்கல்லூரியினை மறத்தல் இயலாத செயலாகும்.


இவ்விதச் சிறப்புகளையும் பெற்ற அக்கல்லூரியில் பயிலும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. அந்த நாள் முதல் என் கல்லூரி வாழ்க்கையும் தொடங்கியது. அன்றொருநாள் என் பொருளாதாரப் பேராசிரியர் என் பிரிவு மாணவர்கள் அனைவரையும் மறுநாள் காலை ஏழு மணிக்குக் கல்லூரிக்கு வரும்படி பணித்தார். நாங்களும் காரணத்தை வினவினோம். அவரும், அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களுக்கு நவீனச் சாகுபடி முறையினைப் புகட்டியும், பொருளாதாரப் புள்ளி விவரங்களையும் ( Socio--Economic Survey ) சேகரித்து வர வேண்டும் என்றார்.

அவ்வாறே நாங்கள் அனைவரும் மறுநாள் கிளம்பி, அருகிலுள்ள கிராமத்தினை அடைந்தோம். பின், மக்களைக் காண வேண்டி, எங்களுக்குள் சில பிரிவுகளாகப் பிரிந்து சென்றோம். அங்கு வாழ் பாமர மக்களில் பலர், எங்களைக்கண்டு அஞ்சி மறைந்துவிட்டனர். சிலர் ஓடி விட்டனர். ஒரு சிலரே ஊரில் மிஞ்சினர். அவர்களிடம் அதன் காரணத்தை வினவியபோது, எங்களை அரசாங்க அலுவலர்கள் என்றும், நெல் கொள்முதல் செய்ய வந்துள்ளனர் என்றும் அவர்கள் நினைத்து அவ்வாறு செய்தனர் என்று கூறினர். பல தாய்மார்கள் தம் குடும்ப அங்கத்தினர்களின் எண்ணிக்கையினைக் கூடச் சரியானபடி கூறவில்லை. அங்குள்ளோரின் வருட வருமானம், செலவு ஆகியவற்றைக் கேட்டபோது எல்லோரும் கடனாளியே என்றும் கூறினர்.

பின் நாங்களும் வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டு, அவர்களின் தேவையினையும், குடும்பக் கட்டுப்பாடு, நவீன சாகுபடி, நவீன உரமிடுதல், முறைகளை அவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டு மகிழ்வுடன் வீடு திரும்பிய அந்த நாள் மீண்டும் வந்திடாதோ!

—மு. கிருட்டிணன்


3
6
1971
49
பிச்சைக்காரர்
மறுவாழ்வு
பிறந்தநாள்
பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்
முதல்வரை இல்லத்தில்
வாழ்த்த வந்தோர்
பணம் தந்து மாலையிட்டனர்
ஆளுநர்
இல்லம் நாடி வந்த சின்னஞ்
சிறு கடைக்காரர்களிடம்
முதல்வர் துண்டு ஏந்திப்
பணம் பெற்றார்.



பிச்சைக்காரர் நல் வாழ்வு நிதிக்காக பரிசுச் சீட்டு கிடைக்கும்
பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி திரட்டும் திட்டத் தினைத் துவக்கி வைத்தார்.
பிச்சைக்காரர் நல் வாழ்வு நிதி அட்டைகள் கிடைக்கும்.
சென்னை மாநகர ஷெரீப், மேயர் ஆகியோரடங்கிய நகர மக்கள் குழுவினர் தனக்கு வழங்கிய 1 லட்ச ரூபாயை முதல்வர், பிச்சைக் காரர் மறுவாழ்வு நிதியில் சேர்த்துக் கொண்டார்.
கலைஞர் வாழ்க!
உங்கள் வாழ்வு மலர இதோ 5 லட்சம்!
5 லட்ச ரூபாய்
முதல்வர் பிறந்த நாளான 3-6-71 அன்று ஒருநாளில் மட்டும் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு ஏறத்தாழ 5 லட்ச ரூபாய் கிட்டியது.
"இன்னும் 5 ஆண்டுகளில் தமிழகத்தில் பிச்சைக் காரர்களே இல்லையெனும் நிலையினை ஏற்படுத்துவோம்" என முதல்வர் சூளுரைத்தார்.

# பார்த்தோம் படித்தோம்



### பயண இலக்கியம்

அயல்நாடான நெதர்லாந்து நாட்டுக்குள் நீலக்கடல் புகுந்து அதை விழுங்கிய செய்தியை, தமிழகத்தை முன்பொருமுறை இமிழ்கடல் இரையாக்கிக் கொண்ட செய்தியுடன் இணைத்து எழுதியிருக்கும் முதல்வரின் பயணக்கட்டுரையில் இலக்கிய மணம் கமழ்கிறது.

—எஸ். சுப்பையா, மதுரை.

### ஒருமைப்பாட்டு உண(ர்)வோ?

தமிழரசு இதழில் கலைஞர் அவர்களுடைய படமும், ''சிற்றூர்'' கவிதையும் பார்த்தும், படித்தும் ரசித்தேன். ஆனால் ''மகளிர் பகுதி''யில் சமையல் குறிப்பு பற்றித்தரப்படுகின்ற விவரங்களை நான் தவறாமல் ஒவ்வொரு இதழிலும் கண்டு வருகின்றேன். அவை ஒரே வடநாட்டு உணவுப் பொருள்களாகவே காட்சி அளிக்கின்றன. இனி வரும் இதழ்களில் தமிழ் நாட்டின் வழக்கில் உள்ள சில உணவுப் பொருள்பற்றி வெளியிடுமாறு மகளிர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

–எல். மங்கள குமாரி, எம்.எஸ்ஸி. சென்னை-33.

### அன்னையர் முன்னேற்றம்!

குடும்பநலப் பிரச்சாரம் மாபெரும் வெற்றியை எட்டிப் பிடித்திருக்கிறது என்னும் செய்தியை ''சிகிச்சையின்றித் திரும்பிச் செல்லோம்'' என்ற கட்டுரை தெரிவித்திருக்கிறது. அன்னைக்குலம் இந்தக் காலத்தில் வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைக் கட்டுரை தெரிவிக்கிறது

—கே. ஜெயராமன், தர்மபுரி.

### கோரிக்கையை நிறைவேற்றுக!

'தமிழரசு' வெண்பாப் போட்டியினைத் தொடங்கியது, என் போன்ற இளங்கவிஞர்களை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் என்று நான் கருதுகிறேன். எத்தனையோ கவிஞர்கள் தங்களுடைய வெண்பாக்கள் இடம்பெற வில்லையே என்ற ஏக்கத்தால் எத்தனையோ கடிதங்கள் ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறார்கள். நானே நான்காவது தடவையாக இக்கடிதத்தை எழுதுகிறேன். எங்கள் கோரிக்கை—வெண்பாப் போட்டிக்கு அதிகப் பக்கங்கள் ஒதுக்க வேண்டுமென்பதே! எங்களின் கோரிக்கையினை விரைவில் நிறைவேற்றி வைப்பீர்களா?

—புலவர் சீராமுலு, காரைக்கால்

### ஆயிரமும லட்சமும்

'நமது நிலை'—இலவச இணைப்பைத் தந்திருக்கும் தமிழரசுக்கு ஆயிரக் கணக்கில் நன்றி தெரிவிக்கலாம் என்றுதான் தோன்றுகிறது. இத்தகைய இணைப்பை ஒவ்வொரு இதழிலும் கொடுத்தால் லட்சக் கணக்கில் நன்றி தெரிவிப்போம்.

—ஏ. ஆர். சீதாபதி, தென்காசி.

### சிற்றூருக்குப் பாராட்டு

சிற்றூரை நேரில் சென்று பார்ப்பது போன்ற உணர்வே ஏற்பட்டது, அந்தக் கவிதையைப் படிக்கும்போது! வாழ்க சிற்றூர்.

—எம். மோகன சுந்தரம், திருப்பூர்.

### பாராட்ட அறியோம்!

கிராம மக்களின் நல்வாழ்விற்காக நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்தி, கிராம மக்களுக்கு வேண்டிய பல சிகிச்சைகளைச் சீரிய முறையில் அரசு செய்து வருகிறது என்பதை 'மக்களை நாடி வரும் மருத்துவமனை' என்ற கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. ஏழை கிராம மக்களுக்கு உதவுவது மட்டுமல்லாமல், மருத்துவக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கும், இளம் மருத்துவர்களுக்கும் கிராம மக்களைப் பற்றியும், கிராமச் சூழ்நிலைகளைப் பற்றியும் இத்திட்டம் விளக்குகிறது. மருத்துவ வசதி அளிப்பது மட்டுமின்றி, பொதுச்சுகாதாரம், தொற்றுநோய்களைத் தடுக்கும் முறை போன்றவற்றையும் இத்திட்டம் காட்டுகிறது. ஏழை கிராம மக்களுக்குச் சேவை செய்து வரும் இந்த அரசின் திட்டத்தினை எப்படிப் பாராட்டுவது என எனக்குத் தோன்றவில்லை.

—என். அப்பர்சுந்தரம், கிளியூர்

### குறுமிளகின் பெரும்புகழ்!

நாகை மருத்துவர் நாராயணசாமி தம்முடைய ''ஐந்தறைப் பெட்டியில் அருமை அமிழ்தம்'' என்ற கட்டுரையில் மிளகைப் பற்றியும், அதன் வகைகள், உபயோகம் போன்றவைகளைப் பற்றியும், பலநோய்களுக்கு அது அளிக்கின்ற சிகிச்சையினையும் வாசகர்களுக்கு எளியமுறையில் விளக்கியிருக்கிறார். மருத்துவருக்கு வாசகர்கள் சார்பில் என் நன்றி.


—எஸ். நடராசன், சீர்கா

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

தமிழ்நாட்டுக்கு


# மாநிலத் திட்டக்குழு

நம் நல்வாழ்வுக்காக நம் தேவைகளை உணர்ந்து, உணர்த்திட இந்தியாவிலேயே முதன்முறையாக **மாநிலத் திட்டக்குழு** அமைக்கப்பட்டுள்ளது.



ஆக்கப் பணிகளின் முழு வெற்றிக்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டாமா?

**நம் ஒத்துழைப்பைக் காட்டும் ஒரேவழி-**



## திட்டமிட்ட அளவான குடும்பம்

அதுவே

நாட்டுக்கும் நல்லது!
வீட்டுக்கும் நல்லது!!



வெளியீடு: இயக்குநர்: சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து



# பிச்சைக்காரர்

## மறுவாழ்வு நிதிக்காக

## தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும் ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை :

## 38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்

ஜூன் 3ல் முதல்வர் பிறந்த நாளில் 33-வது குலுக்கல் துவக்கம்

சிறப்புப் பரிசுகள் : ஒரு முதற் பரிசு 10 லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய் • ஒரு மூன்றாவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்



| | | | |
|---|---|---|---|
| 100 | பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | 5000 | ரூபாய் |
| 100 | பேருக்கு ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | 3000 | ரூபாய் |
| 100 | பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | 2000 | ரூபாய் |
| 1000 | பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | 1000 | ரூபாய் |
| 2000 | பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | 100 | ரூபாய் |

**துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-1971**

*இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை : 245*

## வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு : இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியீட்டுக்குட்பட்டது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2

10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய்